*விலை 30/-*

Muhavary.com

ISSN: 2478-0766



# புதிய முகவரி

**PUTHIYA MUHAVARY**

மாதாந்த சஞ்சிகை | எண் 19 | பாதை 1 ஆனி 2016





இலங்கை வேந்தன்
கலைக் கல்லூரி
அரங்கேற்றம். கூட்டம்.
ஒன்றுகூடல். திருமணம்.
பூப்புனித நீராட்டு விழா.
பிறந்தநாள் கொண்டாட்டம்
மற்றும் பொது வைபவங்களுக்கும்
உங்கள் வசதிக்கேற்ப
மண்டப ஒழுங்கு செய்து தரப்படும்
0777549803
63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.


முற்போக்கான – சமூகம் சார்ந்த – பகுத்தறிவுள்ள
நூல்களை வாங்கவும் – இரவல் எடுத்துப் படிக்கவும்
ஒரு நூலகம்
படிப்பகம் புத்தகக் கடை
தொலைபேசி எண்: 021 221 7926
411, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
facebook: padippakam book
www.padippakam.com


ROOMS
AVAILABLE NOW
Sivahamy
ILLAM
With
attached bathrooms...
Near Thirunelveli Junction.
Mobile: 077 386 7458


ஆறுமுகம்
சிற்பாலயம்
காளி கோயிலடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
077 44 68787


ERIC GANESH
OPTICALS
Branches:
107, K.K.S Road, Chunnakam.
021 224 0255
K.K.S. Road, Kokkuvil.
021 222 5233
Head office:
566, Hospital Road, Jaffna.
021 222 2486


TILKO Holidays
Tilko
Jaffna City Hotel
Luxurious Rooms, Banquering Hall, Conference Hall,
Restaurant / Bar, Swimming Pool, Gym / Spa
& Beauty Saloon
No:70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 2225969, Fax: 021 2227291, Mobile: 077 9944439
e-mail: info@cityhoteljaffna.com
web: cityhoteljaffna.com

புதிய
**முகவரி**
PUTHIYA MUHAVARY

**Editor in Chief**
A.Vijayakrishnan

**Editor**
V.Jeyaratnam

**Advisory Board**
Dr.V.Ameerdeen
Mr.A.Panchalingam
Mr.A.Sathyamoorthy
Dr.(Mrs)S.Thirumagal
Dr.S.Nanthakumar
Prof.V.P.Sivanathan

**Bureau Chief**
S.P.Bala

**Advertisements**
R.Achuthapakan

**Layout & Design**
Mrs. S.Mariyaseeli

**Contact**
Canadian Academy of Professional Studies (CAPS)
52, Palaly Road,
Thirunelvely,
Jaffna.
Sri Lanka.
E.Mail: spbmukunthan@gmail.com
Tel : 021 205 2240
Fax : 021 205 2240
Web:

The **Puthiya Muhavary** an Entertainment Magazine is being published by us as Fortnight Magazine. Actually the Object of the magazine is to uplift knowledge of the Tamil People. (Students, Youth, Women and Elders) The Contents of the Magazine are Culture, Fine arts, History, Political, Agriculture, Fisheries, New Technologies and uplifting the relations between Tamil and Sinhala people, Based on Languages, Culture, Religion and other mutual understandings.

The Opinions and views Expressed in this Magazine is those of the author and not of the Publisher. Advertisers are completely responsible for the contents of the advertisement and **Puthiya Muhavary** Reserves the right to refuse to publish any article or advertisement considered unsuitable for publication. All rights reserved and the contents may be reproduced with written permission from the publisher, In Spite of the author's Professional capacity no contents of **Puthiya Muhavary** Should be considered as Professional advice. Neither the Publisher nor **Puthiya Muhavary** is responsible for any claims or action damage that the reader may have through reliance on the contents of the magazine including advertisement.

# எங்கே தவறு?

2009 மே மாத போரில் தோற்றது புலிகள் மட்டுமல்ல நாமும் தான் என்ற உணர்வலைகள் தமிழ்மக்களின் மனங்களிலிருந்து அகற்றும் சகோரத்துவ செயற்பாடுகளை மஹிந்த கூட்டமைப்போ அல்லது மைத்திரி நல்லாட்சியோ செய்யவில்லை. **இதனை செய்து முடிப்பதற்கான இராஜதந்திர -செயற்பாடுகளை சம்பந தன் ஐயாவாலோ முதலமைச்சர் விக்னேஸ்வரனாலோ செய்ய முடியவில்லை அல்லது இதற்கான தி-றமை இவர்களிடம் இருப்பதாகவும் தெரியவில்லை.** மேலும் மஹிந்தவுடன் சேர்ந்து இணக்க அரசியல் நடாத்தியவர்கள் கூட மைத்திரியுடன் இணைய வாய்ப்பை பெற ஆவலாக இருக்கின்றார்களேதவிர, அதற்கப்பால் பரந்துபட்ட சிந்தனை சார்ந்த தலைமையை ஏற்படுத்த தயங்கிநிற்கின்றார்கள்.

2013 செப்டெம்பர் மாகாணசபை அமைக்கப்பட்டு அதில் 2/3 பெரும்பாண்மையுடன் விக்கினேஸ்வரன் தலைமையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆட்சி புரிந்து வருகின்ற போதும்உருப்படியான வேலைகளை செய்ய நடுவண் அரசும் கூட்டமைப்பில் இருக்கும் சில உறுப்பினர்களும் வழிவிடுகிறார்கள் இல்லை. இருக்கின்ற அதிகாரங்களை பயன்படுத்தி பலமான கட்டமைப்புக்களை உருவாக்க எமக்குள்ளேயே பலப்பரீட்சை அந்த வகையிலே பொருளாதார மையத்தை தெரிவு செய்தல், இரணைமடு நீர் தொடர்பான பிரச்சினை என்பன இழுபறியில் உள்ளது. **நம்மையே நாம் ஆள, நானா? நீயா? என்ற பிரச்சினை என்றால் இவ்வளவு உயிரைக் காவு கொடுத்து விட்டமே என்றநினைப்பு எங்கே போய் விட்டது.** துன்பப்பட்ட எமது இனத்துக்கு வெளிச்சத்தை காட்ட வேண்டியநீங்கள் இருளை நோக்கியல்லவா கூட்டிச் செல்கின்றீர்கள் இதற்காகவா உங்களை மக்கள் தெரிவுசெய்தார்கள்.

அண்மையில் பல்கலைக்கழக மோதல் ஓர் இனவாதமாக சித்திரிக்கின்ற சூழல் ஏன் ஏற்பட்டது. இவ்வாறான சூழல் ஏற்படுவதற்கு யார் வழிவகுத்தார்கள்? இனங்களுக்கிடையேயான சகோரத்துவத்தை வளர்க்கும் செயற்பாடுகள் பலமானதாக இல்லாமல் இருப்பது இலங்கை போன்ற நாடுகளின் சாபக்கேடு.

ஆனாலும், நாம் நம்பிக்கையுடன் செயற்பட்டாக வேண்டும். தேர்தல் வெற்றிகளை உசுப்பேத்தும் அரசியல் தலைமைகளும், பொறுப்பற்ற விதத்தில் பிழைப்புக்காக ஒரு சில பத்திரிகைகள் இன்றைய சூழலை பொறுப்புடன் பார்க்காமல் செயற்படுவதும் குரோதத்தை ஏற்படுத்தும் செய்கையாவே அமைகிறது.

எது எவ்வாறாயினும் பத்திரிகைகளும் பல்கலைகழகங்களும் நல்ல கருத்துக்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வார்கள் என்று இன்னமும் எதிர்பார்க்கும் மக்களே தமிழ் மக்களில் அதிகம் இந்நிலையில், பல்லின மாணவர்கள் கற்கும் பல்கலைகழகங்களில் பெரிய நிகழ்வுகளை இணைந்து கலந்தாலோசித்து செயற்படும் தன்மை இருப்பது சாலச் சிறந்தது.



# பொல்லைக்கொடுத்து அடிவாங்கும் ஐரோப்பா

ஐரோப்பிய நாடுகளில் வகைதொகையின்றி ஐ.எஸ்.ஐ.எஸ் இன் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இத்தாக்குதல்கள் விமான நிலையங்களிலும் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளிலும் திட்டமிடப்படுவதால், சாதாரண மக்கள் சகட்டு மேனிக்கு பலியாகவேண்டி உள்ளது. பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா போன்றநாடுகள் இவற்றில் மையப்படுத்தப்பட்டுள்ளன.



குண்டுத்தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கித் தாக்குதல்களுக்கு அப்பால் வாகனமொன்றின் மூலம் மக்களை நேரடியாகவே அடித்து நசுக்கிக்கொல்லும் அளவிற்கு இத்தாக்குதலின் குரூரம் ஏற்பட்டுவிட்டது. பிரான்சில் இவ்வாறானதொரு தாக்குதலில் இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்களும், யுவதிகளுமே. (84 பேர்)



அராபிய நாடுகளில் ஏற்படுகின்ற அரசியல் மாற்றங்களும், ஐ.எஸ். ஐ.எஸ். இற்கான மறைமுக இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளும் இந்நிலையை தக்கவைத்திருக்கிறது. ஐரோப்பாக் கண்டத்தில் பிரான்ஸ் இதன் இலக்காக மையப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பரிஸ் நகரம் ஐ.எஸ்.ஐ.எஸ் இன் கைவசமாகும் என சவால் விட்டு வருகிறார்கள். ஐரோப்பாவின் ஜனநாயக கொள்கைகள் இடம்பெயர்ந்து வரும் அகதிகளின் ஊடுருவலால் மறுபரிசீலனை செய்ய வேண்டிய அளவிற்கு மாற்றமடைந்து வருகிறது. அரசியல், பொருளாதாரம், இராணுவப் பாதுகாப்பு போன்ற விடயங்களில் இன்னும் இன்னும் இறுக்கமான நடைமுறைகளை ஐரோப்பிய நாடுகள் பல எடுத்து வருகின்றன.



**து**ருக்கியில் அமெரிக்கப் பின்னணியில் நின்று தொடங்கப்பட்ட இராணுவ சதிப்புரட்சியை மக்கள் தாமாக முன்வந்து கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது 21 ஆம் நூற்றாண்டு அரசியலில் சக்தி மிக்க ஒரு நடவடிக்கையாகும்.

300 மக்கள் தமது தாய்நாட்டிற்காக தமது உயிரை உடனடியாக அர்ப்பணித்தார்கள். 2100 பேர் காயப்பட்டனர் என்பது சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ளக்கூடியதல்ல. ஐரோப்பாவிற்குள் அமெரிக்காவினால் குழப்பமுடியாதுள்ள ஒரேயொரு நாடு துருக்கி மட்டும்தான்.

**வியட்நாம் யுத்தத்தில் பொது மக்களிடம் பெற்ற அதே எதிர்ப்பினை துருக்கி இராணுவ சதிப்புரட்சி வடிவத்தில் அமெரிக்கா மீண்டும் ஒரு தடவை கண்டிருக்கிறது.**

ஒரு நீண்ட சதிமுயற்சியை ஒரு சில மணி நேரத்தில் மக்கள் முடிவுக்குக் கொண்டுவந்தார்கள். தமது உயிரை நினைத்தவுடன் தமது தாய்நாட்டிற்காக அர்ப்பணிக்கும் அளவிற்கு அவர்களிடமிருந்த நாட்டுப்பற்று வேறு எதனுடனும் ஒப்பிடக் கூடியதல்ல.



## துருக்கியில் இராணுவச் சதி





# யூரோ கிண்ணம் - 2016

ஜோசப் கிருஸ்ணா


சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் முதன்மைபெற்ற நிகழ்வுகள் என்றால், ஒலிம்பிக் போட்டிகள், உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள், யூரோ கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள், கோபா அமெரிக்கா உதைபந்தாட்டப் போட்டிகள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள், உலகக் கிண்ண இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகள் என்று வகைப்படுத்திக்கொண்டே போகலாம். இவை ஒவ்வொன்றும் விளையாட்டு உலகின் முதன்மையான போட்டிகளே.

இந்த வகையில் ஜூன் மாதம் தொடங்கி ஜூலை 10ம் திகதி வரை பிரான்சில் நடைபெற்ற யூரோ கிண்ணப் போட்டிகள் பல கோடி உதைபந்தாட்ட ரசிகர்களை ஒருமாதம் கட்டிப்போட்டிருந்தது. இலங்கை உதைபந்தாட்ட ரசிகர்களும் அதற்கு விதிவிலக்கல்ல. பதினைந்தாவது யூரோ கிண்ணப் போட்டிகள் ஒரு சில நாட்கள் இரண்டு போட்டிகளாகவும், சில நாட்களில் மூன்று போட்டிகளாகவும் நடைபெற்றன. குறிப்பாக மூன்றாவது போட்டி இலங்கை நேரப்படி இரவு 12.30 இற்கு ஒளிபரப்பாயிற்று. யாழ்ப்பாணத்தில் சில புரிந்துணர்வற்ற கேபிள் ஒளிபரப்பாளர்களால் மூன்றாவது போட்டி ஒளிபரப்புச் செய்யப்படவில்லை என்பதும்பதிவுசெய்யப்படவேண்டிய விடயமாகும்.

எமது ஆதங்கம் இது வென்றால் யூரோ கிண்ணப் போட்டிகளை நடாத்திய பிரான்சின் துயரங்கள் அநேகம். யூரோ கிண்ணம் ஆரம்பிக்க முன்னமே தீவிரவாதச் செயற்பாடுகள் பிரான்சை ஒரு பதட்டத்திற்குள் கொண்டுவந்தது. யூரோ கிண்ணப் போட்டிகளையும் இத் தீவிரவாதச் செயற்பாடுகள் ஊடுருவி விடுமோ என்ற அச்சத்தில் பிரான்ஸ் நாடு அதி உச்ச பாதுகாப்பு ஏற்பாடுகளைமேற்கொண்டிருந்தது. அதில் வெற்றியும் அடைந்தது என்று கூறலாம். ஆனால் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற பிரான்ஸ் தன் சொந்த மண்ணில் கிண்ணம் வெல்லும் என்று எதிர்பார்த்து இருக்க (அநேகரது முடிவும் அதுவாகத்தான் இருந்தது) போர்த்துக்கல் அணி கிண்ணத்தைத் தட்டிச் சென்றமை பிரான்சுக்கு மிகப் பெரும் துயரமாகவே அமைந்துவிட்டது. யூரோ கிண்ணப் போட்டிகளுக்கு முன் ஏற்பட்ட தீவிரவாத நிகழ்வுகளால் நொந்து போயிருந்த பிரான்ஸ் மக்களின் மன நிலையில் உற்சாகத்தையும், தைரியத்தையும் ஏற்படுத்த யூரோ கிண்ணத்தை வெல்வது மிக அவசியமாக இருக்கும் என்றே பிரான்ஸ் எண்ணியிருந்தது. வெற்றிக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் கூட நடைபெற்றிருந்தன. ஆனால் எல்லாம் ஏமாற்றமாகவே போய்விட்டது. அதோடு அடிமேல் அடியாக யூரோகிண்ணப் போட்டிகளின் பின் சில தினங்களிலேயே இன்னொரு கொடூர தீவிரவாதச் செயலால் எண்பத்துநான்கு பேர் மரணமடைந்து பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

பொதுவாகவே உதைபந்தாட்டப் போட்டிகளில் ரசிகர்கள் குழப்பம் விளைவிப்பது என்பது தடுக்கப்படமுடியாத ஒன்றாகவேதொடர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு யூரோ 2016ம் விதி விலக்கல்ல. ஒவ்வொரு ஆட்டத்தின் பின்பும் இரண்டு அணி ரசிகர்கள் மத்தியில் உராய்வுகளும் சிறு மோதல்களும் நடைபெற்றுக்கொண்டே வந்திருக்கின்றன. இங்கிலாந்து, ரஷ்ய அணிகளுக்கு எதிரான போட்டியில் ரசிகர்களின் மோதல் மிகப் பெரிதாக இருந்தது. இதில் முப்பத்தைந்து பேர் வரையில் காயமடைந்தார்கள். இதன் தொடர்ச்சியாக சிலர் கைது செய்யப்பட்டார்கள். சிலர் பிரான்சைவிட்டு வெளியேறும் படியும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.






ஜூலை பத்தாம் திகதி இரவு 8 மணிக்கு (பிரான்ஸ்நேரம்) நடைபெற்ற பிரான்ஸுக்கு எதிரான இறுதியாட்டம் போர்த்துக்கல் நாட்டுக்கு வெற்றியாக அமைய இரு நாட்டு ரசிகர்களும் விரத்தியானாலும் வெற்றிக்களிப்பாலும் மோதலுக்குவழி வகுத்துவிட்டார்கள்.

இதன் முடிபு நாற்பது பேர் வரையில் கைதாக்கினார்கள். கலவரத்தை அடக்க பிரான்ஸ் பொலிஸார், கண்ணீர்ப்புகைக்குண்டுகளையும், நீர்த்தாரையையும் பாவிக்க வேண்டி ஏற்பட்டு விட்டது. எந்த மட்ட உதைபந்தாட்டப்போட்டிகளிலும்ரசிகர்களின் அத்துமீறல்கள் இன்று உதைபந்தாட்டத்தின் ஒரு அங்கம் என்று கூறும் அளவிற்கு அச்சம் ஏற்படுகிறது.

யூரோ 2016 உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணத்துக்காக 24 ஐரோப்பிய அணிகள் களம் இறங்கின. தலா நான்கு அணிகளாக ஆறு பிரிவு-களில் களம் இறங்கிய அணிகள் முதற்சுற்றில் ஒரு அணி மூன்று ஆட்டங்களில் கலந்துகொண்டது. இவ்வகையில் முதன்மை ரீதியில் தகுதிபெற்ற 16 அணிகள் அடுத்த கட்டத்துக்குத் தெளிவாயின. இதிலிருந்து விலகல் முறையிலே, அதாவது 8 - 4- 2 - 1 என்று (Knock out) முறையில்சுற்றுப்போட்டிதொடர்ந்தது. கால் இறுதிப்போட்டிகள் வரை என்று வந்தபோது

**1. போலந்து – போர்த்துக்கல்**
**2. வேல்ஸ் – பெல்ஜியம்**
**3. ஜேர்மனி – இத்தாலி**
**4. பிரான்ஸ் – ஐஸ்லாந்து**

என்று சந்தித்தன. இதில் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றவை போர்த்துக்கல், வேல்ஸ், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நான்கு அணிகளே. தொடர்ந்து அரை இறுதி ஆட்டங்களில் போர்த்துக்கல், வேல்ஸ் அணியைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்குத் தெரிவாயிற்று. பிரான்ஸ், ஜேர்மனி அணியைத் தோற்கடித்து இன்னொரு இறுதிப்போட்டி அணியாயிற்று தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டி பிரான்ஸ் தேசத்துக்கு பெரும் ஏமாற்றத்தையும், போர்த்துக்கல்தேசத்துக்கு முதலாவது சர்வதேச கிண்ணத்தையும் பெற்றுக்கொடுத்தது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், அணித்தலைவர் கிறிஸ்டியானோ றொனால்டோ இல்லாவிட்டால் போர்த்துக்கல் அணியே இல்லை என்ற நிலையில் ஆட்டத்தின் இருபத்து மூன்றாவது நிமிடத்தில் கிறிஸ்ரியனோ றொனால்டே காயத்துடன் மைதானத்தை விட்டுவெளியேறுகிறார்.

முதல் பகுதியின் 90 ஆவது நிமிடம் வரையும் பின்னர் மேலதிக நேரத்தில் பதில் வீரர் களம் இறங்கிய ஈடர் அந்த வெற்றிகோல் அடித்து கிண்ணத்தை வெல்லும்வரை அவர் வெறும் கண்ணீர்மல்கிய பார்வையாளராவே இருந்தார். ஆட்டத்தின் பின் போர்த்துக்கல்வீரர்பேக்கருத்துக் கூறும்போது "நீ பார்த்துக்கொண்டே இருகிண்ணத்தை வென்று உன்னிடம் தருகிறோம்" என்று றொனால்டோவிடம் ஆறுதல் கூறியதாகக் கூறியுள்ளார். எது எவ்வாறாயினும் போர்த்துக் கல்லுக்கு இது ஒரு மகத்தான தருணம். யூரோ 1984 ல்- யூரோ 2000 த்தில் - உலகக்கிண்ணம் 2001 இல் - இதே பிரான்ஸ் அணியால் போர்த்துக்கல் அரை இறுதிப் போட்டிகளில் தோற்கடிக்கப்பட்டு வெளியேற்றப் பட்டிருந்தது.

அதே அணியை அவர்களின் வீட்டுக்குள்ளேயே புகுந்து வெற்றி வாகை சூடிய போர்துக்கல்லுக்கு யூரோ 2016 ஐரோப்பியக் கிண்ணம் ஒரு மகத்தான சாதனை தான்.



# VAT யாருக்கு...?

வற் வரி விடயத்தில் பல வாதப்பிரதிவாதங்களும் கடையடைப்புக்களும், ஆர்ப்பாட்டங்களும் யூன், யூலை 2016 காலத்தில் நடைபெற்று வருகிறது. ஆனால், மக்கள் பலருக்கு இவ்வற்வரி என்பது தெளிவற்ற நிலையிலேயே காணப்படுகிறது. அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக 2002 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட வற் வரி அன்று முதல் இன்று வரை பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

1. 2002 ஆம் ஆண்டில் இந்த வரியானது 20% , 10 % மற்றும் 0 % என்ற மூன்று விகிதங்களில் அறிவிடப்பட்டது.
2. 2004 ஆம் ஆண்டு இந்த வரி முறை அகற்றப்பட்டு வற் வரி 15% பொதுவானதாக மாற்றப்பட்டதுடன் ஏற்றுமதிக்கு 0% என்ற % தொடர்ந்தும் பேணப்பட்டது.
3. 2005 ஆம் ஆண்டு மீண்டும் வற் வரி மாற்றத்துக்கு உள்ளானது.
4. 2009 ஆம் ஆண்டு வற் வரியின் விதம் 12 % மாக குறைக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மாற்றமின்றி காணப்பட்டது.
5. 12 % மாக இருந்த பொதுவான வற் வரியானது கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 11 சதவீதமாக குறைக்கப்பட்டது.
6. **இந்த ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி 11 வீதமாக இருந்த வற் வரி 15 % அதிகரிக்கப்பட்டது. கடந்த அரசாங்க காலத்தில் பெறப்பட்ட கடன்களுக்கு ஏற்ற வகையில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.**

**உலகில் 160 நாடுகளில் வற் வரி அறவிடப்படுகிறது. 13 முதல் 30மு வரையில் இந்நாடுகளில் இந்த வரி அறவிடப்படுகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் செல்வந்தர்களுக்கும் அவ ரது ஆதரவாளர்களுக்கும் வற் வரி முழுமையாக நீக்கப்பட்டிருந்தது.** இதனால் தான் அரச வரமானம் பேரிழப்புக்கு உள்ளானது. அரச வருமானம் அதிகரிக்கப்பட்டால்தான் மக்களுக்கான நலன்புரிச் சேவைகளை முன்னெடுக்க முடியும்.

தெற்காசியாவிலேயே அரச வருமானம் குறைந்த நாடாக எமது நாடே காணப்படுகிறது. அரசாங்கமானது கடந்த அரசாங்க காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே வற்வரி அறவிடுதலிலும் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அத்தியாவசியப் பொருட்களுக்கோ சேவைகளுக்கோ இந்த வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் வற் வரி அதிகரிப்பினுள் உள்வாங்கப்படாத பொருட்களின் பட்டியல் பின்வருமாறு: அரிசி, விதைநெல், கோதுமை, ஏலக்காய், கராம்பு, சாதிக்காய், தேங்காய், இறப்பர், தேங்காய்ப்பால், தேயிலை, அரிசிமா, கோதுமை மா, பாண், பால்மா, முட்டை, திரவப்பால், மருந்து வகைகள், ஆயுள்வேத மருந்துகள், மிளகு, விமானம், ஹெலிகொப்டர், முத்து, மாணிக்கம், வைரத்தூள், விலைமதிப்பற்ற உலோகம்.

தங்க நாணயம், புத்தகம், கச்சா எண்ணெய், மண்ணெண்ணெய், எரிவாயு, டீசல், பெற்றோல், கப்பல் எண்ணெய் வகைகள், செயற்கைக் கால், விசேட தேவையுடையோருக்கான சக்கர நாற்காலி உள்ளிட்ட உபகரணங்கள், செவிப்புலனற்றவர்களுக்கான கேட்டல் உதவிக் கருவிகள், வெள்ளைப்பிரம்பு, பிரெயில் தட்டச்சு உபகரணம் மற்றும் உதிரிப்பாகங்கள்.

விவசாய டிரக்டர் வண்டிகள், கையடக்கத் தொலை பேசி, விவசாய இயந்திரங்கள், உரம், விதை, செடிகள், நிர்மாணத்துறை இயந்திரங்கள், பசும்பால் உற்பத்தி இயந்திரங்கள், கணனி மற்றும் கணனி பாகங்கள், நெல் உற்பத்தி இயந்திரங்கள், சூரிய ஒளி உபகரணங்கள், மின்சார உற்பத்தி போன்றவைகள், உயர் தொழில்நுட்ப மருத்துவ உபகரணங்கள், நிலக்கரி, தார், இறால், பேக்கரி உற்பத்தி மற்றும் பேக்கரி உற்பத்தி சார்ந்த இயந்திரங்கள், இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் தயாரிப்புக்கள்.

வாசனைத்திரவியங்கள், கண்வில்லை சார்ந்த உற்பத்திகள், தளபாடங்கள், உள்நாட்டு நுகர்வு துணிகள், பவுசர், புல்டோசர், கிரேடில், லிவர்ஸ், அகழ்வு பணி இயந்திரங்கள், தீயணைப்பு வாகனங்கள், ஆற்றல் சேமிப்பு மூலப்பொருட்கள். இறக்குமதி செய்யப்படும் மர அலங்கார வகைகள்.

விற்றமின் நிறைந்த உணவுப் பதார்த்தங்கள், கடல் மண், உள்ளூர் கைத்தறி உற்பத்திகள், தென்னைநார், பைபர் களிமண்ணால் ஆன கூரை ஓடு, உள்ளூர் உற்பத்திகளான பசும்பால், அரிசி, சீனி, தேயிலை, பார்ம் எண்ணெய் போன்றவை, விமானப் பாகங்கள், மருந்தக உற்பத்திகள், நகை தயாரிப்புகள், உள்ளூர் மென்பொருள் தயாரிப்பு, காற்றாலை மின் உற்பத்தி உபகரணங்கள் போன்றவைகளுக்கு வற் வரி விதிக்கப்படமாட்டாது.


அத்துடன் வற் வரி விதிக்கப்படாத சேவைகள் விபரம், கல்வி சார்ந்த சேவைகள், பொது நூலக சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், மின் சேவைகள், வங்கி மற்றும் வணிக சேவைகள், வாழ்க்கைக் காப்புறுதி, அக்ரஹாரக் காப்புறுதி சேவை, திரைப்பட துறைசார்ந்த தயாரிப்புகள், துறைமுக துறை சேவைகள், உள்ளூர் தொழில்நுட்ப தொலைத்தொடர்பு சேவைகள், அபிவிருத்திச் சேவைகள், வெளிநாடுகளிலிருந்து ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்வு ஏற்பாடுகள்.

# கொத்துக்குண்டு போட்டது குற்றமல்ல – மக்வெல் பரணகம

**"2010 ஒக்ரோபர் 01ம் திகதியே இலங்கையில் கொத்துக் குண்டுகளுக்கு தடைவிதிக்கப்பட்டது. எனவே, அதற்கு முன்னைய காலப் பகுதியில் கொத்துக்குண்டுகள் போடப்பட்டிருந்தால் அது சட்டப்படி குற்றமல்ல"** என்றார் காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவின் தலைவரான மக்வெல் பரணகம.

13.04.1919 இல் யாலியன் வாலாபாக் (பஞ்சாப் அமிர்தசரசில் உள்ள ஒரு மைதானம்) என்ற இடத்தில் வைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பிரித்தானியப் படையினர் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். இதில் 1500 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும், 1100 பேர் வரையில் காயப்பட்டும் இருந்தார்கள்.

இத்தாக்குதலுக்கு தலைமை வகித்த பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் R.E.H.Dyer என்பவரிடம் 303 துப்பாக்கிகளால் ஏன் மக்களுக்குச் சுட்டீர்கள் என்று கேட்டபோது, **"அதைவிடப் பெரிய துப்பாக்கிகள் எதுவும் என்னிடம் இருக்கவில்லை அதனால்தான் 303 ஆல் சுட்டேன்"** என்றார். இதை ஒத்ததாகவே மக்வெல் பரணகமவின் அறிக்கையும் அமைந்துள்ளது.



# திருமணப் பொருத்தம் சரியாகப் பார்க்கப்படுகின்றதா?

சின்னத்தம்பி கமலநாதன்
கருமாரி சோதிடம்,
நாவற்குடா,
மட்டக்களப்பு.



உலக வாழ்வியலில் மனித வாழ்க்கையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்திலும் திருமணமே மிக முக்கியமானதாகும். திருமண பந்தம் பாசப்பிணைப்புடன் வாழையடி வாழையாக வாழ வைக்கும் வாழ்வின் ஆதாரச் செயற்பாடாகும். இது சரியான முறையில் அத்திவாரமிடப்பட்டாலே ஏனைய வாழ்க்கைமுறை யாவும் சீரானதாக அமையும்.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றதென்பது சான்றோர்களின் கருத்தாகும். உண்மையும் அதுவே. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம் என்ற கருத்தும் இதை ஆழப்படுத்தி நிற்கின்றது. அன்பான துணைவி, அழகான மனைவி அமைந்தாலே பேரின்பமே. இல்லறத்தில் திருப்தியான வாழ்வை மேற்கொண்டவனுக்கே சொர்க்கத்திலும் இடமுண்டு என்பது இந்துக்களின் நம்பிக்கை.

இல்லறத்தை நல்லறமாக நடாத்துவதற்கு முதற்படி நல்ல கணவன், மனைவியைத் தெரிவு செய்வதாகும்.

ஒருவனுக்கு ஏற்ற துணை சொர்க்கத்திலே நிச்சயிக்கப்பட்டுள்ளதை இவ்வுலகில் நாம் எப்படி அறிந்துகொள்வது என்பதை மிகத் தெளிவாகக் காட்டும் காலக் கண்ணாடியே சோதிடமாகும். இந்தச் சோதிடத்தில் ஒரு பகுதியே பொருத்தம் பார்த்தலாகும்.

பொருத்தம் பார்த்து வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள் ஒவ்வொரு இடத்திற்கு இடம் வெவ்வேறு முறைகளில் பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் வெவ்வேறு வகையான முறைகள் பின்பற்றப்படுகின்றன. அதுபோல சோதிட நூல்களும் பொருத்தம் பார்க்கும் விடயத்தில் பல்வேறு கருத்து பேதம் கொண்டதாக காணப்படுகின்றது. ஒரு நூல் பொருத்தம் என்று கூறும் விடயத்தை இன்னொரு நூல் பொருத்தமில்லை என்று கூறுகின்றது. சில நூல்கள் அதற்கு விதிவிலக்கு கூறுகின்றது. மூல நூல்களுக் கிடையிலேயே வேறுபாடு பஞ்சாங்கங்களும் ஒன்றுக்கொன்று முரணான பொருத்தப்பாட்டைச் சொல்கிறது. இவ்வாறு சொல்லப்படுகின்ற பொருத்தங்கள் யாவும் தசப் பொருத்தம் என்கின்ற 10 பொருத்தல்களாகும்.

**இந்தத் தசப்பொருத்தம் சந்திரன் இருக்கின்ற நட்சத்திரத்தைக்கொண்டேபார்க்கப்படுகின்றது. அதாவது பெண்ணின் நட்சத்திரத்தையும், ஆணின் நட்சத்திரத்தையும் வைத்துக்கொண்டு தினம், கணம், மகேந்திரம், ஸ்த்ரீதீர்க்கம், யோனி, ராசி அதிபதி, வசியம், ரஜ்ஜு, வேதை என்பன பொருந்துகின்றதா என்று பார்ப்பதாகும்.** இதில் 10 இற்கு 10 பொருந்தினால் 100% பொருத்தம் என்றும் 10 இற்கு 8 பொருத்தினால் 80% பொருத்தம் என்றும் 10 இற்கு 6 பொருந்தினால் 60% பொருத்தம் திருமணம் செய்யலாம் என்று சோதிடர்கள் கதையை முடித்து விடுகின்றனர்.

மேலும் பொருத்தம் பற்றிய புத்தகங்களுக்கிடையில் கருத்து வேறுபாடு உள்ளதுபோல் சோதிடர்களுக்குமிடையில் வேறுபாடான பொருத்த நிர்ணயம் காணப்படுகிறது. ஒரு சோதிடர் 16 பொருத்தம் பார்ப்பார். இன்னுமொருவர் 14 பொருத்தம் பார்ப்பார். இன்னுமொரு சோதிடம் 10 பொருத்தம் பார்ப்பார். இன்னுமொரு பகுதியினர் பிரதான பொருத்தங்கள் 5 பொருந்தினால் போதுமென்று முடிச்சுப் போட்டு விடுவார்கள்.

வேறு சிலர் ஆண் நட்சத்திரத்திற்கு பெண் நட்சத்திரத்தைப் பொருத்தம் பார்ப்பவர்களும் உண்டு. இவர்கள் நிலை இப்படி இருக்க இன்று திருமணப் பொருத்தம் பார்ப்பதில் தரகர்மார்களின் செல்வாக்கு அதிகமாகும். இவர்கள் 'ஒருநிமிடத்தில் திருமணப் பொருத்தம் பார்க்கலாம்' என்ற பொருத்தம் பார்க்கும் புத்தகத்தை வைத்துக்கொண்டு தன்னிடம் வரும் ஜாதகங்களுக்குப் பொருத்தத்தை நிச்சயித்து திருமணத்தில் கொண்டுபோய் விடுகின்றனர். இவ்வாறு திருமணப் பொருத்தமானது பல குழப்ப நிலைகளுக்கும், நம்பகத்தன்மை அற்றதாகவும் மாறி வருகின்றது. இதில் மக்கள் விழிப்புணர்வு அடைய வேண்டியது மிக முக்கியமானதாகும்.

உண்மையில் சோதிடம் அறிவியல் சார்ந்த பொக்கிஷம். இதில் சரியான வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்க்கை ரகசியங்களைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியம். **இன்று சோதிடப் புத்தகங்கள் வர்த்தக மயமாக்கப்பட்டு மூலக்கருத்துக்கள் திரிவுபடுத்தி எழுதப்பட்டு வருகின்றது. முதிர்ந்த அறிவு, ஞானம், அனுபவமில்லாத எத்தனையோ பேர் சோதிடர் என்ற பெயரில் சோதிடம் கூறுகின்றனர்.** இவர்கள் மக்களைப் பிழையான வழியில் இட்டுச் செல்கின்றனர். ஜாதகங்களை பிழையாகக் கணிக்கின்றனர். பிழையாகக் கணித்த ஜாதகங்களைக் கொண்டு பொருத்தம் பார்த்து திருமணம் செய்து வைக்கின்றனர். இவ்வாறு செய்து வைத்தஎத்தனையோதிருமணங்கள் பிரிவு, பிரச்சினை, விவாகரத்துக்களைச் சந்தித்து நிற்கின்றது.

**இல்லாத தோஷங்களை எல்லாம் இருப்பதாகக் கூறி அதற்குப் பரிகாரம் செய்து வைக்கின்றனர். இதில் இருப்பவர்கள் இந்துக்குருமார்களாக உள்ள சோதிடர்கள். மக்களும் அவர்கள் சொல்வதை வேதவாக்காக எண்ணிச் செயற்படுகின்றனர். மக்களும் தகுந்த தகுதியான சோதிடர்களை தேர்ந்தெடுத்து தமது எதிர்கால பலாபலன்களை அறிந்து கொள்வதில் தவறி விடுகின்றனர்.** ஒருவருக்கு நோய் ஏற்பட்டு விட்டால் அதற்குச் சிகிச்சை செய்வதற்கு வைத்திய நிபுணர்களைத் தெரிவு செய்வதில் காட்டும் அக்கறையை தனது வாழ்க்கை ரகசியங்களை அறிய உதவும் சோதிடர்களைத் தெரிவு செய்வதில் காட்டுவதில்லை. இது எம் மக்களிடமுள்ள மிகுந்த குறைபாடாகும். பஞ்சாங்கம் பார்க்கத் தெரியாத எத்தனையோ பேர் சோதிடர்கள் என்ற போர்வையில் உள்ளனர். இதுபற்றி மக்கள் தெளிவு கொள்வது அவசியமாகும்.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்பது உண்மையாக இருந்தாலும் இவை சோதிடர்களிடம் பொறுப்பாக்கப்படும்போது சோதிடர்கள் மிகக் கவனம் செலுத்தி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை சரியான முறையில் வழிப்படுத்திக் கொடுக்க வேண்டும். இனி பொருத்தத்திற்கு வருவோம்.

பத்துப் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்வதென்பதில் ஒரு முழுமையற்றதும், நம்பகத்தன்மையற்றதும் குறைபாடுகள்அதிகமுள்ளதுமாகும் என்பதை எடுத்தாராய்வோமெனில், 10 இற்கு 8 பொருந்தினால் 80% பொருத்தம் என்று திருமணத்தைச் செய்வதென்பது மிகவும் பிழையான ஒரு வழிமுறையாகும். **இந்த பத்துப் பொருத்தத்தைப் பொருத்தம் பார்ப் பதற்கான எடுகோளாகக் கொள்ள வேண்டுமே தவிர முடிவாக முடித்து விடக்கூடாது.** மாறாக இருவரினதும் ஜாதகங்களையும்தனித்தனியாக ஆராய்ந்து- அதிலுள்ள சாதக பாதக நிலைமைகளை அலசி ஆராய்ந்து எதிர்காலவாழ்வுக்குத்தகுந்த ஜாதகங்களை நல்ல ஜாதகம் என்ற முடிவை எடுத்த பின்பே அவ்விரு ஜாதகங்களுக்கும் பொருத்தம் பார்க்க வேண்டும். இந்தப் பத்துப் பொருத்தத்தில் சொல்லப்பட்ட பலன்கள் ஜாதகத்திலும் அமைந்துள்ளதா எனப் பார்க்க வேண்டும். உதாரணமாக தினப் பொருத்தம் பொருந்தினால் ஆயுள், ஆரோக்கியம் தம்பதிகளிடம் ஏற்படுமென்றால் இருவர் ஜாதகத்திலும் ஆயுள் ஆரோக்கியத்திற்கான நல்ல கிரக அமைப்புகள் உள்ளனவா, என்பதை ஆராயவேண்டும்.

பலவீனமான ஆயுள் பலன் உள்ள இருவருக்கு தினப்பொருத்தம் பொருந்துகின்றது என்பதற்காக சேர்த்து வைக்க முடியுமா? தினப் பொருத்தத்தால் வரும் ஆயுளால் என்ன பயன்?

இதேபோன்று யோனிப்பொருத்தம் நட்சத்திரப்படி இருந்தாலும் கிரக நிலையில் தாம்பத்திய உறவுக்குரிய செவ்வாய் + சுக்கிரன் பலவீனமாக இருந்தால் தசப் பொருத்தத்தில் யோனிபொருந்துவதால் எந்தப் பலனுமில்லை. இவ்வாறே தசப் பொருத்தத்தில் சொல்லப்பட்ட அம்ஷங்கள் யாவும்ஜாதகரீதியாக அமைகின்றதா? என்பதை பார்த்தே பொருத்தம் நிச்சயம் செய்யவேண்டும்.

சென்றவருடம் நடந்த சம்பவம் ஒன்று இவற்றிற்குத் தகுந்த எடுத்துக் காட்டாகும். இருவரின் ஜாதகப் படிதசப்பொருத்தம் பார்க்கப்பட்டு 3 சோதிடர்கள்பொருத்தம்பார்த்து78%, 80%, 85% பொருந்தியுள்ளது. திருமணம் செய்யலாம் என சிபார்சு செய்து நடந்தேறிய திருமணம் அன்று இரவே பிரிந்தது 3ம் நாள் மாப்பிள்ளை வீட்டில் வரவேற்புக்கு மாப்பிள்ளை மட்டும் நின்று வரவேற்பை நடாத்திய சம்பவம் மட்டக்களப்பில் நடந்தது. ஒரு மாதத்தின் பின் இந்த ஜாதகங்கள் எனது கையில் கிடைத்தது.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

# உடலில் குண்டுச் சிதறல்களுடன் வாழ்வோரின் தகவல்கள் பெறுவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

**சிவசக்தி ஆனந்தன் [பா.உ]**

2009 மே 19 இல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் அதாவது, 07 வருடங்களின் பின்பும்கூட தமிழ்த் தலைவர்களிடம் பாதிக்கப்பட்ட தமிழர்களின் தரவுகள் கையில் இல்லை. உண்மையில் ஆங்கில வார்த்தையில் சொல்வதானால் Finger Tip (விரல் நுனியில்) இல் இருப்பது அவசியம். இத்தரவுகளை எப்படிப் பெறுவது.

05.07.2016 இல் ஹோமியோபதி சட்டமூலம் பற்றிய விவாதம் பாராளுமன்றில் இடம்பெற்றபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் "யுத்தத்தின் போது காயப்பட்டு குண்டுச் சிதறல்களை தமது உடலில் வைத்திருப்போருக்கு இவ்வைத்திய முறை அவசியம் தேவைப்படுகிறது" என்று கூறியபோது, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன **"அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் விபரத்தை எமக்குத் தாருங்கள்"** என்றார்.

அதற்குப் பதிலளித்த சிவசக்தி ஆனந்தன் **"அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் விபரத்தைப் பெறுவதில் சிரமம் உள்ளது எனவும், வடமாகாணத்தைச் சேர்ந்த 05 மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் அவற்றை இன்னும் தரவில்லை"** என்று கூறினார்.

யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் கழிந்துள்ள நிலையில் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு குறிப்பிட்டிருப்பதும். **மற்றவர்கள் தரவுகளை பெற்றுத்தரவில்லை என்று குறைகூறுவதும் எதைக்காட்டுகிறது என்றால் தம்மை ஒரு மக்கள் பிரதிநிதிகள் இல்லை என்பதை அவர்களே ஒத்துக்கொள்வதுடன், கூட்டமைப்பு என்ற கட்சி கோயில் தர்மகர்த்தா சபைபோல அறிக்கைகளையோ, ஆவணங்களையோ கணக்கு வழக்குகளையோ பேணாதிருப்பதையும்வெளிக்கொணர்ந்துள்ளது.**

குறைந்தபட்சம் அவரது மாவட்டமான வவுனியா மாவட்டத்தில் இவ்வளவு பேர் இருக்கிறார்கள், ஏனைய மாவட்டங்களில் எப்படியோ தெரியாது என்று கூறியிருந்தாற் கூட அது நியாயமானதாக இருந்திருக்கும். அதேவேளை, ஏனைய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை. இல்லாவிட்டால் அவர்கள் தமது மாவட்ட விவரத்தைக் கொடுத்திருப்பார்கள் அல்லவா?

**இவ்வாறான ஒரு நிலை முஸ்லிம்களுக்கோ அல்லது சிங்களவர்களுக்கோ இருந்தால் அவர்கள் உடனடியாகவே ஊடகங்களுக்கு ஊடாகவும் தமது உள்ளூர் தலைவர்கள் ஊடாகவும் தனிப்பட்டமுறையில் பாதிக்கப்பட்டவர்களை நாடி தரவுகளைப் பெற்றிருப்பார்கள். 06 வருடம் வரை காத்திருக்கமாட்டார்கள்.**

அதிக பெரும்பான்மையுடன் பாராளுமன்றத் தேர்தலிலும், வடமாகாணசபைத் தேர்தலிலும் வென்றும் தேர்தல் முடிந்த பின் மக்களிடம் செல்லவில்லை. அவர்களது பிரச்சினைகள் பற்றி தேடவில்லை என்பதையே இது காட்டுகிறது.

**தமிழ் அரசியற் பாரம்பரியத்தில் பழைய தலைவர்களிடமும், தற்போதைய தலைவர்கள் இடத்திலும் ஆய்வு செய்வது, தகவல் வங்கி (Data Bank) ஒன்றைப் பேணுவது என எதுவும் இல்லை. வெறும் பத்திரிகைச் செய்திகளை மேற்கோள் காட்டுவதிலேயேதங்கி நிற்கின்றனர். தரவுகள் அற்றவெறும் வார்த்தை ஜாலங்களையே நம்பி நிற்கின்றனர்.**



ஆவணப்படுத்தல் என்பது சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளான ஐ.தேக., ஸ்ரீ.சு.க, ஆகியவற்றிடமும் ஜே.வி.பி., முஸ்லிம் கட்சிகள் என்பன இவற்றை ஒழுங்காகப் பேணி வருவது குறிப்பிடத்தக்கது,

தமது மக்கள் இப்படியெல்லாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதைப் பற்றி தரவுகள் மூலமும், படங்கள், வேறு ஆவணங்கள் மூலமும் நியாயப்படுத்துவதற்கு இவை அவசியம் என்பதை அவர்கள் எப்போதுமே உணர்ந்துள்ளனர். இதில் தமிழ்க்கட்சிகளின் நிலை சிவசக்தி ஆனந்தனின் பாராளுமன்ற உரையில் தெளிவாகிறது.

**நினைவு தினங்களையும், விழாக்களையும் கொண்டாடி மக்களை எழுச்சிப்படுத்துகின்ற வெள்ளை உடை அணிந்த ஒரு சைவக்கோவில் தர்மகத்தா சபையின் நிலையிலே கூட்டமைப்பு உள்ளது.**

ஆவணப்படுத்தல் விடயத்தில் விடுதலைப்புலிகள் மிகவும் கைதேர்ந்தவர்களாக இருந்தார்கள். 1984 இல் அன்ரன் பாலசிங்கம் தலை மையில் ஒரு குழுவினர் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரைச் சந்தித்த போது பேபி சுப்பிரமணியம் (இளங்குமரன்), தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட புகைப்படங்களை முதல்வருக்குக் காண்பித்த விடயத்தை விடுதலை என்ற நூலில் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு விவரிக்கின்றார்.

**"அந்தக் கொலைக்காட்சிகளை சித்தரிக்கும் படங்களைப் பார்த்ததுமே அவரது முகம் விகாரமடைந்தது. ஜஎம்.ஜி.ஆர்.ஸ "இதைப் பார்க்க முடியவில்லையே இப்படியெல்லாம் கொடுமை செய்வார்களா? என்று கவலையுடனும் ஆச்சரியத்துடனும் கேட்டார்.**

விடுதலைப் புலிகள் சுனாமியின் போது தரவுகளைப் பெற்று அவற்றை ஒழுங்குபடுத்திய வேகம் இலங்கை அரசாலோ வேறுசுனாமிப் பேரலை அடித்த நாடுகளாலோ செய்யப்படவில்லை. அவர்களிடமிருந்த தொலைத்தெடர்புக் கருவிகளும் கணனி வலையமைப்புக்களும் மிகத்திறம்பட இணைக்கப்பட்டிருந்தன. இது அரசாங்க அதிபர்களாலோ, வேறு அரச கட்டமைப்புக்களாலோ செய்ய முடியவில்லை. அரச ஊழியர்கள் 8.30 - 4.30 கால இடைவெளியில வேலைசெய்கினற போது புலிகளின் உறுப்பினர்கள் 24 மணிநேரமும் வேலை செய்தார்கள்.

சாதாரணமாக ஒரு போராளி இயக்கத்தில் இணைந்தவுடன் அவருக்கு ஒரு கோவை (File) போடப்படுவதிலிருந்து இத்தரவு சேகரிக்கும் விடயங்களை காண முடியும்.

விடுதலைப் புலிகள் அமைப்பில், போராளிகளின் வீரச்சாவு, காயமடைந்தவர்களின் விபரங்கள் என ஒருபுறமாக தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதைவிட வேறு பல கட்டமைப்புக்களும்நடைமுறையில்இருந்தன.

**இம்ரான்பாண்டியன் படையணி, சாள்ஸ் அன்ரனி, வடபோர்முனை, யாழ்.செல்லும் படையணி, மன்னார் மாவட்டம், கட்டளைப் பணியகம் – ரமேஷ், கட்டளைப் பணியகம் – சொர்ணம், கட்டளைப் பணியகம் – பால்ராஜ், கட்டளைப் பணியகம் – ஜெயம், திருகோணமலை மாவட்ட கட்டளைப் பணியகம், குட்டிசிறி மோட்டார் அணி, ராதா வான்காப்பு, படையத்தொடக்கப்பயிற்சிக்கல்லூரி, போர்க்கருவித் தொழிலகம், அரசியற் துறை, காவற்துறை, புலனாய்வுத் துறை, நிதித்துறை, தொலைத் தொடர்புப்பிரிவு, கல்விக்கழகம், விளையாட்டுத்துறை, மாவீரர் பணிமனை, திரைப்படத்துறை, கலைபண்பாட்டுத்துறை, தமிழீழ நிர்வாகசபை, பொருண்மியம் போன்ற பல்வேறு துறைகளினூடாக தரவுகளைப் பேணியிருந்தனர்.**


இவை அனைத்துத் துறைகளிலிருந்தும் மாதாந்த அறிக்கைகளைத் தலைமைச் செயலகத்துக்கு அனுப்ப வேண்டியிருந்தது. இவ்வாறானதொரு தரவு வலைப்பின்னல் த.தே.கூ.பிடம் இல்லை. அவர்களது தற்போதைய அரசியலுக்கு அது தேவையுமில்லை.

**இன்னொரு வகையில் கூறுவதானால் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்த அனைத்து மக்களும் ஏதோ ஒரு நிறுவனத்துடன் இணைக்கப்பட்டே இருந்தார்கள்.**

ஏறத்தாழ காலநிலை தரவு மையத்தில் இருப்பது போன்ற அதிகளவான தரவுகள் புலிகளிடம் இருந்தன, பேணப்பட்டன. அவர்கள் அதற்கான ஒரு வலைப்பின்னலை ஏற்படுத்தியிருந்தார்கள். வினைத்திறன் மிக்க வகையில் அவை இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால்,2009 மே 19 இன் பின்னர் இத்தரவுகள் அதன் பின்னர் அரசியலுக்கு வந்த தலைவர்களால் பேணப்படவில்லை.

முதலில் கூட்டமைப்பு இத்தரவுகளை உள்ளூர் பிரமுகர்களை வைத்துப் பெற்று, ஒரு தரவு வங்கியை (Data Bank) உருவாக்க வேண்டும். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும், மாகாண சபை உறுப்பினர்களும் தமது பகுதிகளின் இத்தரவுகளைப் பெற்றபின் அரச அதிபர்களிடம் அவர்களது தரவுகளைத் தருமாறு கேட்டு ஒப்பீடு செய்து சரியான முடிவெடுக்க முடியும். அரச அதிபர்களுக்கு கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது சௌக்கிய மருத்துவிச்சி, (தொடர்ச்சி 26 ஆம் பக்கம்)

**றொபேட்**




# சட்டம் நம்மை ஆளட்டும்

நாங்கள் இதற்கு முன்னர் வெளிவந்த அத்தியாயங்களில் சட்டமானது குடியியற்சட்டம் (Civil law) மற்றும் குற்றவியல் சட்டம் (Criminal law) என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளதாகப் பார்த்தோம். இரண்டும் சட்டத்தின் மிக முக்கியமான இரண்டு தூண்களாகக் கருதப்பட்டாலும் இவற்றில் **குற்றவியல் சட்டமானது சுவாரசியம் மிக்கதாக காணப்படுகின்றது. இதனால் நாட்டின் சாதாரண குடியானவன் தொடக்கம் அரச தலைவர்கள் வரை யாவரும் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். தண்டிக்கப்படுகிறார்கள். நிவாரணம் பெறுகிறார்கள். ஈர்க்கப்படுகிறார்கள் என்றுகூற முடியும்.** ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகளிலும் பெரும்பாலானவை இச்சட்டம் சார்ந்த செய்திகளாகவே காணப்படுகின்றன. தனிநபரொருவருக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ அல்லது ஒட்டுமொத்த சமுதாயத்துக்கோ மன்னிக்க முடியாத முறையில் தீங்கு விளைவிக்கும் அல்லது அச்சுறுத்தும் நடத்தையைத் தடை செய்தல் அல்லது தவிர்த்துக் கொள்ளுதல் குற்றவியல் சட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

எனவே இவ்வாறான நடத்தைகளை தடை செய்தல் அல்லது தவிர்த்துக் கொள்ளுதல் தொடர்பாக சட்டத்தால் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என நாம் சிந்தித்து பார்ப்போமானால் அது தண்டனை என்ற செயற்பாட்டுடன் தொடர்புபடுவதை நாம் காணக்கூடியதாக இருக்கும்.

சட்டத்தினால் இவ்வகையான நடத்தைகளில் ஈடுபடுபவர்களின் உயிருடன் அல்லது சுதந்திரத்துடன் அல்லது சொத்துக்களுடன் தொடர்புபட்ட தண்டனைகளை விதிப்பதாலேயே இந்நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. எனவே, குற்றவியல் சட்டமானது தண்டனையுடன் தொடர்புடையதாய் காணப்படுகிறது.

குற்றச்செயல் ஒன்றுக்கு தண்டனை வழங்கப்படும்போது ஒத்த தரப்பினரிடையே வேறுபாடுகள் காட்டப்படக்கூடாது என சட்டம் பரிந்துரைக்கின்றது. அதாவது தண்டனை பெறுவோர் ஏழை, பணக்காரன் எனவோ உயர்ந்த அந்தஸ்து உடையவன் தாழ்ந்தவன் எனவோ வேறுபாடு காட்டப்படலாகாது. இதனையே மனுநீதியும் கூறுகின்றது. அரசகுமாரனின் தேர்க்காலில் பட்டு இறந்துபோன தாய்பசுவின் துயரை போக்குவதற்கு மனுநீதிச்சோழன் முனையும் போது அதற்கு இடையூறாகவந்தஅமைச்சர்களைப்பார்த்துஅரசன் "தொன் மனுநூல் தொடை மனுவால் துடைப்புற்றதென்று..." கூறிச்சினம் கொள்ளுவதிலிருந்து இதனை காணக்கூடியதாக இருக்கும்.

எனினும், கலிகாலத்தில் சட்டமும் பலம் கொண்டவர்களால் வளைக்கப்படுகிறதே என நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் அது ஒரு மாயத் தோற்றமாகவோ அல்லது கானல் நீராகவோ அல்லது தற்காலிக நிலைமையாகவோ மாத்திரமே காணப்படும் என்பதை வரலாறு தரும் பாடம் சுட்டிக் காட்டுகின்றது.

சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து தப்பித்துக் கொள்பவர்கள் ஆண்டவனின் தீர்ப்புக்கு அடிபணிந்தேயாக வேண்டுமென் பதை காலம் கற்றுத் தருகின்றது. "அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்" என்ற சான்று



ரையும் இதனையே எண்பிக்கின்றது.எனவே, ஏனைய மனிதனுக்கு ஊறு விளைவிக்காது சட்டத்தினால் கூறப்பட்டவாறு ஒரு ஒப்புரவான வாழ்க்கையை நாம் வாழ்வோமானால், சட்டம் எப்பொழுதும்எமக்குகாவலாகவேவரும். முரணாக நாம் ஏனையோருக்கு ஊறு விளைவிக்க முயலும்போது சட்டத்தினால்எமக்குத் தண்டனை வழங்கப்படும்.

சட்டத்தினால் தண்டனை வழங்கப்படும் ஊறு என்பது மற்றவர்களுக்கு மாத்திரம் தாம் செய்யும் குற்றச்செயலையோ அல்லது ஊறையோ கருதுவதில்லை. எமக்கு நாம் செய்யும் ஊறுக்கும் சட்டத்தினால் பல சந்தர்ப்பங்களில் தண்டனை வழங்கப்படுகின்றது. எமது உயிர் எமக்கு சொந்தமானது எனினும் தற்கொலைக்கு முயற்சித்தல், சட்டப்படி தண்டனைக்குரிய செயலாகும். தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளைச் செலுத்தும் போது ஏற்படும் விபத்தில் பாதிக்கப்படுவது நாம் எனினும் தலைக் கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள் செலுத்துவது சட்டப்படி பிழையானதாகும்.

சட்டம் என்பது சிலவேளைகளில் நெகிழ்ச்சியானதாகவும், சிக்கலானதாகவும் காணப்படுகின்றது. பிழையான எல்லா நடவடிக்கைகளுக்கும் சட்டத்தினால் தண்டனை வழங்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. உதாரணமாக பிறன்மனைப் புணர்ச்சி அல்லது சோரவாழ்வு என்பது பிழையான நடத்தையாக காணப்படினும், இலங்கையில் அது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமல்ல. எனினும் ஆபாசப்படமொன்றை இருவர் சேர்ந்து பார்த்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, சட்டத்தின் தண்டனையிலிருந்து தப்பிக் கொள்வதற்கு சட்டத்தின் வழியையும் மனச்சாட்சியின் வழியையும் பின்பற்றுவதே சாலச்சிறந்தது.

குற்றவியல் சட்டத்தின்நோக்கங்களையும் செயற்பாடுகளையும் விளங்கிக்கொள்ள முயலும் போது அதனுடன் தொடர்புடைய இரண்டு விடயங்களை கவனத்தில் கொள்ளவேண்டும்.

1. குற்ற நடத்தை
2. தண்டனையின் நோக்கம்

ஏற்கனவே நாம் குற்றநடத்தை என்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளோம். சட்டத்தால் தடை செய்யப்பட்ட குற்றநடத்தையின் வகைகளை ஆராயும்போது கொலை, கற்பழிப்பு, தீயூட்டல் போன்ற கடுங்குற்றங்கள் தவிர நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளால் புதிய குற்ற நடத்தைகளும் தோற்றம் பெறுகின்றன. அதன் காரணமாக குடிமக்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கங்களினால் குற்றவியல் சட்டங்களில் புதிய பகுதிகளும் விருத்தி செய்யப்படுகின்றன. அதேவேளையில் முன்னர் குற்றங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த குற்ற நடத்தைகள் குற்றங்களாக கணிக்கப்படாமலும் நீக்கப்படுகின்றன. எனவே குற்றவியல் சட்டம் சமுதாய அமைப்பிலும் சமுதாய சிந்தனையிலும் ஏற்படும் மாற்றல்களை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது எனக் கூறலாம்.

அடுத்ததாகத் தண்டனையின் நோக்கம் என்பது புரியப்பட்ட குற்றச் செயலுக்கான தண்டனையாகவும், எதிர்காலத்தில் அதனைச் செய்யாமல் தடுப்பதற்கான எச்சரிக்கையாகவும் நோக்கப்படலாம். எனவே, **தண்டனையின் நோக் கம் என்பது பழிவாங்கல், தடுத்தல், இயலாமற் செய்தல், சீர்திருத்தல் என்ற நான்கு தண்டனைக் கோட் பாடுகளைக் கொண்டதாக காணப்படும்.** இக்கால தண்டனை சட்டவாக்கம் குற்றவாளியை சீர்திருத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தபோதும், இச்சீர்திருத்தற் கோட்பாடானது குற்றவியல் சட்டத்தின் முக்கியமான ஏனைய கோட்பாடுகளான பொதுமக்களை காப்பாற்றுதல், நீதியை நிலைநாட்டுதல் என்பவற்றுடன் ஒத்துப்போகும் தன்மையைக் கொண்டதாகவே அமைந்திருத்தல் வேண்டும்.

அதன் நோக்கமானது தொடர்ச்சியாக கொலைஅல்லதுகற்பழிப்புகுற்றமொன்றில்ஈடுபடும் ஒருவனை சீர்திருத்துவதிலும் பார்க்க அவனிடமிருந்து சமூகத்தை பாதுகாப்பதையே பிரதானமானதாக கொண்டிருக்கும். எனவே, தண்டனையும் நோக்கம் என்பது பல கோட்பாடு களைக் கொண்ட நெகிழ்ச்சியான அதேநேரம் இறுக்கமான ஒரு எண்ணக்கரு எனக்கூறலாம்.

மதுமிதன்

## மருந்தாக கஞ்சா

தற்பொழுது வடபகுதியிலும் இலங்கையின் வேறு பகுதிகளிலும் வகை தொகையின்றிக் கேரளக் கஞ்சாப் பொதிகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு வருகின்றன. ஆனால் கைப்பற்றிய கஞ்சாவை தீயிட்டுக் கொழுத்துவதை விடுத்து அந்த விலையுயர்ந்த மூலிகைப்பொருளை சுதேச வைத்தியத்துறை மருந்துகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்த முடியும் என ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினரான லால்காந்த குறிப்பிட்டிருக்கிறார். அதுகூட ஓர் ஆக்கபூர்வமான ஆலோசனைதான்.

# படிப்பும் பாலியலும்

படிப்பும் பாலியலும் என்ற விடயத்தை ஒருவரே புரிய முயன்றதுதான் இன்றைய கல்விச் சமூகத்தில் எழுந்துள்ள பிரச்சினையும், தலை குனிவுமாகும். இதற்கு முழு ஆசிரியர்களும் பொறுப்பில்லை என்பதை பாதிப்பை ஏற்படுத்திய ஆசிரியர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குவதன் ஊடாக ஏனைய ஆசிரியர்களையும் அந்தப் பாடசாலைக்கு ஏற்பட்ட அவமானத்தையும் கழுவிக் களைய முடியும். பொதுவாக இவ் விடயத்தில் கருத்துத் தெரிவிப்பவர்கள்

- இவ்வாறான ஆசிரியர்களுக்கு திரும்பவும் ஆசிரிய நியமனம் வழங்கக்கூடாது. கட்டாயமாக அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.
- ஏற்கனவே இவ்வாறான பிழைகளை விட்ட ஆசிரியர்களை வலயக்கல்வி அலுவலகங்களில் கௌரவ பிரஜைகளாக இருத்தியவர்களுக்கும் தண்டனை வழங்கப்படவேண்டும்.
- குற்றம்புரிந்தவரை பாதுகாப்பதற்காக ஆசிரிய இடமாற்றம் செய்து மறைத்தவிடயங்களை மீண்டும் தண்டனைக்குரியதாக ஆக்குதல்.

இது ஒருபுறமிருக்க, வேறு சிலரின் கருத்தோ முற்றிலும் எதிர்மாறானதாக இருக்கிறது

- உது இன்று நேற்றில்லை எப்போதிருந்தே நடந்து வருகின்றது.
- இணையத்தளங்களும், ஊடகங்களும் தேவையில்லாமல் ஊதிப்பெருப்பிக்கின்றன.
- ஓர் ஆசிரியரில் உள்ள கோபம் அல்லது பொறாமையால் சோடிக்கப்பட்ட கதை.
- அப்படி நடக்கும்போது மற்றவர்கள் என்ன பார்த்துக்கொண்டிருந்தவை?

இவ்வாறு பேசுவோர் சமூக பொறுப்பற்றவர்கள் என்பதுடன், தமது பிள்ளைகளுக்கு அவ்வாறான பாதிப்பு ஏற்பட்டால், மேற்கூறப்பட்ட நியாயத்தைக் கூறி ஒதுங்கி விடுவார்களா? இல்லவே இல்லை!

பாடசாலைச் சூழல் ஒன்றில் ஆசிரியர்களும், மாணவிகளும் பழகுவதை யாரும் பிழையாகப் பார்க்கப்போவதில்லை. அந்தச்சூழல், சந்தர்ப்பம் என்பவற்றை சாதகமாக வைத்தே இம் முறைகேடுகளும் நடந்தேறுகின்றன.

இதில் பாதிக்கப்பட்ட மாணவியின் வகுப்பில் படிக்கின்ற மாணவர்கள் தனது சகோதரி ஒருவருக்கு நடந்த துன்பமாக இதை எடுத்துக்கொள்ள அவர்களை வெருட்டி, அல்லது மூடி மறைக்க ஏனைய ஆசிரியர்கள் முயற்சித்ததையும் அறியமுடிகிறது.

முன்பு எப்போதோ நடந்தது என்ற விடயத்தில்கூட சரியான தகவல் தெரிந்தவர்கள் உரிய இடங்களுக்கு அவற்றைத் தெரிவிப்பதன்மூலம் (பொலிஸாருக்கு) அந்த முறைகேட்டைச் செய்த ஆசிரியர்களைக் கைதுசெய்து நடவடிக்கை எடுப்பதால் அவர்களால் இனிவரும் நாட்களில் ஏற்படவிருக்கும் அனர்த்தத்தை தவிர்க்கமுடியும்.

**இந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட மாணவியின் பெயரையோ அல்லது புகைப்படத்தையோ எந்த ஊடகங்களும் பயன்படுத்தக்கூடாது. அந்த விடயத்தை பொலிஸ் விசாரணைப் பிரிவு, சிறுவர் நன்நடத்தைப் பிரிவு மற்றும் நீதிமன்றம் ஆகியவை கவனித்துக்கொள்ளும். பொதுமக்களது பங்கு என்னவென்றால் இத்தகவல்களை சரியான முறையில் வழங்குவதாகும்.**

சமூகத்தில் அக்கறையுள்ள பொதுமக்கள் இவ்வாறான விடயங்களைத் தெரிந்திருந்தும் குறிப்பிட்ட ஆசிரியரைக் காப்பாற்றுவதற்காக மறைப்பது என்பது மிகப்பெரிய சமூகவிரோதச் செயலாகும்.

குற்றமிழைத்த ஆசிரியர்களை என்ன செய்வது? அது சார்ந்தவர்களை என்ன செய்வது என்பதில் சட்ட நடவடிக்கை என்பது 100% மாக இருக்க வேண்டியது அவசியமாகும்.



1.குறிப்பிட்ட ஆசிரியர் விசாரிக்கப்பட்டுக் குற்றம் இழைத்திருந்தால் ஆசிரிய தொழிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.
2. உரியநேரத்தில் இந்த விடயத்தை தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்காத அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தண்டிக்கப்படுவது அவசியமானது.
3. பாதிக்கப்பட்ட மாணவிக்கான நிவாரணம் சட்டப்படி வழங்கப்படல் வேண்டும்.
4. பலர் ஏற்கனவே பிழைவிட்டுத் தப்பிவிட்டோம் என்று இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.
5. குற்றம் புரிந்தவரை பிரதான அலுவலகத்திற்கு எடுத்து வேலை செய்யாமல் சம்பளம் வழங்கிய அதிகாரிகள் தண்டிக்கப்படல் வேண்டும். (பாலியல் குற்றம் புரிந்தவருக்கு உயர் கௌரவம் வழங்கியதற்காக)
6. இவ் விடயங்களை மூடி மறைக்க முற்பட்டவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும்.
7.இவ்விடயங்களைத் தங்களளவில் சமாளித்த சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேலியே பயிரை மேய்வது போல செயற்பட்டதற்கு தண்டிக்கப்படுவதுடன், அக்குறிப்பிட்ட சமூக பொறுப்புள்ள பதவியை துஷ்பிரயோகம் செய்ததற்காக அவர்களிடமிருந்து அப்பதவியைப் பறித்தலும், தண்டனை வழங்கலும்.
8. பாடசாலைச் சூழலில் பொலிஸ் கண்காணிப்பு இருத்தல் வேண்டும்.
9. எந்த ஒரு பெற்றார் அல்லது மாணவர்கள் பொதுமக்கள் என்போர் தாம் பிழையான விடயம் ஒன்றைக் கண்டால் உடனடியாக அறிவிக்கக்கூடிய தொலைபேசி இலக்கங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படல் வேண்டும்.
10. பாடசாலை முடிவுற்றபின் பாடசாலையில் பிரத்தியேக வகுப்புக்கள் விடயத்தில் பாடசாலை அதிபர்கள், நேரடிக் கவனம் செலுத்துதல்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தமது பாடசாலை விடயத்தில் விசேட கவனமெடுத்து பொதுக்கூட்ட தீர்மானத்தின்படி சில ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்ளமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் விடயத்தில் விசேட கவனமெடுப்பது அவசியமாகிறது.

**இந்தவிடயம் ஒரு வெகுசனப் போராட்டமாக உருவெடுக்கப்படுவது அவசியமாகும். அவ்வாறுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும் பட்சத்தில் தான் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் இந்த முயற்சி தொடர்வெற்றியை இச்சமூகத்தில் கொண்டு வரும்.**

அவ்வாறு வெகு ஜனங்கள் வெகுண்டெழும் போது பாலியலை இலஞ்சமாகப் பெற்ற பல்கலைக்கழக ஆசிரியர்களும் வேறு பல ஆசிரியர்களும் கடந்த காலச் செயற்பாடுகளாலும் நிகழ்காலச் செயற்பாடுகளாலும் தண்டிக்கப்படநிறையவே வாய்ப்பிருக்கும். ●

**நந்தன்**

## இப்படியும் ஒரு நாடகம்



ஒரு நாடகத்தில் தகப்பனுக்கு நடித்தவர் கட்டிலில் படுத்துக்கிடப்பதாகவும், விமானம் வரும் சத்தம் கேட்டதும் எழுந்து வந்து Mohan is Coming என்று வசனம் பேசவேண்டும் என்பது ஏற்பாடு. கட்டிலில் கொஞ்சநேரம் படுத்துக்கிடந்தவர் அப்படியே நித்திரை கொண்டுவிட பிளேன் சத்தம் கேட்டதும் எல்லோரும் எதிர்பார்த்தபடி அவர் எழுந்திருக்கவில்லை. அதன் பின்பு தான் தெரியும் அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார் என்று.

# அனுபவப் பகிர்வு

சிறைக்குள் என்ற இந்நூல் 2002 ஆம் ஆண்டு மாஸ்ரர் என்பவரால் எழுதப்பட்டதாகும். இவர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 2 வருடங்கள் சிறைத்துன்பத்தை அனுபவித்தவர். போகம்பற, களுத்துறை, பூசா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அனுராதபுர சிறைகளில் தனது சிறை வாழ்க்கையை அனுபவித்தவர். இக்கொடிய நாட்களின் தனது சிறை அனுபவங்களைக் குறிப்புக்களாக எழுதி, இன்னும் பல கைதிகளின் அனுபவங்களையும் தொகுத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 2002 இல் எழுதப்பட்ட இந்நூல் எந்தவித மாற்றங்களும் செய்யாது அவ்வாறே வெளியிடப்படுகின்றது. – ஆசிரியர்

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

வெளிச்சூழலை நினைக்கின்ற போது தலைவிறைப்பது போன்று இருந்தது.

பகல் சாப்பாடு தருவதற்கு முன்பு குளிக்கச் சொன்னார்கள். குளித்தேன். பிற்பகல் 12.30 மணியளவில் பகல் சாப்பாடு தயார் என்றவுடன் ஒரு மணியடிக்கும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து கடமையில் இருந்த ஊழியர் ஒருவர் கதவுகளை வேகமாகத் திறந்து கொண்டே போனார். எல்லோரும் காயவைத்த உடுப்புகளையும், வெளியில் கிடந்த தகரவாளிகள் போன்றவற்றையும் அறைக்குள் எடுத்துவைத்தார்கள்.

சாப்பாடு கொண்டு வந்ததும் வரிசையாக நின்று அலுமினிய கோப்பைகளில் வாங்கினோம். ஏதோ சாப்பிட்டு ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் சாப்பிட்டோம். சாப்பாடு தந்த 15 நிமிட இடைவெளிக்குள் மீண்டும் “போலின்” என்று சத்தம் போட்டார்கள். மீண்டும் அறைக்குள் பூட்டப்பட்டோம். பிற்பகல் 2.00 மணியளவில் ஒரு பாட்டிக்காரன் சீனி கொண்டு வந்தான். ஒரு பலகைப் பெட்டிக்குள் கொஞ்சம் சீனி இருந்தது. ஒரு வட்டமான கரண்டியால் (அது ஒரு அளவு கரண்டி, அந்த வடிவத்தில் வெளியில் நான் எங்கும் கண்டதில்லை) ஒரு கைதிக்கு ஒன்று என்ற அடிப்படையில்தந்தார். பூட்டிய அறைக்குள் இருந்து ஒரு பிளாஸ்ரிக் போத்தலை நீட்ட அவன் போட்டுவிட்டுப் போனான்.

பின்னர் அறிந்தேன் அவர் சீனி அளந்த போட வரும்போது ஒரு கைதி தனது நண்பர் ஒருவர் வேறு பகுதியில் அடைக்கப்பட்டிருந்தால் இந்தச் சீனிக்காரன் மூலம் தகவல் அனுப்ப முடியும். அதேவேளை, சில பொருட்கள், காசு என்பனவற்றையும் அவனூடாக பரிமாற வாய்ப்பிருக்கும். சிறை அலுவலர்கள் பரிசோதித்து அவற்றைப் பிடித்துவிட்டால் அவனுக்கு அடிப்பார்கள். அதேவேளை அந்த வேலைக்கு அவனை குறிப்பிட்ட நாட்களுக்கு அனுமதிக்கமாட்டார்கள்.

கடூழியச் சிறைத்தண்டனை பெற்ற கைதிகள் 5 தொடக்கம் 175 வருடங்கள் வரை இருந்தார்கள். (வாசகர்களின் விளக்கத்திற்காக இவற்றை குறிப்பிடவேண்டிய தேவை




உள்ளதால் எழுதுகிறேன்) சிறைச்சாலைகளில் அலுவல்களை கவனிப்பதற்கு அங்குள்ள ஊழியர்களின் தொகை போதாது. இதனால் இவ்வாறான தண்டனை விதிக்கப்பட்டவர்களை (அச்சுக்காரர் என்று சிங்களத்தில் கூறுவார்கள்). ஒவ்வொரு வேலைகளுக்காக பிரித்துப் போடுவது உண்டு. **இக்கைதிகளுக்கு தண்டனை கொடுத்த மறுநாளே அவனது படிப்பு, ஏற்கனவே அவன் செய்த தொழில், ஏனைய அனுபவங்களை மையமாக வைத்து ஒவ்வொரு துறைக்குமாற்றப்படுகிறார்கள்.**

அவர்களையும் ஏனைய கைதிகளைப் போலவே பூட்டித் திறக்கிறார்கள் எனினும் அலுவலகங்களிலும், சமையற் பகுதியில் வேலை செய்பவர்களும் நீண்டநேரம் வெளியில் நின்று வேலை செய்ய வேண்டியிருக்கும். ஒரு குறிப்பிட்ட அச்சுக் கைதி (குற்றம் தீர்க்கப்பட்ட) எந்த குழுவில் வேலை செய்கிறானோ அதைக் கொண்டே அழைக்கப்படுவான். உதாரணமாக ரெயிலர் பாட்டி (Tailor Party) குசினி (Kitchen) லோன்றி (Loundry) தச்சுவேலை (Carpenter) நெசவு (Weawing) பின்னல் வேலை (Rattan) அலுவலகம் (Office) அதிலும் ஒவ்வொரு உயர் அதிகாரிகளின் அலுவலகங்களில் பணிபுரிவோரை அவர்களின் அதிகாரிகளின் பதவி நிலையுடன் இணைத்து அழைப்பதுண்டு. (SP Party)

இவர்களது தண்டனைக் காலம் முடிவதற்கு 2 மாத காலம் குறைவாக இருக்கும்போது வெளி வேலைகளுக்கு சிறைச்சாலைக்கு வெளியில் கூட்டிச் செல்லப்படுவர். உயர் அதிகாரிகளின் வீட்டு வேலைகள், பொருட்களை வாங்கும்போது மூட்டைகளை தூக்குவதற்கு, சிறைச்சாலைகளின் வெளி மதில்களை திருத்தம் செய்ய, வெள்ளை அடிப்பதற்கு போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்படுவர்.



அதிககாலம் சிறையில் இருக்க வேண்டியவர்களை வெளியில் கொண்டு போனால் அவர் தப்பியோடுவதற்கு வாய்ப்புண்டு.

பிற்கபல் 2.30 மணிக்கு மீண்டும் அறைக் கதவுகளை திறந்தனர். போகம்பர கதவுகள் மரத்தினால் செய்யப்பட்டவை. 3" சிலாகைகளைக் கொண்டு 1 அடி இடைவெளியில் அக்கத்வுகள் பொருத்தப்பட்டுள்ளன.

D பிரிவு கதவுகள் யாவும் ஆரம்பத்தில் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளை தூக்கில் இடுவதற்கு முன்னர் பூட்டி வைத்திருக்க தயாரிக்கப்பட்டதாகும். அந்த அறைக்குள் கல்லினால் பொழியப்பட்ட தலையணை ஒன்று சுவர் ஓரமாக கட்டப்பட்டுள்ளது. ஒரு பக்கத்தில் சிறிய கழிப்பறை மேடை உள்ளது. அது ஒரு கழிப்பறை வடிவத்தில் ஒரு திட்டாக ஒன்றரை அடியில் அமைக்கப்பட்டுள்ளது. அது 6 அங்குல விட்டமுள்ள ஓர் ஓட்டை வெளிப்புறமாக மட்டுமே உள்ளது.

மலம் கழித்த வாளியில் வெளியே எடுக்கக்கூடிய ஓட்டை உண்டு. கதவின் கீழ் பாகத்தின் நிலத்தடியில் ஒரு அடி நீளமும் 3 அங்குல அகலமும் கொண்ட ஒரு நீள்சதுர இடைவெளி உண்டு. அதன் ஊடாக சாப்பாட்டுக் கோப்பைகளைத் தள்ளி எடுக்க முடியும். இதைவிட வேறு எந்த வசதிகளும் இல்லை. ஒரு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதி வெளியில் வர வாய்ப்பில்லை.

இவ்வாறு அடைத்து வைக்கப்படும் கைதிகள் வாரத்திற்குஒரு தடவை மற்ற அறைகளுக்கு மாற்றப்பட்டு தூக்கில் தொங்க விடப்படும் அறையை நோக்கி மாற்றப்படுவார்களாம். தூக்குக் கயிறு அறைக்கு பக்கத்து அறைக்குள்ஒரு கைதி பூட்டப்பட்டால் மறுநாள் அக்கைதி தூக்கப்படுவான் என்று அர்த்தம். இவ்விபரங்களை பின்னாளில் சிறை அதிகாரிகள் மூலமாகவும் வயதான கைதிகள் சிலர் மூலமும் அறிந்து கொண்டேன்.

(அடுத்த இதழில் தொடரும்...)




நன்றி

# பிரான்சிஸ் சேவியரை மறக்காதிருப்போம்



இலங்கை அரசின் ஒடுக்கு முறைக்கு எதிராக செயற்பட்டு காணாமற் போனோர் மற்றும்சிறைப்பிடிக்கப்பட்டதமிழ்மக்களுக்கு இலவச சட்ட உதவிகளைப் புரிந்து பலரது வாழ்வில் மீண்டும் சுபீட்சத்தை ஏற்படுத்திய பெருமகன்.

25.07.1933 இல் யாழ்ப்பாணம் நாரந்தனையில் பிறந்த இவர், ஒரு சட்டத் தரணியாவார் வடகிழக்கிலும், கொழும்பி லும், மலையகத்திலும் வாழ்ந்த தமிழ் மக்களுக்கு மனித உரிமைகள் இல்லத்தி னுடாக இலவசச்சட்ட உதவியை வழங் கியவர்.

1977 இல் யாழ்ப்பாணத்தில் **மனித உரிமைகள் இல்லத்தை** ஆரம்பித்து, 1984 இன் பின் கொழும்பில் இவ்வமைப்பு செயற்பட்டது.

1987 இல் ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கான பிரேர ணையைக் கொண்டு வந்தவர். பிரபல சட்டத்தரணிகள், அரசியல் வாதிகள் என்று கூறிக்கொள்ளும் பலர் இலட்சக்கணக்கில் பணத்தை உருவிக்கொண்டு கைதிகளை விடுதலை செய்ய பிரான்சிஸ் சேவியர் ஐயாவின் சட்டத்தரணிகள் சிறைச்சாலைகளுக்குச் சென்று கைதிகளைச் சந்தித்து அவர்களை நீதிமன்ற நடைமுறைகளுக்கூடாக விடுவித்தனர்.

# நல்லியர் நட்ட அரச மரங்கள்



**சின்னட்டி நல்லியர்.** இவர் ஒரு வண்ணார சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் திருவிழாவின் போது தண்ணீர்ப் பந்தல் வைக்க முற்பட்டபோது வேளாள சமூகத்தால் தடுக்கப்பட்டவர். இதன்பின் நல்லூர்க் கந்தனை வணங்கி, மனமுருகி அழுதிருக்கிறார். அதன் பின் அவருக்கு வந்த சிந்தனையில் உதித்தது வீதி யோரம் அரச மரங்களை நாட்டுவது என்பதும், மனிதருக்கு தண்ணீர் ஊற்ற விரும்பாத மக்கள் மத்தியில் மாடுகளுக்கு தாகம் தீர்ப்பதற்காக தனது வீட்டிற்கு வெளியில் தொட்டி அமைத்து தண்ணீர் விட்டவர்.

நல்லூரிலிருந்து கோம்பயன் மணல் சுடலை வரைக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து மாவிட்டபுரம் வரைக்கும் ஒரு தனிமனிதனாக நல்லியர் என்பவர் வண்டிலில் அரசமரக் கன்றுகளை கொண்டு சென்று நாட்டியவர். அம் மரங்களில் ஒரு சில இன்றும் நிலைத்திருப்பது நல்லியரின் பெருமைக்குச் சான்றாகும்.

நாவலர் வீதியில் அரசடி, இந்து மகளிர் கல்லூரிக்கருகில் உள்ள அரசடி, தட்டாதெரு தாண்டி கோம்பயன்மணல் வரையான அரச மரங்கள், தட்டாதெரு அரச மரம், மனோகராச்சந்தி அரசமரம் (அண்மையில் தறிக்கப்பட்டுள்ளது), உப்புமடப் பிள்ளையார் கோயிலடி அரச மரங்கள், மல்லாகம் சந்திக்கு அருகிலுள்ள அரசமரங்கள் என இவை அனைத்தும் நல்லியரின் நிழல் என்பது பலருக்குத் தெரிந்திருப்பதில்லை.

மரம் நாட்டுதலில் எமது மூத்த சந்ததியில் போற்றத்தக்க ஒருவராக நல்லியர் காலத்தால் நிலைத்து நிற்கின்றார்.

பொருளாதார மத்திய நிலையத்திற்கான இடத்தைத் தெரிவு செய்வதில் ஏன் இவ்வளவு கயிறிழுவை. வடமாகாண சபையிலும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும், ஓமந்தையில் அமைக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

தமிழ்த் தலைவர்கள் பல குழுக்களாகப் பிரிந்து நின்று, (தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு) மாகாண சபையெனவும், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனவும் பிடுங்குப்படுவது இந்தப்பிரச்சினையின்மையமாகும். தமிழ் மக்கள் தமது உற்பத்திப் பொருட்களை நல்ல விலைக்கு விற்கவேண்டும் என்பதையோ அதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் ஒரு சிறந்த வாழ்க்கைத் தரத்தை எட்டவேண்டும் என்பதையோ இது பற்றிப் பேசுபவர்கள் கருத்தில் எடுக்கவில்லை என்பது தெரிகிறது.

இவர்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் எதிர்க்கட்சித் தலை-வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய சம்பந்தனுக்கு இல்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. தமிழ்த் தலைவர்கள் ஒரே கட்சிக்குள் இருந்துகொண்டு வித்துவம் காட்டுவதையோ அல்லது வீர விளையாட்டுக்களைக் காட்டுவதையோ முதலில் தவிர்க்கவேண்டும். இதனால்தான் தமிழ் மக்களுக்கு கிடைக்கவேண்டியபல விடயங்கள் கடந்தகாலத்தில் கிடைக்காது போயிற்று.

தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமையின்மையும், திறமையின்மையும் மற்றவர்களின் தலையில் தள்ளிவிடுவதில் வல்லவர்களாக உள்ளனர்.

ஏனைய இனத் தலைவர்கள் தமது மக்கள் மீதும், அந்த மக்களின்



# வடக்கின் பொருளாதார மத்திய நிலையம்

எதிர்கால வாழ்க்கை மீதும் அக்கறை உள்ளவர்களாக இருப்பதால் வாக்களித்த தமது மக்களுக்கு எதையாவது செய்துவிட வேண்டுமென நினைக்கின்றனர். தமது பதவிக் காலத்திற்குள் எதையெதையெல்லாம் செய்து முடித்துவிடவேண்டும் எனவும் சிந்தித்து செயற்படுகின்றனர். அவ்வாறான தலைவர்கள் மீது தமிழ்த் தலைவர்கள் குறைகூறுவதில் அர்த்தம் இல்லை.

தமிழர்கள் அனைவரும் திறமையற்றவர்கள் என்று கூறிவிட முடியாது. அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்கள் தான் திறமையற்றவர்கள் என்பது உண்மை. **வடமாகாணசபை இப்படித்தான் குழம்பிப்போகும் என்று சிங்கள ஆட்சியாளருக்கு தெரிந்திருந்தால் வடமாகாணசபையை எப்போதோ தமிழரிடம் கொடுத்திருப்பார்கள்.**

நெப்போலியன் கூறியது போல " எதிரியின் வீரசாகசங்கள் அல்ல, எமது கோழைத்தனமே" என்பதைத் தமிழ்த் தலைவர்கள் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேட்பதுபோல ஏற்கனவே முடிவெடுத்த ஒரு விடயத்தை மாற்றியது யார்? என்பதே சரியான கேள்வி.

-திரு

# தமிழ்த் தலைவர்கள்

சிங்களவன் கெட்டவன் என்றீர்
ஆம்! என்றோம்.
முஸ்லிம்கள் கெட்டவங்கள் என்றீர்
ஆம்! என்றோம்.
ஏனைய தமிழ்க் கட்சிகள்
கெட்டவர்கள் என்றீர்
ஆம்! என்றோம்.
இப்போ..
உங்களுக்குள்ளேயே
கெட்டவர்களைத் தேடுகிறீர்கள்
பாவம் நாங்கள்...

நாங்கள் வாய் திறந்து யாரையும்
கெட்டவர்கள் என்று கூறவில்லை...
கல்லில் காலை அடித்து
காயப்படுத்திவிட்டு
"கல் அடித்து விட்டது" என்று
கூறுவது பிழையல்லவா?
உண்மை சொல்லுங்கள்
ஒருதரம் அல்ல நூறுதரம்

விமலன்

# பக்கத்தில் பனம் பழங்கள் இருந்தும் பயன்படுத்த மறந்தோமே



பேராசிரியர்
பொன்.நவரட்ணம்

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

**எனவே இயற்கையாகக் கிடைக்கும் அருமருந்து கொண்டதே பனங்களியாகும். இதைவிடக் கரையா நார்களும் உண்டு. இவை மலச்சிக்கல் நிலையைக் குறைக் கின்றது அல்லது நீக்குகின்றது. எனவே ஒரே பொருளான களியில் அல்லது பனாட்டில் இம்மூன்று இயல்புகளையும் ஒருங்கே பெற வாய்ப்புண்டு.** உணவுடன் சேர்த்தோ, தனித்தோ நாள்தோறும் உண்பதால் நன்மையடையமுடியும். பனாட்டை அதிகம் அளவோடு உண்டு குருதி வெல்லச்செறிவில் பெரிய சரிவை நீரிழிவு நோயுள்ளவர்கள் அவதானித்துள்ளனர். இதை மக்கள் விரும்பும் வடிவில் மாற்றியமைத்து விற்பனை நிலையங்களில் கவர்ச்சி யுடன் காட்சிக்கு வைப்பின் நம்ம வர்கள் அதனால் ஈர்க்கப்படுவதுடன் தயாரிப்பவர்களும் பெரும் இலாபம் ஈட்டும் நிலைக்கு உயர்த்தப்படுவர். அந்நிலை விரைவில் வரும் என எதிர்பார்த்திருப்போம்.

பனம்களியைப் பாலுடன் கலந்து பானமாக அருந்தும் பழக்கம் தென்பகுதி மக்களுக்கு உண்டு என் பதை எனக்குக். கிடைத்த சந்தர்ப்பத் தால் அறிந்து கொண்டேன். அது நல்ல சுவையுடையது தான். வடக்குக் கிழக்கு மக்கள் இதற்குப் பழக்கப் பட்டவர்களாகப் பெரிதும் இல்லை. ஆனால் பனங்களியை மாவுடன் பிசைந்து எண்ணெயில் பொரித்துத் தயாரிக்கப்படும். பலகாரம் மிக வும் பாரம்பரியப் பனங்காய்ப்பல கார மாகும். இது வீடுகளில் நிகழ்வதை விட உடனுக்குடன் செய்து சில பொருட்காட்சியரங்குகளில் விற்கப் படுவதையும் பார்க்க முடிகின்றது. சூடாக உண்பதும் ஆறிய பின்பு உண்பதும் வேறுபட்ட மெது மையுடன் கூடிய தன்மையை உணரவைக்கின்றது.

சிலர் பனங்களியை அரிசி மாவுடன் சேர்த்துக் களியாகத் தயா ரித்துக் காலை மாலை உணவாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. வேறு சிலர் பனங்களியுடன் கூடிய மாவு ருண்டைகளை இட்டுக் களியை செய்து மாறுபட்ட உணவு உண் ணும் உணர்வைப் பெறுவதுண்டு.

தேங்காய்ப் பாலும் சிறிதளவு வெல்லமும் சேர்ப்பின் இதன் சுவை உயர்வதாக உணரமுடிகின்றது.

சூரிய வெப்பத்தினால் இலகு வாக உலர்த்திப் பெறப்படும் பனங்களி, பனாட்டாக (Dried pulp) உருப் பெறுகிறது. மென்தட்டுக்களாக்கி, புகையூட்டிச் சேமித்து அதனை ஒருவருடமளவு காலம் வைத்துப் பாவிக்கின்றனர். இது ஏழைகள் மட்டுமல்ல விபரந்தெரிந்தவர்கள் அனைவரும் அளவுடன் பயன் படுத்திப் பயனடைகின்றனர். மாரி காலத்தில் முன்னோர்கள் இதைப் பயன்படுத்தி ஒரு நேர உணவைச் சமாளித்துக் கொள்கின்றனர். வய லில் வேலை செய்வோர் நீண்ட நேரம் பசியெடுக்காதிருக்கப் பனாட் டைப் பயன்படுத்துகின்றனர். பகற் பொழுதில் கூழுடன் சேர்த்தும் உண்கின்றனர். சிலர் பனாட்டைத் துண்டுகளாக்கி வெல்லப்பாணியில் அமிழ்த்தி, சுவையூட்டிகள் மற்றும் வாசனைத்திரவியங்களையும் சேர்த் துப் பாணிப்பனாட்டுத் தயாரிக்கின்ற னர். இது உண்பதற்கு இரம்யமானது.



பனங்களி அல்லது பனாட் டுக் கொண்டிருக்கும் மஞ்சள் அல் லது செம்மஞ்சள் நிறப்பொருளான கரட்டீன் ((போலியானது) உண்ணும் போது திணிவு அளவில் 1/6 பங்கு விற்றமின் A ஆக மாறுவதால் அவ் விற்றமின் எம்மையறியாமல் எமதுடலுள் சேர்ந்து கொள்வது பனங்களியின் பயனை உயர்த்தி நிற்கின்றது. இந்தக் கரட்டீன் போலியைத் தனித்துப் பிரித்து எடுத்துப்பயன்படுமளவிற்கு ஆராய்ச்சி கள் நிகழ்கின்றன. இது உணவு நிறமூட்டியாகவும் பயன்படுத்தப்பட வாய்ப்புண்டு.

பனம்பழத்திலுள்ள பிளபெலி பெரின் (Flabelliferin) எனும் பதார்த்தம் மருத்துவ முக்கியத்து வம் வாய்ந்தது. இதில் முக்கிய நான்கு கூறுகள் காணப்படுகின்றன. பிளபெலிபெரின் b(Flabelliferin) முக்கியமாக நுண்ணுயிர்க் கொல் லியாகத் தொழிற்படுகின்றது. பிளபெலி பெரின் 11 (Flabelliferin 11) கசப்புத்தன்மைக்கு உரிமை கோரு கிறது. பிளபெலிபெரின் a ( Flabelliferin a), எவ்வியல்புக்கும் உரித்தானதல்ல. பிளபெலிபெரின் b (Flabelliferin b ) யானது நுரையுடன் கூடிய அழுக்ககற்றும் இயல்புகொண்டது. எனவே தான் நம் முன்னோர்கள் அழுக்ககற்றியாக வும் (உடுப்புக்கள் தோய்க்கவும்), புண்களில் வைத்துக்கட்டும்போது அது விரைவில் ஆறிப்போவதையும் கருத்திற் கொண்டு பனங்களியைப் பயன்படுத்தியிருக்கின்றனர். கசப் புத் தன்மைக்குரித்தான கூறு இத யத்திற்கு இதமான நிலை-யைக் கொடுக்கின்றதென முன்பு குறிப்பிடப்பட்டுள்ளது.




இக்கசப்புக்குரியதான பிளபெலி பெரின்11 (Flabelliferin11) வகை, சில பழங்களில் அமைந்திருக்கும் நரிஞ்சின் ( Narringin) எனும் கசப்புத்தன்மையுடைய பதார்த்தத் திற்கு ஒப்பானது. நரிஞ்சினேசு (Narringinase) எனும் நொதியம் அது நீர்ப்பகுப்பு அடைவதற்கு உதவுகின்றது. இந்நொதியம் பிளபெலி பெரினையும் நீர்ப்பகுப்படையச் செய்து கசப்புத்தன்மையை அகற்றி விடுகின்றதென்ற செய்தி எம்மை பனையின் உச்சிக்கு கொண்டு செல்கின்றது. ஏனெனில் சரியான அளவில் நொதியம் பெருமளவு பனங்களிக்குள் பொருத்தமான நிபந் தனையில் சேர்க்கும் போது கசப்புத் தன்மையில்லாத நடுநிலையான (neutral pulp) பனங்களியாகின் றது. இது உணவு பதனிடும் தொழிற் சாலைகளில் சடத்துவ நிரப்பிப் பொருளாக (Innert filling material) ப் பயன்படுவதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் மவுசைப் பெற்றிருக்கும். இந் நொதியம் இங்கு தயாரிக்கப்படு வதில்லை. அத்துடன் இதை வெளி நாட்டிலிருந்து தருவித்துப் பயன் படுத்தப் பெரும் செலவாகும். ஆதலால் நடுநிலைப் பனங்களியாக் கம்பொருளாதாரச்சாத்தியமற்றதாகிய தென்று முடிவாகியது.

பனங்களியில் உள்ள வெல் லத்தின் மேல் மதுவம் வளர்ந்து அல்ககோல் நொதித்தல் நிகழ்ந்த பின் வரும் பாய்பொருள் நிலையில் உள்ள பிரித்தெடுப்பில் (Extract) நுரைக்கும் (Froth forming) பதார்த்தம் இருப்பதும், கசப்புத் தன்மை இருப்பதும் நல்லதோர் பழம்சார் அல்ககோல் கொண்ட பியர் (Beer) போன்ற பானம் தயாரிப்பதற்கு வழி சமைப்பதுடன்

(அடுத்த இதழில் தொடரும்...)








2016 மார்கழி மாதத்திற்குள் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படாவிட்டால் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும், வடகிழக்கு மாகாணசபை கூட்டமைப்பு உறுப்பினர்களும் பதவிகளை இராஜினாமா செய்வதென்பது

# சரியா? தப்பா?




## சரி:

2015 ஜனவரி எட்டாம் நாள் ஒரு தீர்க்கமான முடிவினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுத்ததாக அதன் தலைவர் சம்பந்தன் கூறிவருகின்றார். அது எந்த அடிப்படையில் கூறப்பட்டது என்பதில் அக்கட்சிக்குள்ளேயே தெளிவில்லை.

2016 இல் **"இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படவுள்ளது"** தமிழ் மக்கள் அனைவரும் ஒருமித்து வாக்களிக்கவேண்டும் என ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி பால சிறிசேனவை பதவிக்குக் கொண்டு வந்து நல்லாட்சியின் கீழ் எல்லாம் கிடைக்கும் பொறுமையாய் இருங்கள் என்றார் சம்பந்தர்.

அதேவேளை பாராளுமன்றத் தேர்தலிலும் இதைக்காட்டியே வயதான காலத்திலும் பாராளுமன்றத்திற்குள் போய் அங்கு தமிழர் பிரச்சினை பற்றிக் கதைக்கும்போது தமிழ்ப் பிரதிநிதிகள் எதை யாவது திண்டுகொண்டு அல்லது வேறு எதையாவது நோண்டிக்கொண்டு அல்லது நித்திரை செய்தவாறு இருக்கின்றனர்.

போதாக்குறைக்கு 50 இற்கும் மேற்பட்ட கூட்டங்களை நடத்திய வடமா-காண சபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மையாக ஆட்சியமைத்திருந்த போதிலும், ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் அவர்களுக்குள்ளே **அக்கப்போர்** நடந்துகொண்டிருக்கிறது.

2009 இன் பின் இதுவரை யுத்தத்தில் இறந்துபோனவர்களின் தரவுகளோ, காணாமற்போனோரின் தரவுகளோ, காயப்பட்டவர்களின் தரவுகளோ எதுவும் கையில் இல்லாது இருப்பதற்கு ஒரு கட்சி, உறுப்பினர்கள் தேவைதானா?

தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெறு-மனே மக்களை ஏமாற்றுவதற்காக அல்ல. அவை ஆழ்ந்து அவதானிக்க வேண்டியவை. செயற்படுத்த வேண்டியவை. ஏனைய கட்சி அவ்வாறுதான் செய்கின்றன. தமிழ்மக்கள் தொடர்ந்தும் ஏமாறுவதில் அர்த்தமில்லை.

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னிலையில் ஐ.நா. மனித உரிமைத் தீர்மானம் வலுவிழந்து விட்டது, அரசியற் கைதிகளின் விடுதலை கிடப்பில் கிடக்கிறது. மீள்குடியேற்றம், பொருளாதார மத்திய நிலையம், வீட்டுத்திட்டம், இந்திய மீனவர்கள் பிரச்சினை, சிங்கள மீனவர்கள் பிரச்சினை, பௌத்த கோயில்களை அமைப்பது என தமிழருக்குப் பாதகமான எல்லாமே நடந்தேறிவிட்டன. தற்போது நயினாதீவில் அதியுயர் புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டும் வருகிறது.**

முள்ளிவாய்க்கால் படுகொலை, மாவீரர் தினம், சுனாமி பேரழிவுநாள் என போகத்துக்குப் போகம் 05 நிமிடம் விளக்கு கொழுத்தி வரிசையில் நிற்பதற்கு இவ்வளவு பெரிய முதலீடும், முயற்சியும் தேவைதானா?

**"புதிய அரசியல் சீர்திருத்தத்தை மகிந்த குழப்பாது விட்டால் 2016 இல் தீர்வு நிச்சயம்"** என்று சம்பந்தர் புதுக்கதையொன்றைத் தொடக்கியிருக்கிறார்.

தமிழ் மக்கள் மகிந்தவுக்கு எதிராக வாக்களிப்பதால் மட்டும் அதனை வெல்லமுடியாது. தமிழீழம் அல்ல சமஷ்டி என்பதை சிங்கள மக்கள் மத்தியில் கூட்டமைப்பினர் எடுத்துச்செல்லத் தவறிவிட்டனர். சிங்கள ஊடகங்களை இத்தேவைக்குப் பயன்படுத்துவதிலும் தவறிவிட்டனர்.

வடக்கு - கிழக்கிற்கான ஓர் எதிர்க்கட்சித் தலைவரை முழு இலங்கைக்குமான ஒருவராக சிங்களவர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இந்தச் சூழலில் 2016 டிசம்பரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும், வடகிழக்கு மாகாணசபை உறுப்பினர்களும் ஒருமித்த முடிவுடன் தமது பதவிகளை இராஜினாமா செய்யும்போது,

இலங்கைக்குள்ளேயும், இந்தியாவிலும், சர்வதேச அரங்கிலும் லும் தமிழருக்கான நியாயமான தீர்வு இன்னும் எட்டப்படவில்லை என்பதை புடம்போட்டுக்காட்ட முடியும். அதே வேளை, மேற்படி தரப்பினரை தமிழரின் பிரச்சினையின் பால் பங்கெடுக்கவைக்கவும் வைக்கமுடியும்.

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை வெளிநாடுகளில் உள்ள தமது சொத்துக்களையும், குடும்பத்தையும் இங்கு கொண்டுவருமாறு தமிழ் மக்கள் ஒரு போதும் கேட்கப்போவதில்லை. தமது பதவிகளை மட்டும் இராஜினாமா செய்வதன் மூலம் வெளிநாடுகளுக்குச் செல்லமுடியாது இந்த நாட்டிலேயே வாழ்ந்து சாகவிருக்கும் தமிழருக்கு ஒரு தார்மீக உதவியைச் செய்ததாக இருக்கும்.**

பிரித்தானியப் பிர-தமராக இருந்த டேவிட் கமரூன் பாணியில் கையசைத்துவிட்டு வீடுசெல்வதால் கௌரவமாவது இருக்கும். கமோன் சம்பந்தர் ஐயா

## தப்பு :

ஒரு நீண்டகால அகிம்சைப் போராட்டம் அதன் பின் 30 வருட ஆயுதப்போராட்டம் அதன் தோல்வியின் பின்பான சூழல் என்று பார்த்தால் தீர்வுக்காக நீண்டகாலம் அர்ப்பணிப்புடன் காத்திருக்கவேண்டியது அவசிய மாகும்.

சம்பந்தர் ஐயா குறிப்பிட்டதுபோல 2016 இற்குள் தீர்வு எட்டப்படாது விட்டால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அனைவரும் இராஜினாமா செய்வதில் புதிதாக எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

முரண்பாடுகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளே வலுவடைந்துள்ள நிலையில் அனைவரும் தீர்வின்றி இன்று இராஜினாமாக செய்வதில் அர்த்தமில்லை. அதற்கான அர்ப்பணிப்புகளைத் தொடர்ந்து செய்யவேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உள்ளது.

தமிழ் மக்களுக்கிடையில் இருக்கும் முரண்பாடுகளுக்கு அப்பால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு பெரும்பான்மையோர் வாக்களித்தது இத்தலைவர்கள் பற்றி அறிந்திருக்காமல் அல்ல. வேறு வழியின்றியே வாக்களித்தார்கள்.

அடுத்தகட்ட வளர்ச்சி அல்லது மாற்றத்தை நோக்கிச் செல்லும்வரை ஏதோ இழுத்துத்தான் ஆகவேண்டும். இன்னும் 04 மாதங்களில் எதுவும் தமிழருக்குச் சார்பாக நடந்துவிடப்போவதில்லை. எனவே, இவ்விடயமாக கதைப்பதற்கு ஓர் அமைப்பு அவசியம் என்பதால் இப்போதைக்கு அவ்வமைப்பைப் பாதுகாப்பதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இருக்கவேண்டிய தேவையுள்ளது. அரசியலில் வெற்றிடம் ஏற்பட்டால் அதை மீண்டும் சீர் செய்வது மிகக் கடினமான பணியாகும். எனவே, பதவிகளை இராஜினாமாச் செய்வது தப்பானது.

# பாடசாலை சமூகத்திற்கு மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் விடுத்துள்ள எச்சரிக்கை

மாணவிகள் மீது பாலியல் வதை புரிவது சட்டரீதியாக பாரதூரமான குற்றமாகும். அதிலும், ஆசிரியர்களே மாணவிகள் மீது பாலியல் வதை புரிவது மேலும் மோசமான குற்றமாகும்.

எனவே, **பாடசாலை மாணவிகள் மீது பாலியல் இம்சை புரியும் ஆசிரியர்கள் பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் அடைக்கப்படுவார்கள்** என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை செய்துள்ளார்.

யாழ் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்



பட்ட பிணை மனு ஒன்று சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்றின் போது, சமூக விரோதக்குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடுகையிலேயே, நீதிபதி இளஞ்செழியன் இவ்வாறு கடுமையாக எச்சரித்துள்ளார்.

அந்த எச்சரிக்கை மற்றும் அறிவுறுத்தல்களில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

**பாடசாலை மாணவிகள் மீது பாலியல் வதை அல்லது பாலியல் இம்சை புரியும் ஆசிரியர்களின் குற்றச்செயல்கள் நிரூபிக்கப்பட்டால், குற்றவாளியாகக் காணப்படுபவருக்கு பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை விதிப்பதற்கு தண்டனைச் சட்டக் கோவையின் 365 பிரிவில் சட்டம் பரிந்துரை செய்கின்றது.**

**பதினாறு வயதுக்குக் குறைந்த மாணவிகள், பாடசாலை வளாகத்தில் அரச கடமையில் உள்ள ஆசிரியர்களின் அதிகாரபூர்வமான கட்டுப்பாட்டில் இருக்கும்போது, அந்த மாணவிகள் மீது பாலியல் வதை புரிவது பாரதூரமான குற்றமாகும்.**

இத்தகைய குற்றம் புரியும் ஆசிரியர்களுக்கு தண்டனைச் சட்டக் கோவையின் விதிகளுக்கு அமைவாக, 7 ஆண்டுகளில் இருந்து, 15 ஆண்டுகள் வரை கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

மாணவிகள் அல்லது பதின்ம வயதுடைய சிறுமிகள் மீதான பாலியல் வதை குற்ற வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் வழக்குகளாகும்.

மாணவிகள் மீது குற்றம் புரிந்ததாகக் குற்றம் சுமத்தப்படும் ஆசிரியர்கள் விசாரணைகளில் **குற்றவாளிகளாகக் காணப்பட்டால், அவர்களுக்கு ஈவிரக்கமின்றி, இவ்வாறாக கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.**

பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் வதை குற்றம் புரிந்த ஆசிரியரைக் காப்பாற்றுவதும் குற்றச்செயலாகவே கருதப்படும்.

சாட்சிகள், பாதிக்கப்பட்ட நபர்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டமானது, பாலியல் குற்றம் புரிந்தவர்களைக் காப்பாற்றும் நோக்கத்துடன், செயற்படுகின்ற அதிபர், ஆசிரியர்களை, தண்டிக்கப்படக்கூடிய குற்றத்தைப் புரிந்தவர்களாகவே கருதுகின்றது.

**அதேநேரம், குற்றச் செயல் ஒன்று நடைபெற்றுள்ளது என தகவல் அல்லது முறைப்பாடு கிடைத்தவுடன், அதுபற்றி, பொலிசாருக்கு அறிவிக்காமல், அந்த ஆசிரியர் குற்றம் புரிந்ததாகக் கருதி, ஒழுக்காற்று விசாரணை நடத்துகின்ற அனைத்து உயர் அதிகாரிகளுக்கும், எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.**

குற்றச் செயல் தொடர்பாக பொலிசாருக்கு அறிவிக்கத் தவறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் நீதிமன்றின் மூலம் சட்டப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**பாலியல் வதை குற்றச் செயல்களை நீதிமன்றத்தில் நீதிபதிகளினாலேயே சமாதானமாக இணங்கி வைக்க முடியாத குற்றச் செயல் என சட்டம் பரிந்துரைக்கின்றது.**

இச்சூழ்நிலையில் மாணவிகள் மீது பாடசாலை வளாகத்தில் பாலியல் வதை செய்யும் ஆசிரியர்களை சட்டத்தின் முன் நிறுத்தாமல், பாரிய சிறைத் தண்டனைக்குரிய குற்றம் புரியப்பட்டிருக்கின்றது என்று தெரிந்து கொண்டும்,

**பொலிசார் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினருக்கு அறிவிக்காமல், அதிபர், ஆசிரியர், பழையமாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன ஒன்றிணைந்து சமாதானமாக இணங்கி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது, குற்றச் செயல்களுக்கு உதவியாக உடந்தையாக இருந்த குற்றச்சாட்டை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.**

குற்றச்செயல்களை மறைப்பதற்கு உதவியாக - உடந்தையாக இருந்தமை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

பாலியல்வதை குற்றம் தொடர்பிலான தண்டனைகள் பற்றியும் குற்றச் செயலின் தன்மை பற்றியும் குறிப்பிட்ட நீதிபதி இத்தகைய சந்தர்ப்பங்களில் சட்டப்படி என்ன செய்ய வேண்டும் என்பதையும் தெரிவித்துள்ளார்.

அதுபற்றிஅவர்தெரிவித்துள்ளதாவது:

காலை 7.00 மணியில் இருந்து பிற்பகல் 2.00 மணிவரையும், பாடசாலை மாணவிகள், அதிபர், ஆசிரியர்களின் அதிகார எல்லைக்குட்பட்ட, பாடசாலையின் பாதுகாவலில் இருந்து வருகின்றார்கள்.

அத்தகைய நேரத்தில், **பாலியல் வதை குற்றம் ஒன்று ஆசிரியரினால் புரியப்பட்டால், அந்த மாணவி எந்த ஆசிரியரிடம் அல்லது எந்த அதிபரிடம் முறைப்பாடு செய்கின்றாரோ, அவர், அந்த மாணவியின் பெற்றோருக்கு அதுபற்றி உடனடியாக அறிவித்து, அந்த மாணவியை பெற்றோருடன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, முறைப்பாடு செய்ய வேண்டியது சட்டத்தின் முதற்தேவையாகும்.**

கல்வித்துறை உயரதிகாரிகளுக்கு பாலியல் வதை குற்றம் சம்பந்தமாக தகவல் கிடைத்தவுடன், பாதிக்கப்பட்ட மாணவியை, பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று முறைப்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு அறிவுறுத்த வேண்டியது, உயரதிகாரிகளின் கடமையாகும்.

இந்தச்செயற்பாடுகள் செய்ததன் பின்பே, குற்றம் சுமத்தப்பட்ட ஆசிரியருக்கு எதிராக நிர்வாக ரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை பற்றி அறிவிக்கப்பட வேண்டும்.

**சட்டரீதியான பொலிஸ் விசாரணைகள், நீதிமன்ற விசாரணைகளைத் தவிர்த்து, ஒழுக்காற்று விசாரணை நடத்துகின்ற அனைத்து அதிகாரிகள் மீதும், பாலியல் வதை குற்றச் சம்பவத்தை அல்லது குற்றச் செயலை, பொலிசாருக்கு அறிவிக்கத் தவறிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

எனவே, பாடசாலை மாணவிகள் மீதான பாலியல்வதை குற்றச் செயலானது இரண்டு விதமான விசாரணைகளைக் கொண்டிருக்கின்றது. ஒன்று பொலிஸ் நீதிமன்ற விசாரணையின் **மூலம் குற்றம் புரிந்த ஆசிரியர் சிறையில் அடைக்கப்படுவது, இரண்டாவது நிர்வாக ஒழுக்காற்று விசாரணையின் மூலம் வேலையில் இருந்து இடை நிறுத்தப்படுவது.**

**ஒழுக்காற்று விசாரணை என்ற போர்வையில், குற்றச்செயலில் ஈடுபட்ட ஆசிரியரை வேறு பாடசாலைக்கு இடம் மாற்றம் செய்து, பாலியல் வதை குற்றச் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் கல்வித் துறை உயர்அதிகாரிகள், தண்டனைக்குரியவர்கள் என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.**

யாழ் குடாநாட்டு மாணவர்களின் ஒழுக்கம்பற்றிபேசிக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், பாடசலை மாணவிகள் மீதான ஆசிரியர்களின் ஒழுக்கக்கேடான செயற்பாடுகள் சகிக்க முடியாதவை.

மன்னிக்கப்படவும் முடியாதவை. மாணவிகள் மீதான ஆசிரியர்களின் பாலியல்வதை செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி இடவேண்டுமானால், பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை வழங்கி தண்டிப்பதுதான் அதற்குரிய ஒரே மருந்தாகும்.


**நிலைமைகளைப் பார்க்கும்போது, யாழ் குடாநாட்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இயங்குகின்றதா? அவர்களின் பணிகள் என்ன, சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் கடமை புரிகின்றார்களா, குடும்ப நல அதிகாரிகள் கடமையாற்றுகின்றார்களா? சிறுவர் பாதுகாப்பு அரச மட்ட திணைக்களங்கள் இயங்குகின்றனவா, என்ற சந்தேகம் எழுகின்றது.**

மாணவர்கள் போராட்டம் நடத்தினால்தான், மாணவிகள் மீதான பாலியல்வதை குற்றச்சாட்டுக்கு உள்ளாகிய ஆசிரியர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற நிலைமை யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் போராட்டம் நடத்தாமல் விட்டிருந்தால், கைதுகள் நடைபெறமாட்டாது என்ற நிலைமையும் உருவாக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய அரச திணைக்களங்கள், ஒழுங்கு முறை யாகக் கடமையாற்றியிருந்தால், போராட்டங்கள் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கமாட்டாது.

எனவே, குற்றச்செயல்கள் அதிகரித்துள்ள சூழ்நிலையில் உரிய முறையில் கடமை புரியாத அனைத்து அரச அதிகாரிகளும் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள் எனவும் நீதிபதி இளஞ்செழியன் எச்சரித்துள்ளார்.



# கூட்டமைப்பைக் கூப்பிடாத காணிக் கையளிப்பு



இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து "தமிழருக்கு எதுவும் கிடைப்பதில்லை, சிங்கள அரசுகள் எதையும் தருவதில்லை" என்ற கருத்தே பெரும்பான்மை தமிழ்த் தலைவர்களிடம் உள்ளது. இதனை நன்கு விளங்கியுள்ள தற்போதைய அரசு தமிழ் மக்களின் தேவைகளை நிறைவுசெய்யும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை தவிர்த்து வருவது தெரிந்ததே. அவ்வாறு மறந்துபோய் அழைத்தால் கூட அவர்களை மேடையில் பேசவிடுவதில்லை. மேற்படி காணி விடுவிக்கும் நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி யாழ். அரச அதிபருக்கு பத்திரங்களைக் கையளித்தார். இது பற்றி யாழ் அரச அதிபர் குறிப்பிடுகையில், தேசிய நல்லிணக்க முயற்சியில் இது ஓர் நல்ல எடுத்துக்காட்டாகும். வலி . வடக்கு நிலங்கள் 03 கட்டங்களாக 1- 1053 ஏக்கர் 2 - 701 ஏக்கர்கள் 3- 201.3 ஏக்கர்கள் என 1955.3 ஏக்கர் காணிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளன. இதற்காக பாடுபட்ட ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சினர், படையினர் ஆகியோருக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன் என்றார். அதேவேளை, காணி கிடைத்தவர்கள் தமது நிலத்தில் விரைவில் குடியேறுமாறும் அரச அதிபர் மக்களிடம் விநயமாகக் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு பல்வேறு விடயங்கள் தமிழ் மக்களுக்கு அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், தமழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் நன்றி கூறுவதில்லை. ஒரு வகையில் தமிழில் நன்றி என்ற சொல் ஒரு துர் வார்த்தையாக அர்த்தம் கொள்ளப்படுகிறது,

எனவே தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளைப் பிரதேச செயலர்கள் ஊடாகவும், அரச அதிபர் ஊடாகவும் அணுகி படிப்படியாக வன்முறைகளற்ற வகையில் அவற்றைப் பெற முயற்சிப்பதே சாலச்சிறந்தது. போர்க்கொடி உயர்த்துவதால் எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை என்பதனை

**மாவை:** வலி. வடக்கு மக்களே காணி மீட்கும் போரை ஆரம்பித்து விட்டேன் நீங்கள் தயாரா?

**மக்கள் :** ஆம்! ஐயா

**மாவை:** தரையாலும், கடலா லும் இராணுவத்தை எதிர்த்து நிற்கத் தயாராகுங்கள்.

**மக்கள்:** ஆம்! ஐயா

**மன்னன் :** யாரங்கே!

**மாவை :** கூப்பிட்டீர்களா மன்னா!

**மன்னன்:** ஆம்! அங்கு என்ன செய்கிறீர்?

**மாவை:** வலி வடக்கு மக்களை போராட்டத்திற்கு தயார்ப்படுத்துகிறேன் அரசே! இதில் எனக்கு இல்லாத அனுபவமா?

**மன்னன் :** தமிழ் மக்களுக்கு எதைக்கொடுக்கவேண்டும் என்பது எனக்குத் தெரியும். அதைவிட்டுவிட்டு இங்கு வாரும். பிறந்தநாள் கேக் வெட்டுவோம்.

**மாவை:** அப்படியே ஆகட்டும் மன்னா! நான் உங்கள் அடிமை. தாங்கள் எதைச்சொன்னாலும் செய்யச் சித்தமாக இருப்பேன் நாதா!

**"நகம் முளைத்த நாள் முதலாய் நான் அடிமை ஐயா.."**

---

# எழுத்தாளர் சாண்டில்யன்






பிரபல தென்னிந்திய நாவலாசிரியரான சாண்டில்யன் எழுதிய நூல்கள் மிகவும் பிரபல்யமானவை. இப்புத்தகங்கள் சாதாரணமாக 500 பக்கங்களுக்கு மேற்பட்டவைகளே. அதேவேளை, ஒரே கதையின் தொடராக பல நாவல்கள் எழுதப்பட்டும் உள்ளது. ஒரு தனிமனித சாதனைக்கு இவரது ஆக்கங்கள் நல்ல உதாரணமாகும். அவர் எழுதிய நூல்களில் சில...

அலையரசி, அவனிசுந்தரி, இந்திரகுமாரி, இளையராணி, உதயபானு, கடல்ராணி, கடல்வேந்தன், கடற்புறா, கன்னிமாடம், சந்திரமதி, சித்திரஞ்சனி, சேரன் செல்வி, நங்கூரம், நாகதீபம், நாகதேவி, நிலமங்கை, நீலரதி, நீலவல்லி, நீள்விழி, பல்லவதிலகம், பல்லவபீடம், பாண்டியன் பவனி, மங்களதேவி, மஞ்சள் ஆறு, மண் மலர், மலையரசி, மலைவாசல், மன்னன் மகள், மாதவியின் மனம், மூங்கில் கோட்டை, மோகனச்சிலை, மோகினி வனம், யவனராணி, ராணா ஹமீர், ராணியின் கனவு, ராஜதிலகம், ராஜபேரிகை:, ராஜமுத்திரை, ராஜயோகம், ராஜ்யஸ்ரீ, வசந்தகாலம், விஜயமாதேவி, ஜலதீபம், ஜலமோகினி, ஜீவபூமி.

---

# ஜப்பானிய வம்சப் பெயர்கள்

ஜப்பான் முற்றிலும் கடலால் சூழப்பட்ட 6852 தீவுகளைக் கொண்ட நாடாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பெயர்களை வைக்கும்போது தமது வம்சப் பெயர்களையே வைக்கின்றனர். இது பெரும்பாலும் ஒவ்வொரு தீவில் வாழ்ந்த இனக்குழுக்களின் பெயர்களாகும்.

குடும்பப் பெயர்களாக TOYATA, SUZUKI, MITSHUBISHI, TOSHIBA, HITACHI, ISUZU, TOBU, போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப் பெயர் சூட்டப்பட்ட வாகனங்களும், பல இலத்திரனியல் பொருட்களும் இலங்கைக்கும் பரீட்சயமானவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# MS EDSPRING

# ஆய்வு நூல் நிலையம்

**“பேராசிரியர்மா.சின்னத்தம்பி. இந்தப்பெயர்பொருளாதாரம், கல்வி ஆகிய இரு துறைகளிலும் இலங்கையில் நன்கு அறியப்பட்ட பெயர். பொருளியல் ஆசிரியராகவும் கல்வித்துறைசார்பேராசிரியராகவும் தனது கல்விப்பணியைத் தொடர்ந்தவர். சுமார் 40000 மேற்பட்ட மாணவர்களுக்குக்கல்விகற்பித்தவர். 1970களிலிருந்து அவர் சேகரித்த நூல்களை வைத்து உருவாக்கப்பட்டுள்ள நூல் நிலையமே MS EDSPRING என்பதாகும். இது விடயமாக முகவரி சார்பாக நேர்காணல் ஒன்றை நடத்தியிருந்தோம்.”**




(சென்றஇதழின் தொடர்ச்சி..)

**கேள்வி:** இவ்விடயத்தில் தாங்கள் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கு ஏதுவாக அமைந்த காரணி எது?

**பதில்:** ஒவ்வொரு ஆசிரியர்களையும் கெட்டிக்காரர்களாகவும், நேர்ச்சிந்தனை உள்ளவர்களாகவும் அரவணைப்புள்ளவர்களாகவும் மாற்றிவிட்டால் கல்விக்கு வீழ்ச்சி என்பது இல்லை. இந்த விடயம் தான் எனக்கு உந்துசக்தியாக உள்ளது. படிப்பு என்பது தேடலுடன் சம்பந்தப்பட்டது.

**கே:** திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் பாலர் பாடசாலையில் தங்களது நூல் நிலையம் இருப்பதால் இப் பாடசாலை மாணவர்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க மாட்டார்களா?

**ப:** அது மிகவும் ரம்மியமான சூழல். சின்னஞ்சிறுசுகள் அவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பேரன் பேத்திமார் என நிறையப்பேர் வந்து பழகும் ஓர் இடம். மகிழ்ச்சியானதல்லவா?

**கே:** இந்நூல் நிலையம் உருவாக்கப்பட்டு ஒரு வருடம் ஆகி விட்ட நிலையில் எதிர்காலத்தில் எவ்வாறு வியாபிப்பது என்றநோக்கம் உண்டா?

**ப:** ஆம்.

1. அதற்குத் தனியான ஒரு கட்டடம் திருநெல்வேலிப் பகுதியில் கிடைத்தால் மேலும் விரிவுபடுத்த வசதியாக இருக்கும்.
2. ஆய்வுக் கருத்தரங்குகள், வழிகாட்டல் கருத்தரங்குகள் என கருத்தாடல் விடயங்களை நடாத்த உள்ளோம்.
3. மேற்படி நூல் நிலையம் சார்பாக வெளியீடுகளைச் செய்வது. எனது 35 ஆவது நூலான **சமுதாய மாற்றமும் பாடசாலைக் கல்வியும்** இந்த நூல் நிலையத்தினாலேயே வெளியிடப்பட்டிருப்பது எனக்கு மகிழ்வைத் தருகிறது.
4. ஏனைய நாடுகளில் காணப்படுகின்ற கல்வி முறைகளைப் பற்றி அறியவும், தெளிவு பெறவும் கணனி வலையமைப்பொன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

**கே:** இவ்வாறு விரிவுபடுத்தியபின் மேற்படி நூல் நிலையத்தை அனைவரும் பாவிக்க அனுமதிப்பீர்களா?

**ப:** இல்லை. தகுதியானவர்கள் மட்டுமே பாவிக்க அனுமதிக்கப்படுவர். குறிப்பாக பட்டமேற்படிப்பு படிப்பவர்களுக்கே இது உகந்தது.

**கே:** தற்போது மேற்படி நூல் நிலையத்தைப்பாவிப்பதற்குஎவ்வாறு கட்டணம் அறவிடப்படுகிறது?

**ப:** அங்கத்தவர்களாகச் சேர்வதற்கு ரூபா 1000 செலுத்தவேண்டும், ஒரு நாளுக்கு மட்டும் பாவிப்பதாயின் ரூ.500 அறவிடப்படும்.

**கே:** எதிர்காலத்தில் தமிழ்மொழிமூல புத்தகங்களை கொள்வனவு செய்யவுள்ளீர்களா?


**ப:** நிச்சயமாக அதற்கான தேவை இருக்கிறது. ஆசிய கல்விக்கழக புத்தகங்கள் ஏற்கனவே எம்மிடம் உண்டு. இந்தியாவிலிருந்து பெரியளவிலான புத்தகங்களைக் கொள்வனவு செய்ய இருக்கிறோம்.

**கே:** சிங்களம் - தமிழ், தமிழ் - சிங்களம் மொழிபெயர்ப்புப் புத்தகங்கள் உண்டா?

**ப:** இது மிகவும் அவசியமான ஒன்று சிங்களப் புத்தகங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அரச மொழிபெயர்ப்பாளர்கள், ஆளணிகள் அவர்களுக்கு உண்டு. ஆனால் தமிழில் உள்ள நூல்களைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து பதிப்பிப்பது. அதிக செலவாகும் என்பதால் தற்போது அந்த நடவடிக்கையில் ஈடுபடவில்லை. எதிர்காலத்தில் வாய்ப்பு ஏற்படும்போது மேற்கொள்ளவிருக்கிறோம்.

**கே:** நூலகத்தை தற்போது பாவிப்பதை விட மேம்படுத்தும் வழிமுறைகள் ஏதாவது உண்டா?

**ப:** ஏன் இல்லை. தற்போது பரீட்சைக்குத் தயார்படுத்துவதிலேயே



நம்மவர்கள் நூல்நிலையங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆய்வுக்காக, மகிழ்ச்சிக்காக, சமூகம் சார் ஆய்வுகளுக்காக வாசிப்பது என விரிவுபடுத்த முடியும். சில ஊடகத்துறைசார்ந்த நண்பர்கள் கூட தற்போது இந்நூல் நிலையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

**கே:** நூற்றாண்டு மலர்கள், மணிவிழா மலர்கள், சிறப்பு மலர்களென பல வெளியிடப்படுகின்றன. அவற்றை சேகரித்துள்ளீர்களா?

**ப:** ஆம். இது மிகவும் முக்கியமான ஓர் ஆவணம். பல கிராமங்கள், பாடசாலைகள், கோயில்கள், தனிநபர்கள் என பல்வேறு தேவைகளுக்காக இந்நூல்கள் வெளியிடப்பட்டாலும் அவை அதிகம் தகவல்களைக் கொண்டிருப்பதால்அவற்றைஆய்வுத் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

**கே:** இவ்வாறான தொகுப்புக்களில் வேறு ஏதாவது குறிப்பிடத்தக்க அளவில் உண்டா?

**ப:** ஆம். தேசிய கல்வி நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற பல தொகுப்புக்கள் மிகவும் பெறுமதியானவை. அவற்றில் C.W.W. கன்னங்கரா ஞாபகார்த்த உரைகள், பல்வேறு கல்வி சார் விற்பன்னர்களால் எழுதப்படுவதுண்டு. அது ஓர் அறிவியல் தொகுப்பு எனலாம். ஆராய்ச்சி பூர்வமாக அவை எழுதப்பட்டிருக்கும்.

**கே:** இந்தநூல்நிலையத்திறப்புவிழையில் யார், யாரெல்லாம் கலந்து சிறப்பித்தார்கள்.

**ப:** கலாநிதி ஆறு திருமுருகன், கலாநிதி இராசநாயகம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை உதவி அதிபர் திரு.லலீசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். யாழ்ப்பாணத்திற்கான இந்திய உதவித் தூதுவர் திரு.நடராஜன் அவர்கள் பிறிதொரு தடவை நூல் நிலையத்திற்கு வருகை தந்திருந்தார்.

**கே:** உங்களைப்போன்று ஏனைய கல்விமான்கள் ஏன் இவ்வாறான அறிவியல் தொடர்பான பணி களை ஆற்ற முடிவதில்லை.

**ப:**

1. பலர் மாதாந்த இதழ்களை ஒழுங்காக சேகரித்து வைத்திருப்பதில்லை.
2. மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டுமென எண்ணுவதில்லை
3. அவர்கள் இவ்வாறான விடயங்களை சமூக நோக்குடன் எவ்வாறு அணுகுகின்றார்கள் என்பதைத் பொறுத்தே அது அமையும்.

**கே:** இறுதியாக இந்நூல் நிலையம் தொடர்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

**ப:** நான் 70000 மேற்பட்ட மாணவர்களுக்குகல்விபுகட்டியிருக்கிறேன். மூன்று தலைமுறையினருக்கு படிப்பித்திருக்கிறேன். இது எனக்கு மிகவும் மன நிறைவைத் தருகிறது. எதிர்காலத்தில் MSEDU Spring நிலைபேறான சில அடையாளங்களை இந்தக் கல்விச் சமூகத்தில் வைத்திருக்கும் என நம்புகிறேன். ●

**விஜயன்**

# அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை

# உள்ளே என்னதான் நடக்கிறது?



சி.ரங்கநாதன்

## பாமு

இலங்கையின் முதலாவது பசுமைக் கைத்தொழில் மையம் அச்சுவேலியில் இயங் கத் தொடங்கிவிட்டதாக வெளியில் கூறப்பட்டாலும், உள்ளே அதன் உள்ளடக்கம் என்ன என்பது பற்றி வெளியில் யாருக்கும் தெரிந்திருப்பதில்லை.

நிலாவரை அச்சு வேலி பிரதான வீதியில் நிலா வரையிலிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் கைத் தொழிற்பேட்டைக்கான பிர- தான வீதி இடதுபுறமாகத் திரும் பிச் செல்கிறது. மிக விசாலமான தார் வீதியொன்று எப்போதோ அங்கிருந்ததற்கான அடையா ளம் வீதியின் ஆரம்பத்திலேயே தெரிகிறது.

**நீர்க்குழாய் தயாரிப்புத் தொழிற்துறையில் விற்பன்னராக விளங்கும் திருமதி. கீர்த்தா சேபாலி இவ்வாறு கூறுகிறார் " நான் கண்டியிலிருந்து வந்து இங்கு தங்கி நின்று வேலைசெய்கிறேன். எனது பிள்ளைகளையும், கணவரையும் பிரிந்துதான் இருக்கிறேன். இங்குள்ளவர்களுக்கு இது புதிய அனுபவம்தான். எனினும் பலர் ஆர்வத்துடன் இதனைக் கற்கின்றனர். ஒரு தொழிலைப் பழகி அதில் தேர்ச்சி பெற பல வருடங்கள் தேவைப்படும்.**

**அந்த அளவிற்கு பொறுமையும், கடுமையான உழைப்பும் இங்கு பயிற்சிபெறும் ஒருசிலரிடம் தான் உண்டு. ஏனையவர்களும் அதேபோன்று செயற்படவேண்டும் என்பதுதான் எனது விருப்பம். நான் கண்டியிலிருந்து இங்கு வந்து வேலை செய்வேன் என்று ஒருபோதும் நினைத்திருக்க வில்லை. இது எனக்கு ஒரு புதிய அனுபவம். மனத்திருப்தி யுடன் வேலை செய்ய முடிகிறது.**



கீத்தா சேபாலி

அங்கிருந்த கிராமத்து மக்களிடம் "இந்தக் கைத்தொழிற்பேட்டை இயங்குகிறதா?" என்று கேட்டால் "ஆம்" என்கிறார்கள். என் னென்ன தொழிற்சாலைகள் இயங்குகிறது என்று தெரியுமா? "அங்கு போவதில்லை, ஆணித்தொழிற் சாலை, தகரம், நீர்க்குழாய்கள் செய்கிறார்கள்" என்றார் ஒருவர். வேலைக்கு நிறையப்பேர் போய்வருகிறார்களா? "அவ்வளவாக இல்லை. மோட்டார் சைக்கிளிலும், சைக்கிளிலும் 40 - 50 பேர் வரை போய்வருகிறார்கள். முன்பு இங்கு என்னென்ன தொழிற்சாலைகள் இயங்கின? முன்பு நிறையத் தொழிற்சாலைகள் இருந்தன. சவர்க்காரம், குடை, தேங்காய் எண்ணெய், தீப்பெட்டி, நெல்லிரசம் போன்ற உள்ளூர் உற்பத்திகள் இருந்தன.

**30 வருடகால யுத்தம் அவர்களது நினைவுகளில் உள்ளவற்றையும் எஞ்சியிருக்கும் மஞ்சமுன்னாக் காடுகளும், சுண்ணாம்புக் கற்களும் கொண்ட 65 ஏக்கர் நிலத்தை மட்டும் எச்சமாக விட்டிருக்கிறது.** 2009 இல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையை மீண்டும் உருவாக்கும் முயற்சியில் மகிந்த அரசு, பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அப்போதைய வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் முயற்சியால் 05.04.2014 இல் இக் கைத்தொழிற்பேட்டை மீள உருவாக்கும் முயற்சி எடுக்கப்பட்டது. **இதில் இந்தியாவின் வகிபாகம் அதிகமாக இருந்தது. இவற்றுக்கான முதலீட்டினை ஊக்குவிப்பதற்காக இந்திய அரசு 235 மில்லியன் ரூபாவையும், இலங்கை அரசு 45 மில்லியன் ரூபாவினையும் செலவிடுவதென அப்போது தீர்மானிக்கப்பட்டது.** இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்திகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.



கைத்தொழிற்பேட்டைக்குள் சென்றபோது பாதுகாப்புத் தடுப்பு போடப்பட்டிருந்தது. நாம் எம்மை அறிமுகப்படுத்தி உள்ளே சென்றபோது ஒரு விமான நிலைய ஓடுபாதைபோல விசாலமான காப்பெற் வீதி போடப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. 03 தொழிற்சாலைகள் மட்டும் தற்போது அங்கு இயங்குகின்றன. 1. தகரத்தொழிற்சாலை, 2. அல்கதீன் மற்றும் நீர்க்குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலை. 3. ஆணித்தொழிற்சாலை. ஏனைய பல தொழிற்சாலைகள் தமது விளம்பரப் பலகையுடன் அக்காணி தமக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று மட்டும் அடையாளப்படுத்தியுள்ளனர். இது விடயமாக விற்பனை முகாமையாளர், மற்றும் ஆலோசகராக அச்சுவேலியில் பணிபுரியும் திரு. சி.ரங்கநாதன் அவர்களுடன் உரையாடினோம்.

**கே:** எத்தனை உற்பத்தி முயற்சிகள் இங்கு நடைபெறுகின்றன?

**ப :** எமது மேற்பார்வையில் இரு கைத்தொழில் முயற்சிகள் நடைபெறுகின்றன.

1. யூனியன் என்ரபிறைஸ் கார்டன் கோஸ் மற்றும் விவசாய தேவைக்கான அல்கத்தீன் குழாய் உற்பத்தி. 2. எவசைன் அமானா கூரைத்தகடு தயாரிப்பு.

**கே:** கைத்தொழிற்பேட்டையைமீண்டும் அரம்பித்த போது எத்தனை முதலீட்டாளர்கள்வரத் தயாராக இருந்தார்கள்.

**ப:** 30 முதலீட்டாளர்கள் வரை முன்வந்தார்கள். ஆனால், ஏற்கனவே அவர்களது தொழில் முயற்சியில் இழப்புக்களைச் சந்தித்திருந்ததால் அதிலிருந்து மீண்டும் புதிதாக ஆரம்பிக்கப் போதிய பணப்பலம் அவர்களிடம் இருக்கவில்லை.

**கே:** எவ்வாறு அதனைச் செய்யமுடியும் என எதிர்பார்த்தார்கள்.


**ப:** இம்முதலீட்டாளர்களைக் கவரும் வகை யில் இந்தியா நிதியுதவி வழங்குவதாக இருந்தபோதிலும், பின்னர் அது வெற்றியளிக்கவில்லை. மகிந்த அரசாங்கம் மாறியதன் பின் ஓர் உடனடி மந்தநிலை காணப்பட்டது. ஆனால் தற்போது அந்நிலைமை ஓரளவு சீர்செய்யப்பட்டு வருகிறது.


**கே:** தங்களது உற்பத்திகளை எவ்வாறு இங்கு வெற்றிகரமாக ஆரம்பித்தீர்கள்?

**ப:** உண்மையில் எங்களது தொழிற்சாலை முன்பு கண்டியில்தான் இயங்கியது. அச்சுவேலி கைத்தொழில் மையம் ஆரம்பிக்கப்பட இருந்த தால் எமது மேலதிக செலவுகளைக் குறைப்பதற் கும், வடபகுதி இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்குமாக எமது தொழிற் சாலையை இங்கு மாற்ற முடிவெடுத்தோம்.

**கே:** தற்போது எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளீர்கள்?

**ப:** உண்மையில் இத்தொழில் விடயத்தில் உள்ளூர் தொழில் வாண்மை உள்ளவர்கள் மிகவும் குறை வாகவே உள்ளனர். இதனால் அவர்களை பழக்கி எடுக்கவேண்டிய நிலை காணப்படுகிறது. தற்போது 20 பேர் வரையில்தான் வேலை செய்கிறார்கள். நீர்க்குழாய்கள் செய்வதில் தொழில் அனுபவம் உள்ள திருமதி கீத்தா சேபாலி, பியால் குமாரசிங்க ஆகியோர்






தொழில்புரிவதுடன், பலருக்கு இதனைப் பழக்கியும் வருகிறார்கள்.

**கே:** மேற்படி புதிய தொழில் ஒன்றை கற்றுக் கொள்ளும் ஆர்வம் எம் இளைஞர்களுக்கு இருக்கிறதா?

**பா:** இல்லை என்று கூறுவதற்கில்லை. ஒருசிலர் மிக வேகமாக பயின்று, மிக விரைவில் அதிக சம்பளம் பெறுகின்ற நிலைக்குக்கூட போகிறார்கள். சிலர் வேலைக்குச் சேர்ந்து ஊழியர் சேமலாப நிதிக்கான படிவங்களைப் பூர்த்திசெய்து பணம் வைப்பிலிடமுன்பே தொழிலை விட்டுச்செல்வதும் உண்டு. ஆனால், எதிர்பார்ப்பதைவிட முன்னேற்றம் உண்டு.

**கே:** தங்களது உற்பத்திப்பொருட்கள் எவ்வாறு விற்பனை செய்யப்படுகின்றது.



**ப:** உண்மையில் இவ்விரு தொழிற்சாலைகளும் நாராயணா ஹாட்வெயாருக்குச் சொந்தமானதாகும். இவ்வுற்பத்திப் பொருட்களைப் பெற விரும்புவோர் 92, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (021 222 5390) என்ற முகவரியிலோ அவர்களின் தொலைபேசி இலக்கத்திலோ தொடர்புகொண்டு தமது தேவைகளைப் பதிவு செய்வோருக்கு உரிய இடத்திற்கு அனுப்பிவைப்போம்.

பொதுவாக இலங்கை முழுவதும் விற்பனை செய்யும் வசதி எமக்கு ஏற்கனவே கண்டி தொழிற்சாலையூடாக இருந்தது. அதையே தற்போது அச்சுவேலியில் இருந்து செயற்படுத்தி வருகிறோம். இதனால் வடபாகத்து மக்கள் ஏற்கனவே இருந்த விலையை விட குறைவான விலையில் எமது பொருட்களை பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**கே:** குறிப்பாக இலங்கையின் எந்தப் பாகத்தில் இருப்பவர்கள் தங்களின் கூரைத்தகடுகளை வாங்குகிறார்கள்?

**ப:** புத்தளம், நீர்கொழும்பு, குருநாகல் பகுதிகள் என எமது விற்பனை வியாபித்துள்ளது.

**கே:** தங்களது தொழிற்சாலை இயந்திரங்களையும் மூலப்பொருட்களையும் எந்த நாட்டிலிருந்து பெறுகிறீர்கள்?

**ப:** இயந்திரங்கள் சீனாவிலிருந்துதான் இறக்குமதி செய்யப்பட்டன. அமினோ தகடுகளுக்கான மூலப் பொருட் தகடுகளை றோலாக இந்தியாவிலிருந்து எடுத்து தேவையான அளவில் வெட்டிச் செய்கின்றோம்.

**கே:** ஆக்ககூடியது எத்தனை அடி நீளமான கூரைத்தகடுகளை உங்களால் வழங்கமுடியும்?

**ப:** அதற்கு அளவில்லை. ஆனால், எம்மிடம் தற் போதுள்ள வாகனங்களின் தன்மைக்கேற்ப ஆக்ககூடியது 33 அடி நீளமான தகடுகளையே ஏற்றி அனுப்பக்கூடிய வசதி உண்டு.

**கே:** இந்தக் கூரைத்தகடுகள் எவ்வளவு காலம் பழுது படாமல் இருக்க வாய்ப்புண்டு.

**ப:** இது ஓர் புதிய தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படுகின்றது. சிங்க் அலுமினியத்தால் ஆன இத்தகடுகள் இலகுவில் துருப்பிடிக்காதவை, அழகானவை, இலகுவாக கையாளக்கூடியவை. 25 -50 வருடங்கள் பாவிக்க முடியும் என வரையறுக்கிறோம்.

**கே:** வேறு என்ன இரும்பு வேலைகள் செய்கிறீர்கள்?

**ப:** கிளாடிங் (Glading) எனப்படும் பொருத்துப் பாகங்களையும் தயாரிக்கிறோம். இது வடபகுதி மக்களுக்கு கொழும்பிலிருந்து பெறுவதை விட சுலபமானதும், செலவு குறைவானது.

**கே:** ஏனைய கைத்தொழிலாளர்கள் அச்சுவேலியில் வந்து முதலீடு செய்வதற்கு வருவார்கள் என நினைக்கிறீர்களா?

**ம:** அதற்கு முதலில் காணி உறுதிகள் அவர்களின் கைக்கு வழங்கப்படல் வேண்டும். அதைவைத்தே தொழிற்சாலைக்கான மென்கடன்களைக் பெற்றுக்கொள்ள முடியும்.





பாமு

**கே:** இத்கைத்தொழிற்பேட்டைக்கான காணி யாருக்குச் சொந்தமானது?

**ப :** உண்மையில் இங்குள்ள 65 ஏக்கர் நிலம் முடிக்குரிய காணியாகும். எமக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் விஸ்தீரனம் 1 ஏக்கர் மட்டுமே. அதை வைத்துக்கொண்டு, நான்கு பேருடன் இந்தக் கைத்தொழிற்சாலையை ஆரம்பித்தோம், வெற்றிகண்டோம்.

**கே:** காணி உறுதிப்பத்திரம் கிடைத்துவிட்டால் அடுத்ததாக என்ன செய்ய முடியும்.

**ப :** யாழ்ப்பாண முதலீட்டாளருக்கான மென்கடன் வசதிகளை யாழ்ப்பாண வர்த்தக சம்மேளனம் கேட்டு வருகிறது. எனினும், இது விடயத்தில் தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்படும்வரை அரசாங்கம் முதலீட்டாளர்களை காத்திருக்க வேண்டும் என்கிறது.

**கே:** அச்சுவேலியில் இக்கைத்தொழிற்பேட்டை இருப்பதால் எதிர்காலத்தில் வேறு வாய்ப்புக்கள் அல்லது வளர்ச்சியை எட்ட முடியுமா?

**ப :** இது மிகவும் பொருத்தமான இடத்தில் அடைக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை துறைமுகம் சுமார் 10 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. அதேவேளை, பலாலி விமான நிலையம் அருகாக இருப்பதும் எதிர்காலத்தில் தொழிற்சாலைகளின் விஸ்தரிப்பு, வேலைகளில் மென்மேலும் இத்தொழிற்சாலை தனது ஏற்றுமதி இறக்குமதிகளை மேம்படுத்தமுடியும்.

**கே:** தாங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அச்சுவேலி தொழிற்பேட்டையில் ஒரு முன்னோடி நிறுவனம் என்றே கூறவேண்டும். இதை எந்த நம்பிக்கையில் தொடருகிறீர்கள்?

**ப :** உண்மையில் எமக்கும் பாரிய பிரச்சினைகள் இருந்தன. எப்படியாவது நின்று பிடித்துவிட வேண்டும் என்ற நினைவுடன் விடாப்பிடியாக வெற்றிபெற்றிருக்கின்றோம். இன்னும் பல முதலீட்டாளர்களுக்கு இங்கு முதலீடுசெய்யும்நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறோம். ●



# றிசாட் பதியுதீன்

## விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட வடபகுதி முஸ்லிம்களின் யதார்த்தமான தலைவர்



அ.விஜயகிருஸ்ணன்




**1990 ஒக்ரோபர் 30 ஆம் நாள் தமிழ் – முஸ்லிம் உறவில் ஒரு கீறல் விழுந்தநாள். நீண்ட காலமாக அல்லது பல பரம்பரைகளாக தாம் வாழ்ந்த ஊர்களை விட்டு சொப்பின் பைகளுடன் வெளியேற வேண்டுமென விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை நிர்ப்பந்தித்தனர். முல்லைத்தீவில் நீராவிப்பிட்டி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் என தாம் வாழ்ந்த மண்ணையும், குடித்த நீரையும், பிறை பார்த்த வானத்தையும், நெருக்கமாக இருந்த தமிழர்களையும் என எல்லாவற்றையும் விட தமது பள்ளிவாசல்களையும் விட்டு வெளியேறினர்.**

வடக்கு முஸ்லிம்களுக்கு இலங்கையின் வேறு பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களுடன் பெரியளவு உறவு இருக்கவில்லை. அது ஒரு நிர்க்கதியான பயணம். பஸ்ஸில் ஏற்றப்பட்டபோது கூட தமிழ் நண்பர்கள் திரண்டு நின்று வழியனுப்பவில்லை. கண்ணீர் வடித்தார்கள். இரு சமூகங்களுக்குமிடையில் இருந்த உறவு பஸ் புறப்பட்டவுடன் பிடுங்கி எறியப்பட்டது. இந்தச் சூழலில் இருக்க வீடில்லை, தொழில் இல்லை, படிக்க வசதியில்லை, இந்த அநாதரவான சூழலில் தான் றிசாட் பதியுதீனின் தேவை அந்த மக்களுக்கு ஏற்பட்டது.

1915 இல் ஏற்பட்ட கண்டிக் கலகமானது முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் எப்படி வாழுவது என்ற படிப்பினையைக் கொடுத்தது. முஸ்லிம்கள் வன்முறைகளில் ஈடுபடாது தமது விசுவாசத்திற்குரிய அல்லாவிடம் ஒவ்வொரு கட்டத்திலும் துவா கேட்டார்கள். புத்தளத்தில் சிறிய கொட்டகைகள் அமைத்து (அவை தற்காலிகம் என்று ஆரம்பத்தில் கூறப்பட்டபோதிலும் பின்னர் அதுவே நிரந்தரமானது) அதில் வாழ்ந்தபோதிலும், புத்தளத்தில் இருந்த முஸ்லிம்கள் கூட இவர்களைமுழுமையாகஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில், தமக்காக எல்லாவற்றையும் உருவாக்க வேண்டிய தேவை வடக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. படிப்படியாக தமது அரசியல் உரிமைகளையும் வென்றெடுத்தார்கள் தமது சொந்த இடங்களில் உள்ள பதிவுகளுக்கு ஏற்ப தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய புத்தளத்தில் வாக்களிக்கும் வாய்ப்பைப் பெற்றார்கள்.

**ஓர் இனம் தமக்கு உதவுவதற்கு யாரும் இல்லையென்று எப்போது உணர்கிறதோ அன்றிலிருந்து தங்களைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கிவிடும். யுத்தம் காரணமாக இதை வடபகுதி முஸ்லிம்கள் உணர்ந்தார்கள். அதேபோல, சிங்கள இனம் உலகில் உள்ள மிகச் சிறிய இனங்களில் ஒன்று என்பதையும் தமக்கு உதவுவதற்கு வேறுயாரும் வரப்போவதில்லை என்பதையும் உணர்ந்ததாலேயே 2500 வருடங்களாக சாமர்த்தியம் உள்ள இனமாக வாழுகிறது.**

பொதுவாக வடகிழக்கிற்கு வெளியே முஸ்லிம்கள் ஐ.தே.க., சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய தேசிய கட்சிகளுக்கே தமது வாக்குகளைச் செலுத்தி தமது பிரதிநிதிகளை உருவாக்கிக் கொண்டனர். அதேவேளை, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் தலைவரான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் எழுச்சி பெற்றார். அவரது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி தனியாகப் போட்டியிட்டபோதிலும், அக்கட்சிக்கு விழுந்த வாக்குகள் அனைத்தும் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு விழுந்த வாக்குகளாகவே அமைந்தன.

ஒரு முஸ்லிம் பிரதிநிதியைத் தெரிவுசெய்யக்கூடிய வாய்ப்பிருந்தாற்கூட அந்தச் சந்தர்ப்பத்தினை மிக நுணுக்கமாகப் பயன்படுத்தி தாம் விரும்பும் ஒரு பிரதிநிதியை தெரிவு செய்யும் அளவிற்கு அவர்களின் ஒற்றுமையும், தமது பள்ளிகளில் எடுக்கின்ற தீர்மானத்திற்குக் கட்டுப்படும் அளவிலும் முஸ்லிம்கள் இருந்தார்கள். இது அவர்களின் அரசியல் ஸ்திரப்பாட்டுக்கு வழிவகுத்த பிரதான காரணியாகும்.

றிசாட் 2001ம் ஆண்டு தனது கட்சியான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்து தமதுான் அரசியலில் இறங்கும்போது இவர் சிவில் எந்திரிக்கான (NDT பட்டப் படிப்பனை மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் முடித்திருந்தார்). 27.11.1972 இல்மன்னாரில்பிறந்தஇவர். ஆரம்பத்திலிருந்தே மிகவும் துடிப்பான இளைஞராக செயற்பட்டு மக்கள் நம்பிக்கையையும், அரசியல்உறவுகளையும் வளர்த்திருந்தார். சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகளைச் சரளமாகப் பேசத்தெரிந்திருந்தமையும், தமது தேவைகளை உரியவர்களுடன் பேசித் தீர்க்க வாய்ப்பளித்தது. முஸ்லிம் தலைவர்களை எடுத்துப் பார்த்தால் சேர்.ராசிக் பரீட்,ரி.பி.ஜாயா, பதியுதீன் மொகமட், பாக்கீர் மாக்கார், அலவிமௌலானா, எம்.எச். எம்.பௌஸி, ஏ.சி.எஸ்.ஹமீட் M.H. M.அஷ்வர், றவூப் ஹக்கீம், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ஹிஸ்புல்லா,...

(தொடர்ச்சி 32ம் பக்கம்)


Sir ராசிக்பரீட்


T.B. ஜாயா


பதியுதீன் -SLFP



A.C.S.ஹமீட் -UNP




பாக்கீர் மாக்கார் -UNP


அலவி -SLFP


ஆசாத் சாலி CMC


ஹிஸ்புல்லா SLMC


இம்தியாஸ்'-UNP


றவூப் ஹக்கீம் -SLMC


அஸ்வர் UNP/SLFP


பௌஸி -SLFP

எஸ்பொன்னுத்துரை (எஸ்.பொ.)


இந்தப் பெயர் ஈழத்து இலக்கிய மரபில் தவிர்க்க ஒண்ணா ஒன்று. ஒரு கொள்கையுடன் எழுதியவர், வாழ்ந்தவர். ஈழத்து இலக்கியப் பரப்பில் பல்வேறுபட்ட பல போராட்ட இலக்கியங்களை கம்பீரமாக எழுதிய பலர் தமது பிள்ளைகளை போராட்டத்துக்கு அனுப்பவுமில்லை , அவ்வாறு யாராவது சென்றிருந்தால் சாக்குப்போக்குச் சொல்லி வெளியில் எடுத்ததுடன் "போராட்டம் கூடாது" என்று எழுத்தில் போடமுடியாது தவித்தவர்கள் ஏராளம்.

இவ்வாறான இலக்கியவாதிகள் தம்மைத்தாமே சீரழித்துக்கொண்ட படைப்பாளிகளே. இவ்வாறான பலர் உயிருடன் இருந்தாலும் முகம் அழிந்தவர்களாகவே வாழ்கின்றனர். ஆனால், எஸ்.பொ எழுதினார், அதன்படி வாழ்ந்தார். தனது மகனான மித்தியை தமிழீழ மண்ணுக்காக அர்ப்பணித்ததன் மூலம் அவரது தரம் மற்றவர்களால் ஏணிவைத்தாலும் எட்டமுடியாத அளவிற்கு உயர்ந்து நிற்கிறது.

எஸ்.பொவின் "நனவிடை தோய்தல்" என்ற சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்ற ரதம் என்ற கதையின் ஒரு பகுதியை அப்போதைய யாழ்ப்பாணத்தை அறிவதற்காக பிரசுரிக்கிறோம்.

– ஆசிரியர்

# ரதம்



## எஸ்.பொ.

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

அவர்கள் தங்கள் மனைவி மார்களிலும் பார்க்க தங்கள் சைக்கிள்களைக் கண்ணும் கரிசனையுமாகப் பராமரித்தார்கள். அவர்கள்விடையேறிய கடவுள்கள்.

இரும்பினாலே செய்த ஏதோ ஒன்றை தமது கவட்டுக்குள் வைத்துக்கொண்டு, தமது சக்தியை விரயஞ் செய்தே அதனை உருள வைத்து, தம்மை அது சுமப்பதாக தம்மை ஏமாற்றும் விந்தைதான் சைக்கிள் ஓட்டுவது என்று அந்த ஆங்கில அறிஞர் பாணியிலே நினைக்க இன்றுவரை தோன்றவில்லை.

பழைய சைக்கிள் றிம் ஒன்றை வட்டுறுப்பான துவரங்கேட்டியால் உருட்டிக் கொண்டாடுவதில் உள்ள சுகமே தனி. அந்த வளையம் இருக்கும் வரையிலும் எத்தனை தடவை வேண்டுமென்றாலும் செல்லத்துரை கடைக்குச் சாமான்கள் வாங்கி வரப்போவதற்கு நான் பஞ்சிப்பட்டதே கிடையாது.

அதனை வேகமாக ஓட்டிக் கொண்டு ஓடுவதிலுள்ள 'திறி'லும் திருப்தியும் அலாதியானவை. நான் வளையத்துடன் மினக்கெட, அண்ணன்மார் இருவரும் (பெரியம்மா பிள்ளைகள்) சைக்கிள் ஓட்ட நன்றாகக் கற்றுக்கொண்டார்கள். பின்னாலுள்ள கறியரிலும், முன்னுக்கு பாரிலும் 'டபிளா'க் குத்திச் சவாரி செய்தது அலுத்து, நானே ஓட்ட வேண்டுமென்ற ஆசை விஸ்வரூபம் எடுத்தது.

சின்னண்ணனுக்குச் 'சிண்'ணாக வேலை செய்தும், சில சமயம் 'கப்பம்' செலுத்தியும் அவரை மசிய வைத்தேன். மத்தியானச் சாப்பாட்டுக்குக் காசு கிடைக்கும் வரை பணத்துக்குப் பஞ்சமில்லை. எல்லாம் தயார். விடுமுறையும் வந்தது.

நேற்று முளைச்ச தகரப் பற்றையலோ, கமலஹாஸனை சகலகலாவல்லவன் என்று தூக்கிக் கொண்டாடுவானுகள். சைக்கிள் கடை ராசா அண்ணர் தான் 'ஒரிசினல்' சகலகலாவல்லவன். அவருக்குத் தெரியாத வித்தை இந்த லோகத்தில் இல்லை. கார் மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்ற அவருக்கு ஓட்டத் தெரியாத வாகனமும் இல்லை.

அவர் சைக்கிள் ஓட்டத்திலை காட்டுற வித்தையை நாள் முழுவதும் சாப்பிடாமல் பார்த்துக் கொண்டிருக்கலாம். கால்களை ஹாண்டிலில் போட்டுக்கொண்டு பிறிவீலில் ஓடும் சைக்கிளை எத்தனை சுற்றுச் சுற்றவார் தெரியுமோ? சைக்கிளை றோட்டிலே தள்ளிவிட்டு, ஒரு துள்ளு துள்ளிக் காற்றிலே நீந்தி சீற்றிலே தாவும் லாவகம் என்ன? கை ஹாண்டிலிலும் இல்லை, கால் பெடலிலும் இல்லை, சைக்கிள் வீச்சாக ஓடிக் கொண்டே இருக்கும்...

கிராமபோன் பெட்டிகள், பெற்றோமாக்ஸ் லைட்டுகள் என்ற எதைத்தான் திருத்தத் தெரியாது? கல்யாணம், சாமத்தியச் சடங்கு, பணச் சடங்க எண்டு எது வந்தாலும், ராசா அண்ணரின் உதவி தேழ்வை. எது பழுதுபட்டாலும் 'ஒருக்கா ராசாவைக் கையோடை கூட்டிவா' என்பார்கள். அவர்வந்து திருத்தத் தேவையில்லை. கைவைச்சாப் போதும். அப்பிடி ஒரு கை வடிவான ஆம்பிளையும், 'பூலோகரம்பை'யிலும் 'மனோன்மணி'யிலும் செக்கண்ட் கதாநாயகனாக நடிச்ச டி.ஆர். மஹாலிங்கம் ராசா அண்ணரின் வடிவிலை பிச்சை கேட்கவேண்டும். போங்கள்! நாவலர் றோட்டில் மணிக்கூட்டுத் தெரு ஏறுகிற சந்தியிலிருந்து, நீராவியடிப் பக்கமாக ஓலைகளும் தகரங்களும் சப்புப் பலகைகளும் இணைந்த ஒரு கட்டடத்தில் ராசா அண்ணரின் வாடகைச் சைக்கிள் கடை இருந்தது. அவருடைய கடையில எந்த சைஸிலும் சைக்கிள் கிடைக்கும் என்னைப் போன்ற 'பக்கிடாஸ்' பழகக்கூடிய நைசக்கிளுக்கு வேறுகடை இல்லை! கடைக்கு அடையா நெடுங்கதவு, அவர் கடையில் நின்றால் ஏதாவது 'றிப்பேர்' வேலை நடக்கும். அவருக்கு ஊர் 'துளவாரம்' கனக்க.

திரைச்சீலைக்குப் பின்னால் நின்று, கடையை அவர் மனைவி ராணிதான் நடத்துவா. பெயர் வேறு என்னவோவாம். அவ பெரிய இடத்துப் பெண்ணாம். இவருடைய அழகில் மயங்கி ஓடி வந்தவாவாம். பி.யூ. சின்னப்பா நடித்த பிருதிவிராஜ் படம் வந்த காலத்துச் சமாசாரம் என்றபடியால், அவ ராணி சம்யுக்தை என்று பட்டஞ் சூட்டப்பட்டு, 'ராணி' எனச் சுருக்கமாக அழைக்கப்பட்டா.

சின்னச் சைக்கிள் எடுத்து, பெருமாள்கோயில் வீதியைச் சுற்றி நான் சைக்கிள் ஓடப் பழகியது ஒரு தனிக்கதை. நான் உழக்க, சீற்றைப் பிடித்து வரும் அண்ணர் இடையிடையே கையை விட்டு... என் பலன்ஸிங் முன்னேற்றத்தில் திருப்தி கண்டு, ஒரு சுற்றுக்கு என்னைத் தனியே விட, தெற்கு வீதியிலே, கேணிக்கு அருகில் கல்லுக் கும்பலுடன் மோ... என் முழங்கால் புண்ணை மறைக்கப்பட்ட அவதியும், சைக்கிள் திருத்தங்களுக்கு மூன்று ரூபாய் கொடுக்கப்பட்ட உத்தரிப்பும்... ஒருவாறு சைக்கிள் ஓடப்பழகிக் கொண்டேன். பெடலை மிதித்து ஏறத் தெரியாது. அச்சிலை கால் வைத்து, நாலைஞ்சு யார்கள் கெத்தி அடிச்சு, 'சீற்'றுக்கு மேலாலை காலைத் தூக்கிப் போட்டுத்தான் ஏறுவன். வேர்த்துவிறுவிறுக்க, யாழ்ப்பாணத்து தார் வீதிகள், மக்கிறோடுகள் ஒழுங்கைகள், குச்சொழுங்கைகள் எல்லாம் நான் மிதிச்சு சைக்கிள் பறந்தது. சாப்பாட்டுக் காசுகள் எல்லாம் சைக்கிள் வாடகைப் பணமாக ராசா அண்ணனின் கைக்கு மாறியதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

யாழ்ப்பாணத்தின் அத்தனையையும் அங்குலம் அங்குலமாக அளந்து தீர்த்த ஆனந்தத்திற்கு ஈடு என்ன... இதையும் மறக்காமல் சொல்லவேணும். பெடிலை மிதித்துச் சைக்கிள் ஏறும் கலையைத் தாம்பரத்தில் எம்மாவின் உதவியுடன் வாலாயப்படுத்திய பிறகு, அச்சு வேலிக்கு 'டபிள்' போட்டுச் சைக்கிளில் போனபொழுது, கோப்பாய் பொலிஸாரிடம் பிடிபட்டுவிட்டேன். வழக்குப் பதிவாகியது. அதனை மறந்து, கம்பளைக்குச் சென்று வேலையிற் சேர்ந்தேன். எனக்குப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது. பின்னாளில் கல்வி அமைச்சராகப் பலதும் செய்த பதியுத்தீன் மஹ்மூத்தான் என் பிரின்ஸிப்பல். பிடிவிறாந்தைக் கண்டவுடன் ஒரு விசாரணையே நடத்தி முடித்தார். சைக்கிளில் டபிள் போன கேஸென்று அறிந்த பிறகு, அவர் சிரித்த சிரிப்பில் ஸாஹிரா கல்லூரி கட்டடம் அதிர்ந்தது. புத்தூர் கிராமக் கோட்டிலே வழக்கு நடந்தது. தீர்ப்பு Warned and Discharged அந்த வழக்குக்குப் பிறகுதான். முழு லைசென்ஸ் பெற்ற உணர்வும், யாழ்ப்பாண வாகன கலாசாரத்தின் ஒரு குடிமகன் என்கிற பெருமையும் எனக்கு ஏற்பட்டது.

யாழ்ப்பாணக் கலாசாரப் பெருமைகளுள் நீண்ட காலமாக நிண்டு பிடிப்பவற்றுள் ஒன்று றலி சைக்கிள் நாகரிகம் என்று நான் துணிந்து சொல்வேன். ரஞ்சன் விஜயரத்னா செத்தபிறகு வரக்கூடிய எந்தக் கொம்பனான சிங்களவன் அனுப்பக்கூடிய கெலிஹொப்டர் கண்காணிப்பிற்கும் பதில் சொல்லக்கூடிய திறமை யாழ்ப்பாணத்து சைக்கிள் நாகரிகத்துக்கு உண்டு என்று கத்துவேன். கத்துவதற்கான அரசியல் உரிமை மட்டும் தமிழன் தாராளமாக அனுபவித்து வந்திருக்கிறான். ●



பதியுதீன் முகமட்

**விஸ்வப்பிரம்மஸ்ரீ பாலகிருஸ்ணன் ஜெகதீஸ்வரன் (பாலா) வயது – 53, நல்லூரில் வசிக்கும் இவர் தமிழர் தம் பண்பாட்டு விழுமியங்களின் எச்சங்களைச் சேகரித்து தமிழர் தம் உயர்ந்த வாழ்க்கை முறையை வெளி உலகிற்கு கொண்டுவரவேண்டும் என்ற ஆர்வத்துடன் உழைத்து வருகிறார். இவரது தேடல் தொடர்பில் அவருடனான நேர்காணலை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். – ஆசிரியர்**

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

**கேள்வி:** பொதுவாக எமது மக்களுக்கு இப் பொருட்களின் ஆத்மாத்தமான பெறுமதி புரியவில்லை என்று நினைக்கிறீர்களா?
**பதில் :** ஆம். பல அரிய பொருட்களைப் பழைய பொருட்களை வாங்கும் வியாபாரிகளுக்கு விற்றுவிடுகிறார்கள். அவர்களுக்குப் புரியாது அதன் மூலம் அவர்கள் பெறுகின்ற பணப் பெறுமதியை விட அப்பொருட்களின் பெறுமதி அதிகம் என்று பல படித்தவர்கள் கூட இதில் அக்கறைப் படுவதில்லை. பழைய பொருட்களை எறியப்படவேண்டியவையே என்ற மனப்பாங்குதான் பலரிடம் உண்டு. எமதுமுன்னோர்செய்தபொருட்கள்பாவித்தபொருட்கள் என்று அவர்கள் பெருமைப்படுவதில்லை.

# எங்கள் மூதாதையர்கள் அரும்பொருட்களாக எங்களுடன் இருக்கிறார்கள் – பாலா

**கேள்வி:** இந்த மனநிலையை எவ்வாறு மாற்ற முடியும் என்று நினைக்கிறீர்கள்?
**பதில்:** ஒவ்வொருவரும் தமது வீட்டின் **ஒரு மூலையிலாவது பழைய பொருட்களைச் சேமித்து வைக்கும் ஓர் இடத்தை ஒதுக்கி தம்மிடம் தற்போதைக்கு இருக்கின்ற அரும் பொருட்களை பத்திரப்படுத்தி, காட்சிக்கு வைப்பதன் மூலம் தமது மூதாதையரை எங்கோ தொலைத்துவிட்ட உணர்வு இல்லாது இருக்கமுடியும் அல்லவா?** இயந்திரங்கள் இல்லாத காலத்தில் எமது மூதாதையர்கள் மிகவும் கஸ்டப்பட்டு செய்த அரும்பொருட்கள் அல்லவா அவை.
**கே** நீங்கள்சேகரித்துவைத்திருக்கும்பொருட்களை நல்ல விலை கிடைத்தால் காசுக்கு விற்பீர்களா?
**ப:** ஒருபோதும் இல்லை. நான் பல பொருட்களை அதிக பணம் கொடுத்து வாக்கியிருக்கிறேன். தற்போதும் அரிய பொருள் என நான் ஒரு பொருளை அடையாளம் கண்டால் அதை எவ்வளவு பணம் கொடுத்தும் வாங்கிவிடுவேன்.
**கே** எதிர்காலத்தில் இவற்றை எவ்வாறு மக்கள் உணர்ந்துகொள்ள வைப்பீர்கள்?
**ப:** உண்மையில் ஓர் அரும்பொருட் காட்சியகத்தை மாணவர்கள் படித்துப் பயன்பெறவும், பார்வையிடவும் ஏற்றவாறு ஒரு தொல்லியல் ஆய்வுகூடமாக ஆக்குவதே எனது எதிர்பார்ப்பு. இதை வேறு யாரிடமும் அள்ளிக்கொடுத்தல் இதைச் சேகரிப்பதற்கு நான் எடுத்த முயற்சியும், எம்முன்னோர் இவற்றைச் செய்வதற்குப்பட்ட கஸ்டமும் மற்றவர்களுக்குப் புரியாமல் போய்விடும்.



ஜி.ஜி.பொன்னம்பலத்தின் அன்பளிப்பு

**கே :** உங்கள் பிள்ளைகளுக்கு இப்பொருட்களை தொடர்ந்தும் பாதுகாக்கவேண்டும் என்ற ஆர்வம் உள்ளதா?

**ப:** என்னளவுக்கு இல்லை என்றுதான் கூறுவேன். அவர்கள் இப்பொருட்களை வெறுத்து ஒதுக்குவதில்லை. ஆனால் எனது பேரன் ஒருவன் இது விடயத்தில் மிகவும் ஆர்வம் உள்ளவன். எல்லாவற்றையும் அவதானமாக எடுத்துவைப்பான். எதையும் உடைக்கமாட்டான். ஆனால் அவனுக்கு வயது தற்போது 02 மட்டுமே. அவன் நிச்சயமாக இதில் ஆர்வமுள்ளவனாக இருப்பான் என்பதில் ஐயமில்லை.



குத்துவிளக்கிற்கு எண்ணெய் விடும் கெண்டி

**கே:** உங்களிடம் உள்ள பொருட்களில் உங்களைக் கவர்ந்த பொருள் எது?
**ப :** எழுத்தாணி - அந்த எழுத்தாணிக்கு கருங்காலி பிடி போடப்பட்டுள்ளது. எழுத்தாணியும் ஓலை வாரும் கத்தியும் ஒரு பிடியிலேயே பொருத்தப்பட்டிருப்பதுதான் அதன் சிறப்பு. இது எமது தமிழ்ப் பண்பாட்டின் அறிவியல் அடையாளமாக அல்லது கல்வியின் அடையாளமாக கொள்ளமுடியும்.

**கே :** இப்பொருட்களை எங்கெல்லாம் தேடி வாங்கினீர்கள்?

**ப :** யாழ். குடாநாடு முழுவதும் தேடி வாங்கினேன். மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, கதிர்காமம் என இலங்கை முழுவதும் அலைந்திருக்கிறேன். **தற்போது பல இடங்களில் பழைய பொருட்களின் வடிவத்தில் போலியாகச் செய்து விற்கும் நிலையும் உருவாகியுள்ளது. நான் இப்பொருட்களை அதன் பழைமை, அதன் முக்கியத்துவம் என்பனவற்றை ஆராய்ந்தே வாங்குவேன்.**

**கே :** யாழ்ப்பாணத்து மன்னர் காலத்து பாவனைப்பொருட்கள் ஏதாவது கிடைத்திருக்கிறதா?
**ப :** சங்கிலி மன்னனுடைய காலத்து கத்தி, மரத்தாலான அரண்மனை வளைவு என்பன கிடைத்திருக்கிறது.

**கே :** தங்களிடம் உள்ள உலோகப் பொருட்களை காபன் சமதானிப் (C-14) பரிசோதனை செய்துள்ளீர்களா?
**ப :** அதற்கான முயற்சியிலேயே தற்போது ஈடுபட்டுள்ளேன். அந்த உறுதிப்படுத்தல் கிடைத்ததும் இப்பொருட்களுக்கான விஞ்ஞானபூர்வமான வயதைக் குறிப்பிட்டுவிட முடியும்.

**விஜயன்**

**கே :** :உலோகங்கள் வரிசையில் எத்தகைய உலோகப் பொருட்களை சேகரித்துள்ளீர்கள்?
**ப :** தங்கம், பொன், செம்பு, வெண்பித்தளை, வெள்ளி எனப் பலவும் உண்டு. ஆனால் இவற்றைவிட இந்த உலோகத்திற்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட "தரா" என்ற பித்தளைக்கு முன்னதாகப் பயன்பாட்டில் இருந்த உலோகப் பொருட்களும் என்னிடம் உண்டு.

**கே :** புத்தகங்கள் என்று பார்த்தால் எவ்வளவு காலம் பழைமை வாய்ந்த புத்தகங்களைச் சேகரித்து வைத்துள்ளீர்கள்?

**ப:** புத்தகங்களைப் பற்றிக் கதைத்தாலே மிகவும் வேதனைகயாக இருக்கும் 1995 இடப்பெயர்வு காலத்தில் பல பைகளில் அரிய நூல்கள் பலவற்றை கட்டி இணுவிலில் ஓர் இடத்தில் பத்திரப்படுத்தினேன். அவை அப்படியே மழையில் நனைந்து பழுதாகிவிட்டது. அதை நினைத்தால் மிகவும் வேதனையாக இருக்கும். எனினும், ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு பழமையான நூல்கள் என்னிடம் உண்டு.

( தொடர்ச்சி 24 ஆம் பக்கம்)

# பகிரங்க மடல்

## யாழ்ப்பாணத்தில் கண்டிய நடனமா?

யாழ்ப்பான பல்கலைக்கழகம் 1974 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவினால் திறந்துவைக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்திலிருந்து 1983 வரை சிங்கள மாணவர்களும் பல சிங்களப் பேராசிரியர்களும் (பேராசிரியர் சுசரித்தகம்லத் போன்றவர்கள்) இப்பல்கலைக்கழகத்தில் இருந்தார்கள்.

1983 - 2009 வரையான காலப்பகுதி தனித்தமிழ் பல்கலைக் கழகம் என்ற நிலைக்கு யாழ். பல்கலைக்கழகத்தைக் கொண்டுவந்தது. இது நாட்டில் ஏற்பட்ட அசாதாரன சூழலால் ஏற்பட்டதாகும். 1990 ஆம் ஆண்டுவரை முஸ்லிம் மாணவர்களும் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் போன்றவர்களும் இங்கு இருந்தார்கள். 1990 இல் முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற்றப்பட்டவுடன் மீண்டும் யாழ். பல்கலைக்கழகம் தனித் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆனது.

1983-2009 காலப்பகுதியில் தென்பகுதி பல்கலைக்கழகங்களில் குறிப்பாக கொழும்பு, பேராதனை, மொரட்டுவ, களனி, ருகுணு, ரஜரட்ட, ஊவாவெல்லச, வயம்ப போன்ற பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்கள் தமது கல்வியை எந்தவித தடையுமின்றி தென்பகுதி பல்கலைக்கழகங்களில் தொடரமுடிந்தது.

ஒரு தேசியப் பல்கலைக்கழகத்தில் பல இன, மத, மொழி, கலாசாரப் பின்னனியைக் கொண்ட மாணவர்கள் கல்வி கற்பதால் அது ஒரு பல்கலைக்கழக சமூகமாக ஆகிவிடுகிறது. இதன்மூலம் ஒவ்வொரு மாணவரும் பல மொழிகள், கலாசாரங்களை அறிவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நாட்டின் ஒரு மூலையில் இருந்ததால், 2009 வரை இருந்த சூழல் மாறி மீண்டும் 2010 இல் தேசிய பல்கலைக்கழகம் ஒன்றிற்குரிய சூழல் ஏற்பட்டது.

இயல்பிலேயே வேறு சமூகங்களுடன் புழங்கிப் பழக்கப்படாத யாழ் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியைப் பேசும் ஆற்றல் கொண்டவர்களாக இருப்பதில்லை. இதுவும் சக சிங்கள மாணவர்களின் விடயங்களை புரிந்துகொள்ளும் நிலையில் அவர்கள் இருக்காததற்கு காரணமாயிற்று.

பல்கலைக்கழக சூழலில் சிங்கள நண்பர்களுடன் சேர்ந்து சிங்கள மொழியைக் கற்கமுடியாத தமிழ் மாணவர்கள் எதிர்காலத்தில் தொழில் புரியும்போது தமிழ் மாவட்டங்களில் மட்டும் சேவையாற்றக்கூடியவர்களாக முடக்கப்பட்டு இருப்பர்.

இவ்வாறு தமக்கென்று ஒரு தனியான மனநிலையை வைத்திருக்கின்ற மாணவர்கள் எப்போதும் முரண்பட்டுக்கொண்டிருக்கவே வாய்ப்புண்டு. ஒரு வகையில் கூறுவதானால், **சிங்களவரை ஒருபோதும் விரும்பாத தமிழர் இருக்கவே செய்கின்றனர். ஆனால், அவர்களுக்கு சிங்களமொழியோ, சிங்கள கலாசாரமோ சிங்களவருக்கு நிகராக தான் முன்னேறவேண்டுமென்ற முனைப்போ இருப்பதில்லை.**

தமிழ் மாணவர்கள் தம்மை புறம்போக்காக ஒதுக்கிக்கொள்வதை அல்லது ஒதுங்கிக்கொள்வதை விடுத்து தம்மையும் ஒரு இலங்கைப் பிரஜையாக நினைக்கவேண்டும். பழப்பிலும் அந்தத் தரத்தைப் பேண வேண்டும்.

**"சிங்களவன் மோடன்" என்ற சிந்தனையை பழைய தமிழ்த் தலைவர்கள் தமது சொந்த அரசியல் நலனுக்காக வடகிழக்கு தமிழ் மக்களிடம் திணித்துவிட்டு, தமது தேவைகளை அதே சிங்களத் தலைவர்களுடன் சிரம் தாழ்த்தி பெற்றுக்கொண்டதே வரலாறு.**

Oxford கல்விப் பாரம்பரியத்தில் வந்த மிகச் சிறந்த கல்விமானான லலித் அத்துலத் முதலி பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்றபோது அவ்வாறான கல்வித் தகைமை உள்ள ஒருவர் அப்பதவிக்கு வந்தது எவ்வளவு ஆபத்தானது என்பதையோ, அவருக்கு நிகரான கெட்டித்தனத்துடன் நாங்களும் வளரவேண்டுமென்றோ குறிப்பிடாமல் தமிழ்ப் பத்திரிகைகளும், தமிழ் அரசியல்வாதிகளும் அத்துலத்முதலியை **"அச்சுலக்கை"** என்று நையாண்டி செய்ததுடன், தமது கடமையை முடித்துக்கொண்டார்கள்.

30 வருடப் போராட்டத்தால் தமிழர் பொருளாதாரம், கல்வி, உயிர் என எல்லாவற்றையும் இழந்து இலங்கையின் 03 ஆவது குடி மக்கள் என்ற நிலையில் (வடகிழக்கு தமிழர்) இருக்கும்போது அதிலிருந்து மீள மேலும் 30 வருடங்களாவது கடினமாக உழைக்கவேண்டியிருக்கும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்துறையில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் தொகை மிகவும் குறைந்துவிட்டது. இது இவ்வாறிருக்க, சிங்கள மாணவர்களுக்கு எதிரான எந்த நடவடிக்கை எடுத்தாலும் அது சட்டபூர்வமாக அவர்களைப் பலப்படுத்துவதிலேயே முடியும் என்பதை மறந்துவிடக்கூடாது.

அவர்களைப் பேணிப்பாதுகாப்பதிலும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் ஒரு கண்டிய நடன விவகாரம் அமைந்துவிட்டது. இனி சாதாரண நிகழ்ச்சிநிரலில் அது சேர்க்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

30 வருடப் போராட்டத்தில் வடகிழக்கு கிராமங்கள் ஒவ்வொன்றாக பறிபோய் 2009 இல் "முள்ளிவாய்க்கால்" என்ற கடைசித் தமிழ் கிராமத்தை இராணுவம் கைப்பற்றியதுடன் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. குடியேற்றம், மீன்பிடி விவசாயம், வர்த்தகம், விகாரைகள் அமைப்பது, உல்லாச விடுதிகள் அமைப்பது என்று சகல கட்டமைப்புக்களும் தமிழரை அந்த இடத்திலேயே வைத்துக்கொண்டு "இருகோடுகள்" என்ற தத்துவத்தின்படி ஒரு பெரிய கோட்டை போடுவதற்கு கல்விப் புலத்தில் வழிவிட்ட ஒரு சம்பவமாகவே இத்தாக்குதல் அமைந்துவிட்டது.

இந்தச்சூழலில் தமிழ் மாணவர்களின் பக்கம் துணைவேந்தர், விரிவுரையாளர்கள் என யாரும் நிற்கப்போவதில்லை. இதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் தண்டிக்கப்படவும், பாதிக்கப்படவுமே வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன.

எனவே பல்கலைக்கழக மாணவர்கள் ஒவ்வொரு விடயத்திலும் சிந்தித்து செயற்படுவதே நல்லது. தமது வேலிக்குள்ளேயே தீர்வையும் கண்டுவிட வேண்டும்.

## வீதியில் செல்வோர் கவனம்



**அண்மையில் பாடசாலை மாணவன் ஒருவன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது ஒரு வானின் கதவு திறக்கும்போது அதில் அடிபட்டு கீழே விழுந்தான். இன்னோர் வாகனம் தலையில் ஏறியதால் அவன் அநியாயமாகக் கொல்லப்பட்டான்.**

**22.07.2016 இல் இதேபோன்றதொரு சம்பவம் சைக்கிளில் சென்ற மாணவி ஒருவருக்கும் ஏற்பட்டது. எனினும், ஆபத்து எதுவுமின்றி தப்பினார்**

**சைக்கிள், மோட்டார் சைக்கிளில் செல்வோர் வீதியோரமாக நிறுத்தப்பட்டிருக்கும் கதவுகளை திடீரென திறப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன் செல்வதே சரியானது.**

**வாகனச் சாரதிகள் மற்றும் பயணிகள் வாகனங்களிலிருந்து இறங்குமுன்பு பின்னால் என்ன வருகிறது எனப் பார்த்துவிட்டு கதவைத் திறப்பதே நல்லது.**

**கண்ணாடி பார்த்து கதவைத் திறக்கவேண்டும் என்பதையும், கண்ணாடி பார்க்காமல் கதவைத் திறப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன் எப்போதும் இருப்பது அவசியம்.**

## துயர் பகிர்வோம்



எமது முகவரி குழுமத்தின் ஸ்தாபகர்களின் ஒருவரான கனடாவிலிருந்து செயற்பட்டு வரும் திரு.T.சிவனேசன் (நேசன்) அவர்களின் மாமனார் (மனைவி சீலாவின் தந்தையார்) சென்னையில் காலமானார்.

அவரது இழப்பினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு முகவரி சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# அண்ணாச்சி பதில்கள்

**சாவித்திரி - முரசுமோட்டை**
**கேள்வி: நொஸ்ரடாமஸ் என்று ஒரு தீர்க்கதரிசி இருந்தாரா?**

**பதில்:** நொஸ்ரடாமஸ் என்பவர் 1503 -1566 வரை பிரான்சில் வாழ்ந்தவர் மிகப் பெரிய தீர்க்கதரிசனங்களை முன்னுணர்ந்து **செய்யுள் வடிவில் எழுதி வைத்தவர்.** அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் போன்ற இரு கட்டடங்களின் மீது தீப்பிடித்து எரிவது போன்ற படத்தையும் கீறி வைத்தவர். அவர் குறிப்பிட்ட பல விடயங்கள் நடந்தேறியுள்ளன.

**யேசுநேசன் - வவுனியா**


**கேள்வி: பலர் சான்றிதழை சேட்டிக்கேற் என்று கூறுகிறார்களே! அது சரியா?**

**பதில்:** CERTIFICATE என்ற ஆங்கிலச் சொல்லை சேட்டிக்கேற் என்று தமிழில் பேச்சுவழக்கில் சொல்லிப்பழகி விட்டார்கள். ஆனால் ஆங்கில மொழிக்கென தனியான உச்சரிப்பு இருப்பதால் அதைத் தமிழ்மொழிக்கூடாக உச்சரிப்பது தப்பு. பல படித்தவர்கள் கூட இவ்வாறு பேசுவதைக் கேட்டிருக்கிறேன்.



**சகாயமேரி - மன்னார்**
**கேள்வி: ABORTION, MISSCARRIAGE ஆகிய சொற்களுக்கு கருத்து வித்தியாசம் உண்டா?**

**பதில்:** ஆம்! கர்ப்பம் தரித்த நிலையில் ஒரு குழந்தையை வேண்டாம் என அழித்து விடுவது Abortion அதேவேளை, பிள்ளை கருத்தரித்தபின் கருப்பையில் வளரமுடியாமல் தானாக அழிந்து விடுவதை Misscarriege என்பதே சரி. சிலருக்கு Misscarriage என்ற சொல் தெரியாதிருப்பதால் எல்லாவற்றையும் Abortion என்கின்றனர்.




**பவன்- ஆனைக்கோட்டை**
**கேள்வி: மாலைதீவைப்பற்றி அறிய விரும்புகிறேன். அது பற்றி அறியத் தருவீர்களா?**

**பதில்:** மாலைதீவு 26 பவளத்தீவுகளையும், 1192 தீவுகளையும் கொண்டது. இம் முழுத்தீவுகளின் பரப்பு 90000 சதுர கிலோமீற்றர். இதில் 200 தீவுகளில் மட்டும் மக்கள் வாழ்கிறார்கள். (3,13,920 மக்கள்) இத் தீவுகள் மாலைபோல தொடராகக் காணப்படுவதால் மாலை தீவுகள் என தமிழில் அழைக்கப்படுகின்றது. இங்குள்ள பிரதான தொழில் மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை. மதம் இஸ்லாம்.

**மணிமேகலை - கிளிநொச்சி**
**கேள்வி: பலர் அதிக நேரம் தொலைபேசியில் பேசுகிறார்களே? அது தேவையா?**

**பதில்:** உண்மையில் பலபேருக்கு தொலைபேசியை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தெரியாது. அதனால் தான் ஒரே விடயத்தைப் பற்றி திரும்பத்திரும்ப பேசுகிறார்கள். ஒரு மனிதனின் தொடர்பாடல் ஆற்றல் நான்கு நிமிடங்கள் மட்டும்தான். நான்கு நிமிடத்திற்குள் அவர் தான் பேசவந்த விடயத்தின் மையப்பொருளை மற்றவருக்கு சொல்லி முடித்து விடுகிறார். பின்னர் பேசுகின்ற நேரம் அதை மெருகூட்டுவதாகவே இருக்கும். நல்லவேளை வெளிநாடுகளில் உள்ளதுபோல எமது நாட்டில் உள்ளூர் தொலைபேசிகள் இலவசமாக்கப்படவில்லை.



**நௌஷாட்- நீராவிப்பிட்டி**

**கேள்வி: CCTV என்பது என்ன நோக்கத்திற்காக கண்டுபிடிக்கப்பட்டது.**

**பதில்:** closed circuit Television என்பதையே cc tv என்கின்றனர்.

பல கருவிகள் துப்புத்துலக்குவதற்காக கண்டுபிடிக்கப்பட்டவையே. விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகிவிட்டால் உடனடியாக அதன் கறுப்புப்பெட்டியை (Black Box) தேடுவார்கள். அதில் அந்த விமானி கதைத்த அல்லது அவருக்கு கதைக்கப்பட்ட இறுதி ஒலி வடிவம் பதியப்பட்டிருக்கும். அதேபோல சிசி.ரீவி களவு. கொலை. அனர்த்தம் போன்ற விடயங்களை துப்பறிவதற்காக கண்டுபிடிக்கப்பட்டதாகும். இக்கருவி தான் பார்ப்பதைப் பதிவு செய்து வைத்திருக்கும் தொழில்நுட்பத்தைக் கொண்டது. ஆனால், தற்போது அதன் படங்களை இணையத்தளங்களில் வெளியிடுவதால், துப்பறியும் விடயங்களுக்கு அது பாதகமாக அமைந்து விடுகிறது. பல குரூரமான விடயங்கள் கூட மக்கள் பார்வைக்கு விடப்படுவது வன்மத்தை ஏற்படுத்தும். இதில் இணையத்தளங்கள் பக்குவப்படுவது நல்லது.

**கந்தசாமி - முள்ளியவளை கேள்வி: ஶ்ரீ நெல் இனம் ஒன்று உண்டா? அது ஏக்கருக்கு 350 புசல் வரை விளையுமாமே?**

**பதில்:** ஶ்ரீ என்று ஒரு நெல் இனம் இல்லை. System of Rice Intensification - SRI என்பதையே ஶ்ரீ நெல் உற்பத்தி என்கின்றனர். இது இலங்கையில் காணப்பட்ட ஒரு பாரம்பரிய விவசாய முறை. இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி வயல் நிலங்களைப் பண்படுத்தி நாற்றுப்போட்ட நெல்லை 14-21 நாட்களில் 1 அடிக்கு 1 நாற்று என்ற இடைவெளியில் நடப்பட்டு மிகக் குறைந்த நீரைப் பாவித்து விளைவிப்பதாகும். ஒரு நெல்லில் 155 மட்டம் வெடித்து நெற்கதிர்கள் விளைந்தால் 1 ஏக்கருக்கு 350 புசல் நிச்சயம் விளையும். இந்த நடுகை முறைக்கு எந்த விதை நெல்லையும் பயன்படுத்தலாம். மனிதவலு அதிகம் தேவை.





# சீதனத்தில் மையம் கொண்ட சமூகம்

ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியர் சீதனம் பற்றி இவ்வாறு கூறினார். **"சீதனக்காசை மாப்பிள்ளையும், தகப்பனும் எச்சில் போட்டு எண்ணு றாங்கள். ஏதாவது குறைந்து விடுமோ என்ற சந்தேகத்தில். நாங்களும் ஒரு சமூகமா? இது வும் ஒரு பண்பாடா?"** என்று இந்தநிலை மிகச் சாதாரண மாகி விட்டது. இதனால் பாதிப்புக்குள் ளாவது யார்?

குழந்தையிலேயே பெண் குழந்தைகளுக்கு கள்ளிப்பால்கொடுத் துக் கொலை செய்யும் வழக்கம் இந்தியாவில் உள்ளது. இலங்கை யைப் பொறுத்தவரை பெற்றோர் கொலை செய்யாமல் சமூகமும் சேர்ந்து அந்தப் பெண் பிள்ளைகளை தாமாகத் தற்கொலை செய்து சாகும்பரை நெருக்குகின்றனர்.

**பெண்விடுதலைவிடயத்தில் மிகப்பெரியஅழுத்தம்சீதனம்என்ற போர்வையில்தான் பெண்களுக் குக் கொடுக்கப்படுகிறது.**

இந்தச் சீதனத்தை அழுத்திக் கேட்பவர்கள் யார் என்று பார்த்தால் தாய்கள் தான். சீதனம் வாங்காமல் தமது மகனுக்கு கலியாணம் செய்து வைத்தால் அதற்கு மதிப்பில்லை, அது ஒரு தரக்குறைவான செயல் என தாய்மார் தான் கருதுகின்றனர்.

**சிறு வயதிலிருந்தே சீத னத்தை மையப்படுத்திய படிப்பு, அது சார்ந்த சமூக உணர்வூட்டல்கள் இடம் பெறுகின்றன. நீயாக யாரையாவது காதலித்துக் கலியாணம் கட்டக் கூடாது. உனக்கேற்ற மனைவியை நான் தெரிவுசெய்வேன் என் கின்ற தாய் "மகனே! நீ என் பிள்ளை உன்னை ஒருபோதும் வேறொருவருக்கு காசுக்கு விற்க மாட்டேன்"** என்று எந்தத் தாயும் அடித்துக்கூறுவதில்லை காதலித்து விடாதே! காதலித்தால் காசு வாங்கமுடியாது என்பதே அதன் உள்நோக்கம்.

தனது மகனுக்கு இவ்வளவு சீதனம் தந்தால் தான் கட்டிவைப்பேன் என்கின்ற தாய்மார் தமது சம் மந்தியாக வரவிருக்கும் தாயைப்பற்றி ஒரு கணம்கூட சிந்திப்பதில்லை. அந்த நிலை தனக்கு வந்தால் என்று நினைக்கத் தவறுகின்றனர்.

**எம்முன்னோர் வாழ்க் கையை இவ்வளவு சிக்கலாக வைத் திருந்ததில்லை மிகவும் அபி லாஷைகள் குறைந்த இன்பமான வாழ்க்கை அது.**

ஒருவர் தான் சீதனம் வாங்கா ததற்கு இப்படி ஒரு காரணத்தைக் கூறினார் **"நான் ஒரு பட்டதாரியாக இருந்தபோதிலும், நான் உழைத்து 100 ரூபாவைக்கூட மிச்சம் பிடிக்க வில்லை. நான் திருமணம் செய்யப் போகும் பெண் இலட்சக்கணக்கில் காசு வைத்திருக்க வேண்டும் என் றால் நானும் அந்தளவுக்கு பணம் வைத்திருக்க வேண்டும் அல்லவா?"**

**பல மாப்பிள்ளையின் குடும் பங்கள் சீதனம் வாங்கும்போதுதான் அவ்வளவு தொகைப் பணத்தை முதன்முதலில் காண்கின்றார்கள். ஆசையில் பலதடவை எண்ணிப் பார்க்கிறார்கள். திடீரென தாம் இலட் சாதிபதியாகி விட்டதை எண்ணிப் பெருமைப்படுகிறார்கள். ஆனால் காசு கொடுத்த பெண்ணின் குடும்பம் மாப்பிள்ளையையும் அவரது குடும்பத் தையும் தீர்த்து வாங்கிவிட்டார்கள் என்றோ, அன்றிலிருந்து தாம் அந்தப் பெண்ணுக்கு அடிமையாகி விட்டோம் என்பதையோ அவர்க ளால் உணர முடிவதில்லை.**

பணமில்லாத காலத்தில் அவர்களுக்கு இருந்த கௌரவமும், மதிப்பும், அபிமானமும் காசுக்கு அடைவு வைத்ததைப்பற்றி அவர்க ளால் உணர முடிவதில்லை.

பலர் லொத்தல் சீட்டில் விழுந்த பல இலட்சம் அல்லது கோ- டியை விரைவிலேயே இழந்துவிடு வார்கள். இழந்து விடுவதற்குக் கார ணம் அவர்களிடம் பணத்தை எவ்வாறு கையாளுவது என்ற கெட்டித்தனம் இல்லாமைதான். ஒரு வர் ஏழையாக இருப்பதற்கும் பணக்காரனாக இருப்பதற்கும் , பணத்தைக் கையாளும் தன்மையில் உள்ள வேறுபாடுகள் தான் காரணம். (Money Management).

பல குடும்பங்களில் காத லிப்பது என்பது ஒரு தெய்வ குற்றம்போல பார்க்கப்படுகின்றது. அதாவது தனது மகன் ஒரு பெண்பிள்ளையை தெரிவு செய்தால் அவள் ஒரு "வேசை" என்ற வார்த்தைப் பிரயோகம் காத்தவராயனின் தாயா ரான அம்மனிடம்கூட இருந்தது. காத்தவராயன் ஆரியப்பூமாலை என்ற பெண்ணைக் காதலிப்பதாக தாயிடம் கூறியபோது **"எங்கயடா மகனே கண்டு வந்தாய், என்னிலுமோ பெரிய பத்தினியை"** என்று கோபப்படும் அளவில்தான் உள்ளது.

பல இடங்களில் தரகர்கள் ஊடாக கல்யாணம் பேசுவதற்குக் கார ணம் அவர்கள் ஊடாக அதிக பணத் தையும், சொத்துக்களையும் பேரம் பேசி வாங்குவதற்காகவே.

தரகர்கள் பொருந்தாத சாத கத்தைக்கூட நேரத்தை மாற்றி பொருத்தி விடுகின்றனர். இது பெண்ணின் தரப்பிலும், ஆணின் தரப்பிலும் எதையோ சாதித்துவிட்ட தாக பொய்சொல்லி பணம் பரிமாறப் பட்டது என்பது உண்மை. தரகர் ஒரு போதும் அந்தக் குடும்பம் சிறப் பாக வாழவேண்டும் என்று நினைப்பதில்லை. அவர்களுக்கு கிடைக்கவேண்டிய பணம் கிடைத் தால்சரி என்பதுடன் முடித்துவிடு வார்கள்.

சில சந்தர்ப்பங்களில் மாப் பிள்ளைப் பகுதியும், பெண்ணின் பகுதியும் அறிமுகமாகிய பின் தர கர்களைத் தேடாமல் விட்டுவிட்டால் அந்தத் திருமணத்தைக் குழப்புவதில் தரகர்கள் படாதபாடு படுகின்றனர். கூடாத விடயங்களைக்கூறி அவர்க ளைப் பிரித்து விடுகின்றனர். அல்லது தமக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை தருமாறு சண்டை பிடிக்கின்றனர்.


**இவ்வாறு ஒரு குடும்ப நட வடிக்கையில் மூன்றாமவரின் தலை யீடு என்பது பணத்தாசையால் முக்கியத்துவப்படுத்தப்படுகின் றதே தவிர, தரகுப்பணம் இல் லாது அதை ஒரு சேவையாக செய்வதற்கு எந்தத் தரகரும் முன்வருவதில்லை.**

சிலர் தமது பிள்ளை களுக்கு சீதனம் வாங்காது திருமணம் செய்து வைத்ததாக பெருமைப்படு பவர்களும் உண்டு. ஆனால், அது எந்த வகையில் என்று பார்த்தால் ஒரு குடும்பத்தில் ஐந்து ஆண் பிள் ளைகளுக்கு ஒரு பெண் பிள்ளை யென இருப்பவர்களைப் பார்த்து திருமணம் செய்கின்றனர். அதன் எதிர்பார்ப்பு என்னவெனில் அவ்வீட் டின் முழுச் சொத்துக்களும் அந்தப் பெண் பிள்ளைகளுக்கு கிடைக்கும் என்பதாகும். சீதனம் வாங்காது ஓர் ஏழைப்பெண்ணைத் திருமணம் செய்தால்தான் அது சரியான அர்த்தம் பெறும்.-

இந்தச் சீதன விடயத்தில் ஓர் ஆட்டுக்கடாவைப்போல தன்னைப் பெற்ற குடும்பமே இன்னொருவருக்கு விற்றுக் காசு வாங்குகிறார்களே என்ற விடயத்தை ஆண்கள் உணர வேண்டும். தான் ஒரு போகப்பொரு ளாக யாரோ தெரியாத குடும்பம் ஒன்றுக்கு விற்கப்படுவதை ஆண் களே முதலில் எதிர்க்கவேண்டும்.

வேறு யாருடையதோ காசில் மோட்டார் சைக்கிள், கார் ஓடுவதோ வாழ்வதோ ஓர் இழிநி- லை என்பதை ஒவ்வொரு ஆண்மக னும் உணரும்போது இந்தக் கொடு மையிலிருந்து ஆண்கள் தங்களை விடுவித்துக்கொள்ள முடியும்.

" இவ்வளவு காசு தந்தால் தான் கட்டுவேன்" என்ற மாப் பிள்ளையைக் கட்டமாட்டேன் என்று பெண் பிள்ளைகளும் திடமாக முடி வுகளை எடுக்கவேண்டும். இவ்வாறு இவ்விரு முடிவுகளிலும் இளம் ஆண்களும் பெண்களும் இறங்கி னால், **ஓர் அங்கீகரிக்கப்பட்ட கற் பழிப்பிலிருந்து பெண்கள் மீள்வ தற்கு வாய்ப்பளிக்கப்படும்.**



சங்கஇக்கியத்தில் காதலனும் காதலியும் தம்முள் இரண்டறக்கலந்து விடுவதை **"செம்புலப்பெயல்நீர்போல் அன்புடை நெஞ்சம் தாம் கலந் தனவே"** என்று கூறப்படுகிறது. அதா வது மழை செம்மண் நிலத்தில் பெய்யும்போது மழைநீரும் மண் ணும் கலந்து வழிந்தோடும் நீர் சிவப்பாக ஓடுவதுபோல அன்புள்ள வர்கள் கலந்தால் அது பிரித்தறிய முடியாத ஒன்று எனப்படுகிறது. இது காசில் மட்டும் காதல் கொள்வோருக்கு புரியாது.

**சீவரத்தினம்**



**"நீங்கள் திரும்பிவந்து பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில் கட்டிடங்கள் மட்டுமே இருக்கும்"** யாழ். ஆயர் மேதகு யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் புலம்பெயர் தமிழர் மத்தியில் உரையாற்றும்போது குறிப்பிட்ட வாசகம் இது.

யாழ்ப்பாணத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு நவீன தொழில்நுட்பம் சம்பந்தமான தொழிற்சாலைகளை புலம்பெயர் தமிழர் சமூகம் அமைத்துத்தரவேண்டுமென அறைகூவல் விடுத்தார் யாழ். ஆயர் 28.05.2016 இல் பெல்ஜியத்தில் உள்ள **பனு மாதா தேவாலயத்தில்** 31 ஆவது திருப்பயண ஆராதனைக்காகச் சென்றிருந்த தமிழர் மத்தியில் இவ்வாறு உரையாற்றியிருந்தார்.

## கொமினிஸமும் இயேசுவை சிலுவையில் அறைந்ததா?



போப்பாண்டவர் சிலி நாட்டிற்கு விஜயம் செய்திருந்தபோது அந்நாட்டு ஜனாதிபதியால் நினைவுப் பரிசொன்று வழங்கப்பட்டது. அதில் கொமினிஸத்தின் குறியீடான அரிவாளும் சுத்தியலும் பொறிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நினைவுச் சின்னத்தில் இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட விம்பமும் சேர்க்கப்பட்டிருந்தது.

## நிலாவரைக் கிணற்றின் ஆழம் காணப்பட்டது



இதுவரை மர்மமாக இருந்த நிலாவரைக் கிணறு பற்றிய ஆழம் 07.06.2016 உடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது அதன் ஆழம் 152 அடி மட்டுமே. காங்கேசன்துறை வடக்கு கடற்படை அதிகாரி லெப்.கொமாண்டர் ஏரந்த திசாநாயக்க தலைமையிலான குழுவினர் இக்கிணறு தொடர்பான ஆய்வில் இரண்டு நாட்கள் ஈடுபட்டனர்.

இதற்கு 25 சுழியோடிகள் பயன்படுத்தப்பட்டிருந்தனர். 55 அடி வரை சுத்தமான தண்ணீராகவும், 60 அடிக்குக் கீழ் உப்புத் தண்ணீர் எனவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால் நிலாவரைக் கிணற்று நீர் கீரிமலையுடன் தொடர்புபட்டுள்ளது என எம் முன்னோர் கூறுவது சரியானதே.

## கையெழுத்துப்போராட்டம்



அண்மையில் முன்னிலை சோசலிசக் கட்சியினர் பொதுமக்களின் கையெழுத்துப்பெறும் நடவடிக்கையில் யாழ். பஸ் நிலையத்தில் இறங்கியிருந்தனர். இத் கையெழுத்து பெறுவதன் நோக்கம் :

- இராணுவ முகாம்களை மட்டுப்படுத்துவது
- மக்கள் குடியிருப்பு பகுதியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது என்பனவாகும்.

### எங்கள் மூதாதையர்கள்....

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**கே:** நாணயங்கள் என்று பார்த்தால் எத்தகைய நாணயங்கள் வைத்திருக்கிறீர்கள்?


**ப:** நாணயங்களில் மன்னர் காலத்து நாணயங்கள், போர்த்துக்கேய, ஒல்லாந்து, ஆங்கிலேயர் காலத்து நாணயங்கள், இரட்டை மீன் அடையாளம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் எனப் பல உண்டு. இவை பல்வேறுபட்ட உலோகங்களால் பல்வேறு பட்ட வடிவங்களில் செய்யப்பட்டுள்ளன.

**கே:** வேறு எத்தகைய அழகியல் பொருட்கள், அல்லது ஆபரணங்கள் உண்டு.?

**ப:** மன்னாரப் பகுதியில் எடுக்கப்பட்ட சங்குகளில் வெட்டி எடுத்து மெருகூட்டப்பட்ட வளையல்கள் உள்ளன.

**கே:** மரத்தளபாடங்கள் அல்லது மரத்தால் ஆன கைவினைப் பொருட்கள் எவ்வளவு காலம் பழமையானவை உண்டு.

**ப:** 200 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தவை உள்ளன. இதில் மிகப்பழமையான சிற்ப வேலைப் பாடுள்ள காவடி ஒன்றின் இரு பக்க கைபிடிகள் மட்டுமே தற்போது எஞ்சியுள்ளது.1995 இல் யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர்ந்தபோது அது முழுமைப்படுத்தப்பட்ட வடிவத்துடன் இருந்தது.




சாப்பாட்டு மேசையில் மேசைத் துடைப்பம் வைக்கும் தாங்கி தாங்கி

அக்காவடியின் குறுக்கு மரம் (தோளில் வைக்கும் பகுதி) மிகவும் பாரம் குறைந்த ஒரு மரத்தினால் செய்யப்பட்டிருந்தது. அது என்ன மரம் என்பதை என்னால் இன்றுவரை ஊகிக்கமுடியவில்லை.

பெட்டகங்கள், மிகவும் கலைநுணுக்கத்துடனும், வனப்புடனும் செய்யப்பட்டவை உண்டு. அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் எனது அப்பாவிற்கு வழங்கிய பெட்டகம்கூட தற்போது எம்மிடம் உண்டு. அப்பெட்டகம் றங்கூன் தேக்குப் பலகையில் செய்யப்பட்டது. (முற்றும்)

## ரொம்ப கண்டிப்பானவர்



25.06.2016 இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவல கத்தில் நடைபெற்றபோது வட மாகாண சபை அமைச்சர்களின் ஊழல்கள் பற்றி காரசாரமாக விவாதிக்கப்பட்ட போது சம்பந்தர் ஒரு கண்டிப்பான உத்தரவை விடுத்திருக்கிறார். அதாவது **"ஊழலை அனுமதிக்கமுடியாது"** என்பதே அது

# தபாலில் தாய் இதயம்



மகனே!
முதியோர் இல்லத்து முற்றத்திலிருந்து
முத்தே நானுனக்கு எழுதும் கடிதம்
கருவில் நீ வந்த காலத்தில் இருந்து
கருமணியாய் போற்றிய பொக்கிஷப் பொழுதுகள்

வயிற்றில் நீயுதைக்க கல் சுமந்தேன் நானும்,
உதைக்கும் கனந்தோறும் கல் அழுத்திய காயம் மறந்தேன்
பூமி வரும் நாளில் வேதனையை நான் ரசித்தேன்
மார்போடு உனையணைத்து மனம்வேகும் காயம் மறந்தேன்.

பள்ளி வாசல் வரை உனைச் சுமந்து சென்றேன்
படுத்துறங்கும் உனதழகை என் கண்ணிரில் படம் வரைந்தேன்
பேசும் மொழிகளை இதயத்தில் பதிவிறக்கம் செய்தேன்
பேசாத மொழிகளையும் நான் புரிந்து கொண்டேன்.

சாதம் வழித்து வைத்து வாசலில் காத்திருந்தேன் – நீ
சாப்பிட்ட தட்டினைக் கழுவி என் முகம் பார்த்து பசிமறந்தேன்
வாடிய வடிவழகைப் பார்த்தால், வாடிடும் என்னுள்ளம்
வாடா மகனேயென்று மடிமீது உறங்க வைப்பேன்

சின்னவன் நீயென்று நான் கருதும் நேரம்
சிறுமீசை அரும்ப நாணத்தோடு நெளிந்தாய்
கூடாத கூட்டத்தோடு கூடிவிட்டாயென்று,
கும்பிட்டு அழுதேனே சாமியின் பாதத்தில்.

மகனுக்கு மகன் வந்தான். என்மடி விளையாட
மண்தொட்ட கையாலே மகனைத் தொடாதே
"மனைதனைவிட்டு புறப்படு கிழவி" என்று நீயுரைத்தாய்
"மகனே நலமா....? கேட்கும் தூரம் நானில்லை

"வீட்டுக்கு நேரத்துக்கு வாறியா...?" தெரியவில்லை.
'பெட்டகத்தில் அரிசிமணியிருக்கா...?" தெரியவில்லை.
"மகனே மார்போடு இருந்த காயம் மாறிவிட்டுதோ....?
"மருமகள் பேசுகிறாளா...? உன் தாய்க்குச் சொல்லிவிடு.

இருநூறு ரூபாயிருக்கு வந்து வாங்கிச் செல் – இங்கு
இரவுக்கு இறைச்சியாம் வா தம்பி சாப்பிட ஒருபிடி தாறன்.
காலையில் கடும் குளிரப்பா, போர்த்துப் படுத்திரு.
காகம் கரையுது.கண்ட கனவு சரியில்லை. நலத்தோடு நீயிரு.




இல்லத்தில் நித்தம் குளிக்கின்றேன். புதுச்சேலை கட்டுறன்.
இனிப் பேரனைக் கூட்டிவா, முந்தானை முடிச்சில் இனிப்பிருக்கு.
என்மடியில் பேரனோடு நீயும் உறங்கத் தாலாட்டுப்
பாடவேண்டும் – இங்கு
என்னத்தை சொல்ல? தொலைபேசி இருக்கு
பேசத் தெரியவில்லை உதறுதடா.

பிழையில்லை உன்னில் நீயென் குழந்தையடா
பிற்காலம் வரும் அம்மாவைப் பாரென்று சொல்லித்தர மறந்தேன்.
நீயென்ன செய்வாயப்பா உன்காலம் சரியில்லை
நிறுத்துகின்றேன் பாடலை . சோற்றுக்கு மணியடிக்கின்றது.
என்றும் உன் அம்மா – பவளம்

நன்றி

ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்
யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

# இராணுவம் ஜனநாயகத்தையே பாதுகாத்தது. - கலாநிதி தயான் ஜெயதிலக


• THE RESEARCH DEBATE: Jayadeva, Andare vs. S.G. •
LANKA GUARDIAN
SPIES, SPYCATCHERS, JUDGES, JOURNALISTS
• Sex, Sri Lanka and the 'Secret War' — Salamat Ali

இலங்கையின் சிறந்த அரசியல் ஆய்வாளராக நீண்டகாலம் பணியாற்றியவர் மேவின் டி.சில்வா. இவரால் வெளியிடப்பட்ட ஆங்கிலச் சஞ்சிகைதான்லங்காகாடியன்(LankaGuadian) இவர் ஒரு நடுநிலை பத்திரிகையாளர். தமிழர் விடயத்திலும் அதிகம் எழுதியவர்.

அவரது மகனான கலாநிதி தயான் ஜெதிலக ஈ.பி.ஆர்.எல்.எவ் பட்டியலில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

வடகிழக்க விவகாரங்களிலும் தமிழ் மக்கள் தொடர்பிலும் ஆழமான அறிவுள்ளவர். முன்னாள் இராஜதந்திரி. அரசியல் ஆய்வாளர் என பல தகுதிகளைக் கொண்டவர்.

இறுதி யுத்தம் ஐ.நா. கூட்டத்தொடர். இலங்கைக்கு வரவிருக்கும் அச்சுறுத்தல் போன்ற விடயங்களில் தனது கருத்தை இவ்வாறு நியாயப்படுத்துகிறார். – **அரசியல் சாசனத்தின் அடிப்படையிலான இராணுவம் ஒன்று பயங்கரவாத அமைப்பொன்றை தோற்கடித்து நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொண்டதன் பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டு நீதிவான்களைக் கொண்டு விசேட நீதிமன்ற விசாரணை உலகில் எந்த ஒரு நாட்டிலும் நடைபெறவில்லை. அது விழுமியங்களுக்குப் புறம்பானது.**

வேறு எங்கும்செய்யாத ஒன்றை செய்வதற்கு நாம் ஏன் கழுத்தைக் கொடுக்கவேண்டும். இராணுவத்தில் சேவையாற்றியோர் மற்றும் அவர்களது குடும்பங்களை எடுத்துக்கொண்டால் அவர்களின் எண்ணிக்கை 1 மில்லியனாக இருக்கும். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் பற்றியும் கவனம் செலுத்தவேண்டும்.

விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்க அவர்கள் விரும்புகிறார்களா? என்பதையும் கவனத்தில் எடுக்கவேண்டும். **தயவு செய்து விசேட நீதிமன்றங்களை அமைத்து சட்டத்தரணிகள் நீதிமன்றங்களைப் பயன்படுத்தி தண்டனை வழங்க முயற்சிக்கவேண்டாம்..."**



## திருமணப் பொருத்தங்கள்......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

**நான் பேராசிரியர் கிருஷ்ண மூர்த்தி பத்ததிப்படி ஆராய்ந்து பார்த்தபோது இருவரின் ஜாதகத்திலும் விவாகரத்து நிலை உள்ள ஜாதகம் என்தையும் அந்த விவாகரத்தைச் செய்யக்கூடிய கிரகங்களின் தெசை, புத்தி, அந்தர, சூச்சும காலங்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் குறித்த காலத்துள் இருவருக்கும் விவாகராத்துக் கிடைக்கும் என்பதையும் தெளிவுபடுத்தினேன்.**

இதைக்கேட்ட பின்பே மாப்பிள்ளையும் தாயும் நடந்த விடயத்தை என்னிடம் சொல்லி முன்பு பொருத்தம் பார்த்த துண்டுகளை என்னிடம் காண்பித்து சோதிடர் பொருத்தம் என்று நம்பிக்கையாகக் கூறிய பின்பே தாங்கள் இருசாராரும் திருமணத்தைச் செய்ததாகவும் மிகுந்த வேதனையுடன் கூறினர்.

பொருத்தம் பார்த்த 3 துண்டிலும் தசப்பொருத்தம் மட்டும் பார்க்கப்பட்டு கிரகப்பொருத்தம் உத்தமம் என்று போடப்பட்டு வீதமும் போடப்பட்டிருந்தது. பின்னர் அவர்களுக்கு பொருத்தம் வேறு ஒருவரின் ஜாகத்திலுள்ள சாதக பாதக நிலை வேறு. தசப்பொருத்தம் மட்டும் பார்த்து ஜாதகத்தைத் தனித்தனியே ஆராய்ந்து பார்க்காததுதான் இதற்குக் காரணம் எனவும், இந்த இருவரும் யாரைத் திருமணம் செய்தாலும் அது விவாகரத்தில் தான் முடியும். இது அவர்களின் ஜாதகநிலை என்பதையும் தெளிவுபடுத்தினேன்.

இனி நீங்கள் தைரியமாக விவாகரத்திற்குப் போடுங்கள் நிச்சயம் குறித்த காலத்துள் விவாகரத்துக் கிடைக்கும் என்று கூறினேன். 5 மாதத்தால் விவாகரத்து கிடைத்தது. இது உண்மைச் சம்பவம்.

இது போன்று எத்தனையோ விடயங்கள் எனது அனுபவத்திலுள்ளது. இதுதான் சோதிடர்கள் செய்யும் மிகப்பெரிய தவறான விடயம், தசப் பொருத்தம் மட்டும் பார்த்து திருமணம் நிச்சயிக்கக்கூடாது கிருஷ்ணமூர்த்தி பநத்தியின் படி இவ்விருவரின் ஜாதகத்தில் 7 ஆம் பாவ உபாதிபன் நட்சத்திரத்தின் வக்கிரம் பெற்று 6, 12 ஆம் பாவத்தை குறிகாட்டி நிற்கின்றது. அத்தோடு 7 ஆம் பாவ 2 ஆதிபன் நின்ற நட்சத்திராதிபதியும் வக்கிரம் பெற்று 12 ஆம் பாவத்தைக் குறிகாட்டி நின்றது. அத்தோடு அவர்களின் தெசை புத்தி, அந்தரகாலமும் நடந்து கொண்டிருந்தது. இவ்வாறாக ஜாதகத்தின் நிலையை அறியாது பொருத்தம் பார்ப்பதே இந்த எதிர்மறையான விளைவுக்கு காரணமாகும்.

பொருத்த விடயத்தில் இருவர் ஜாதகத்திலுள்ள ஆயுள், ஆரோக்கியம், தனம், அதிர்ஷ்டம், புத்திரபாக்கியம், மன ஒற்றுமை, பரஸ்பர அன்பு, கற்பும் காமமும், மாங்கல்யபலம், எதிர்கால தசை போன்ற விடயங்கள் இருவர் ஜாதகத்திலும் திருப்தியாக இருந்தால் போதுமானது.

இதை நல்ல பொருத்தமெனக் கருதி நிறைவான மனத்துடன் திருமணத்தை செய்து வைக்கலாம். எனவே, **தசப் பொருத்தம் பார்க்கும் விடயத்தில் மக்கள் அவதானம் செலுத்த வேண்டும் என்பதும் நல்ல சோதிடர்களை அனுகி பொருத்த விடயங்களை அறிந்து அதன் பின் எதிர்காலத்தில் திருமணம் செய்து வைக்க முயற்சிக்க வேண்டும்** என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

## இப்படியும் பராமரிக்கலாம்...




**திரு.பண்டாரி பிள்ளையார், வயது –74, கலையரசி வாசிகசாலை அருகாமை, ஏவினை, புன்னாலைக்கட்டுவன் என்ற ஊரைச்சேர்ந்த இவர் – மேற்படி றலி சைக்கிளை கடந்த 54 வருடங்களாக சிறந்தமுறையில் பாவித்து வருகிறார்.**

“நான் 20 வயதாக இருக்கும்போது ரூபா 270 இற்கு இந்தச் சைக்கிளை வாங்கினேன். 1995 இடப்பெயர்வின்போது கிலாலிப் பகுதியில் கைவிட்டுவிட்டு படகில் ஏறத்தயாராய் நின்றபோதிலும் படகில் ஏற முடியாததால் மீண்டும் திரும்பி எனது சைக்கிளை எடுத்தேன். அந்தத் தருணத்தில் மட்டும்தான் இச்சைக்கிளை நான் பிரிந்திருந்தேன்.

54 வருடங்களில் உதிரிப்பாகம் என்று பெடல் மட்டும்தான் (கால்மிதி) மாற்றியிருக்கிறேன். இதன் தற்போதைய விலை 90000 - 100000 ரூபா வரையில் போகிறது. சிலர் ஒறிஜினல் றலி சைக்கிளை வாங்கி, வெளிநாடுகளுக்கு கொண்டு போகிறார்கள்”.

இச்சைக்கிளின் சகல உதிரிப்பாகங்களும் ஒழுங்காகவே காணப்படுகின்றன. இதன் ஆசனம் மிகவும் தரமானது. ஒரு விவசாயினால் 54 வருடங்களின் பின்பும் அச்சைக்கிளின் எழுத்துக்கள்கூட அழியாமல் பாவிக்க முடிந்திருக்கிறது என்றால் இது யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் அதிசயமாக கொள்ளலாம். அவரை பாராட்டாமல் இருக்கமுடியாது.

## (தற்கொலை.....

(30ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம் ஒருவர் தற்கொலை மனநிலை-லயில் உள்ளாரா? என்பதைக் கூட மற்றவர்கள் அவதானிக்கமுடியும்.

முகநூல் போன்ற தனி மையிலான செயற்பாடுகளை குறைத்தல் அவசியம். முதலில் பாதிப்புக்குள்ளானவர்களை சமூகமயப்படுத்தல் வேண்டும். இந்த சமூகமயப்படுத்தல் மூலம் 20% மான பிரச்சினைகளைக் குறைத்துவிட முடியும்.

இதேவேளை, நாம் இன்னோர் வகையான தற்கொலை முயற்சியையும் புறந்தள்ளிவிட முடியாது. கொள்கைக்காக மரணித்தவர்கள் உரும்பிராய் சிவகுமாரன் தொடக்கம் 2009 ஆம் ஆண்டுவரை நாட்டு விடுதலை என்ற பெயரிலும், இரகசியங்களைப் பாதுகாப்பதற்காகவும் தமது இன்னுயிர்களை மாய்த்தவர்கள் என்று பார்த்தால் அதுவும் ஒரு தற்கொலையின் வடிவம் தான். ஆனால் அது தமக்காக அல்லாது பொது நலனுக்காக மேற்கொள்ளப்பட்டவை.

ஒருவர் தனது உயிரை இயற்கையாக அல்லாமல், செயற்கையாக மாய்த்துக்கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. முடிந்தவளவு மற்றவர்களின் அரவணைப்பிலும், கனிவான நடவடிக்கையினாலும் இத்தற்கொலையை ஓரளவுக்காவதுதடுக்க முடியும். சிறு பிள்ளைப் பராயத்திலிருந்து பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கப் பழக்கவேண்டியது பெற்றோரதும், சமூகத்தினதும் கடப்பாடாகும்.

எமது சமூகத்தில் இடம்பெற்ற தற்கொலைகளின் காரணங்களை எடுத்து நோக்கினால் வேறு சமூகம் ஒன்றில் அது பெறுமானமே இல்லாத விடயமாக இருப்பதைக் காணமுடியும். தற்கொலையைத் தடுப்பதில் அனைத்து தனி மனிதனுக்கும் பொறுப்பு உள்ளது. தற்கொலை தடுப்பு விடயத்தில் நாடு தழுவிய அளவில் சிறிலங்கா சுமித்திரையோ (Srilanka Sumithrayo) தற்கொலை செய்வோரில் 75% மான மக்கள் கிராமத்து மக்கள். இவர்கள் மத்தியில் சுமித்திரையோ தனது பங்களிப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இதன் யாழ். அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 021 222 8117 இல் தொடர்புகொண்டு மற்றவர்களுக்கு உதவமுடியும்.

## உடலில் குண்டுச் சிதறல்கள்....

(06ம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எனப் பலரூடாக அதனைப் பெறமுடியும். அதைவிட கிராமிய, நகர வைத்தியசாலைப் பதிவுகளிலிருந்தும் இவற்றைப் பெறமுடியும். மிகச் சிறிய நாட்டில் மிகச் சிறிய மக்கள் கூட்டத்திற்குள் எல்லோருடைய கையிலும் கைத்தொலைபேசிகளும், ஐபாட்டும், முகநூல் தொடர்புகளும் இருப்பதால் ஏது பயன்? உயிருடன் இருப்போரின் பதிவுகளைப் பெறுவதில் சிரமம் என்றால் யுத்தத்தில் இறந்த, மற்றும் காணாமற் போனவர்களை எப்படித்தேடி தரவு எடுப்பது.

ராஜிதசேனரட்ன போன்ற அமைச்சர்கள் தமிழர்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்த சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் என்ன நினைத்திருப்பார்கள்?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களது பிரதிநிதிகள் உதவாமல் இருக்கும்போது வேறு யார் உதவமுடியும்? “கோவணத்துடன் கிடப்பவன் குளிருது என்று சொல்லும்போது அவனுக்கு ஒரு போர்வை கொடுக்காமல் இழுத்துப் போர் என்றால் அவன் எப்படிப் போர்ப்பது”? அந்த மிகச் சிறிய துணியுடன் இருக்கும் கூட்டமைப்பை இழுத்துப்போர் என்று மக்கள் கூறினால் அவர்களால் என்னதான் செய்யமுடியும். வைத்துக்கொண்டா வஞ்சகம் செய்கிறார்கள்.

மற்றவர்கள் உதவத்தயாராக இருக்கும்போது அதைப் பெறுவதற்குத் தயாரில்லாத நிலையில் தமிழ்த் தலைவர்கள் இருப்பது மிகவும் வேதனைக்குரியது. ஆனால், மக்களோ அவர்களிடம் தங்களுக்கு உதவக்கூடிய ஏதோ திட்டம் இருக்கிறது என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் குண்டுத்துகள்களுடன் காத்திருப்பதுதான் அவலமானது. ஆனால், தங்களது குடும்பத்தில் இவ்வாறான பாதிப்பு இருந்திருந்தால் இப்படியான ஒரு பதிலை பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியிருப்பார்களா? தரவுகளை உரிய நேரத்தில் முன்வைத்து ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பிப்பதன் மூலமே உள்நாட்டு, வெளிநாட்டு உதவிகளை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியும்

# SSSSS கள்

இது ஜப்பானில் அறிமுகம் செய்யப்பட்ட ஓர் அலுவலக நடைமுறையாகும். இதன்மூலம் அதிகம் அடைவைப் பெறக்கூடிய வினைத்திறனை உருவாக்குவதே நோக்கமாக இருந்தது. ஜப்பானில் இந்நடைமுறை வெற்றியளித்ததுபோல இலங்கையில் தமிழர் மத்தியில் வெற்றியளிக்குமா? இந்தக் கேள்விக்குப் பதிலுண்டு.

ஜப்பானியர்கள்

1. நாட்டுப்பற்றுள்ளவர்கள்
2. ஒரு கணப்பொழுதையும் வீணாகக் கழிக்காதவர்கள்

3.நவீன மற்றும் சரியான நேரத்திற்கு போக்குவரத்து சேவைகள் இருப்பதால் 300 கிலோ மீற்றருக்கு மேல் சென்று பணிபுரிபவர்கள்.

4. உலகில் உள்ள அத்தனை அறிவியல் புத்தகங்களையும் ஜப்பானிய மொழியில் மொழிபெயர்த்து உடனடியாகவே அந்த விடயங்களை வாசித்து அறியக்கூடிய வாய்ப்புள்ளவர்கள்.

5. ஒருவரை ஒருவர் மதிக்கும் பண்புள்ளவர்கள்.
6. உலகில் முதன்மை இடத்தில் இருக்கக்கூடிய பல கருவிகளைக் கண்டுபிடித்தவர்கள்
7. ஒரே விடயத்தை திரும்பத் திரும்ப கதைத்துக்கொண்டிருக்காதவர்கள்.
8. எல்லா விடயங்களிலும் ஒரு நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுபவர்கள். ஒரு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும்போதே அதன் திறப்புவிழாவுக்கான நாளையும், நேரத்தையும் தீர்மானிப்பவர்கள்.
9. ஒரு புகையிரத நிலையத்தில்கூட 5 நிமிடம் நிற்கவேண்டி ஏற்பட்டால் அதற்குள் பலருக்கு Post Card எழுதி அனுப்புவார்கள்.
10. கணனியை எல்லா விடயங்களிலும் பயன்படுத்துபவர்கள்.
11. மனித வலுவுக்கு அப்பால் றோபோக்களையும் வேலைகளில் ஈடுபடுத்துபவர்கள்

இவ்வாறான ஒரு முதல்தர மக்கள் கூட்டம் கையாளுகின்ற அலுவலக நடைமுறையை அல்லது அவர்களின் தகைமைகளில் எதையுமே கொண்டிருக்காத தமிழரால் இந்நடைமுறையினை எவ்வாறு கையாள முடியும்.

5 S கள் என்றால் என்ன?

1.SEIRI - Shorting - வகைப்படுத்தல்
2.SEITON -Systormatic - முறைமை
3. SEISO -Sanitizing- சுகாதாரமாக இருத்தல்
4.SEIKETU-Standarizing - தரப்படுத்தல்
5.SHITSUKE - Selfdecipline - தனிநபர் ஒழுக்கம்

இவற்றை உரியவாறு உள்வாங்கினால் இலங்கையில் உள்ள தமிழருக்கு இது எவ்வளவு கஷ்டம் என்பதும், அந்தத் தரத்திற்கு வருவதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் எடுக்கும் என்பதும் புரியும்.

ஜப்பானியரிடம் காணப்படும் ஒரு பழமொழி **“ உன்னால் செய்யமுடியுமானால் என்னால் அதைவிடத் திறமாக செய்யமுடியும்” என்பதாகும்.**

**(If you can do, I can do better than you)**

---

# முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை

**வா.ஜெயரட்ணம்**

> **வாக்காளர் பட்டியல்**
> இது எல்லா நாடுகளிலும் உள்ள பொதுவான நடைமுறையாகும். ஜனநாயக தேர்தல் ஒன்றின் மூலம் நாட்டின் தலைவர்களை அந்த நாட்டின் பிரஜைகள் தெரிவு செய்வதற்கு ஒவ்வொரு பிரஜையும் தனது பெயரை (18 வயதுக்கு மேல்) வாக்காளர்பட்டியலில் சேர்த்துக்கொள்வது ஒவ்வொரு பிரஜையினதும் கடப்பாடாகும்.

12.05.2016 உதயன் பத்திரிகையில் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பெற்றோரின் பெயர் இல்லாத காரணத்தால் 04 மாணவர்களுக்கு கல்வியியற் கல்லூரியில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இதேபோன்ற ஒரு சூழல் 1968 ஆம் ஆண்டு எனக்கும் ஏற்பட்டது. அந்த விடயம் பற்றி முகவரியூடாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கண்டி மாவட்டத்தில் கண்டி நகருக்கு அண்மையாக உடத்தலவின்ன கிராமத்தில் எங்கள் குடும்பம் வாழ்ந்தகாலம் அது. அந்தச் சந்தர்ப்பத்தில் க.பொ.த.(சா) சித்தியுடன் மாணவ ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அவ்வாறே விண்ணப்பித்து பரீட்சையிலும் சித்தியெய்திய பின்னர் 1968 ஒக்டோபர் அளவில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தேன்.

**சகல ஆவணங்களையும் என்னால் சமர்ப்பிக்கக்கூடியதாக இருந்தபோதிலும், வதிவிடச் சான்றிதழை மட்டும் என்னால் சமர்ப்பிக்க முடியவில்லை. ஏனெனில், என் பெற்றோரின் பதிவுகள் யாழ்ப்பாணத்தில் இருந்ததாலோ என்னவோ உடத்தலவின்ன கிராமத்தில் கிராமசேவகர் அலுவலகத்தில் பதிவை மேற்கொள்ளவில்லை.** இதனால் கிராமசேவகரும் எனக்கு வதிவிட சான்றிதழ் தர மறுத்துவிட்டார்.

இந்த நிலையில் கண்டி கல்வித்திணைக்களத்தினர் வதிவிடச் சான்றிதழ் மிகவும் அவசியம் எனவும், அதைச் சமர்ப்பித்தால் மட்டுமே நியமனம் வழங்க முடியும் எனவும் கூறி விட்டனர். 21 வயதில் ஓர் அரச ஆசிரிய நியமனம் தவறிப் போகிறதே என்ற பெரும் மன உளைச்சலுக்கு உள்ளானேன். இந்த நிலையில் தான் ஏதோ ஒரு நம்பிக்கையில் எமது பகுதி D.R.O விடம் (இப்போதுள்ள AGA, பிரதேச செயலர் பிரிவுக்குச் சமமானது) சென்று எனது துர்ப்பாக்கிய நிலையை விளக்கும்படி சில ஊரில் இருந்த அனுபவம் வாய்ந்த முஸ்லிம் தலைவர்கள் ஆலோசனை வழங்கினர். அதன்படி நான் எனது அம்மாவுடன் அப்போது DRO வாக இருந்த **திரு.சந்திரபால** அவர்களிடம் சென்று (DRO அலுவலகம் பொல்கொல்லையில் இருந்தது) எனது நிலையை எடுத்துக் கூறினேன். அவர் சிறிது நேரம் யோசித்துவிட்டு ஒரு சில நாட்கள் கழித்து தன்னைச் சந்திக்கும் படி கூறினார். அதன்பின் சில நாட்களில் எனக்கு அழைப்பு வந்தது. நான் சென்றபோது அங்கு எமது கிராமசேவை அலுவலர் இருந்தார்.

என்னிடம் மீண்டும் பிரச்சினையைக்கேட்டறிந்துகொண்டார். கிராமசேவகரிடம் ஒரு கேள்வியைக் கேட்டார் இந்தப் பையன் உங்கள் கிராம சேவையாளர் பிரிவிற்குள் கடந்த ஆறு வருடங்கள் வசிப்பதாக கூறுகின்றார். இதனைப் பதிவின் மூலம் நிரூபிக்க முடியாதவனாக இருக்கின்றான். சரி! வேறு வகையில் இந்தப் பிரச்சினையை அணுகி இவனுக்கு இந்த அரச நியமனத்தைப் பெற நாம் உதவ முடியாதா என்றார். சிறிது நேரம் கழித்து, **உங்கள் கிராமத்தில் இருக்கும் கௌரவமான மூத்த பிரஜைகள் ஒரிவர், அந்தக் கிராம தபால் அதிபர், புகையிரத நிலைய அதிபர் ஆகியோரை அழைத்து ஒரு விசாரணையை மேற்கொள்வோம். அவர்கள் இவர் அங்கு வாழ்வதை உறுதிப்படுத்தினால் இவருக்கு வதிவிடச் சான்றிதழை வழங்குவோம்** என்றார்.

ஒரு சாதாரண மாணவனுக்காக சந்திரபால அவர்கள் எவ்வளவு யோசித்திருக்கிறார் என்று அப்பொழுது நான் புரிந்துகொண்டேன். அதன்படியே விசாரணைகள் நடைபெற்று எனக்கு வதிவிடச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இதற்காக முயற்சிசெய்த திரு. சந்திரபால ஒரு சிங்களவர். சாட்சியத்திற்றாகவந்தபுகையிரதநிலைய அதிபர் மற்றும் தபால் அதிபர் இருவரும் சிங்களவரே. அத்தோடு சாட்சிகூற வந்த கிராம மூத்தோர் இருவரும் முஸ்லிம்கள் ஆவர்.

12.05.2016 உதயன் செய்தியை வாசித்தபோது திரு. சந்திரபாலாவின் மனிதாபிமானத்தை மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ளவேண்டும் போல இருந்தது.

அதேவேளை செய்தியில் குறிப்பிடப்பட்ட நான்கு மாண வர்களுக்கும் ஏதாவது வழிபிறக் காதா என்ற ஆதங்கம் எழுந்தது. பொறுப்பான பதவி வகிப்பவர்கள் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட வகையில் பல்வேறு உதவிகளைச் செய்யமுடியும். ஒரு விடயத்தில் சாதாரணமாக இல்லை என்று கூறுவதற்கு பொறுப்பான பதவிவகிக்கத் தேவையில்லை. சாதாரண அலுவலக உதவியாளர் போதும்

# மொழிகளின் மூலம் தமிழ்மொழியே 5

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

**"சிற்பமாச் செந்நூல் பெற்ற சிறப்பினை ஓதுங்காலை**
**தற்பரன் கூடல்நாதன் தலைக்கலை அசைந்தவாறு**
**நற்றமிழ் வல்லாரெல்லாம் நலமுறக்கேட்டு நாணி**
**செற்றமும் உளத்தேகொண்டு செப்பினர் பலவு மன்றே"**

(பன்னிரு நூற்சாரம்)

படைப்புகளைச் செய்திட வல்லவன் மட்டுமல்ல அந்நோக்கில் பேசிடவும் வல்லவன், சொல்வலான் என்பதைப்பலவாறுமயன்விளக்கிக்கூறியபின்னர்-

"கல்வலான் சொல்லைக்கூறல் கலைநெறி முறையுமன்று
சொல்வலான் சொல்லைக்கூறல் சொன்நெறி முறையுமென்றார்
கல்வலான் அன்றியானும் சொல்வலான் என்றபோதே
பண்பெரும் புலவரெல்லாம் வாழ்த்தினார் புகழ்ந்தாரன்றே

மயனின் பதிலால் கிளர்ச்சியுற்ற புலவர்கள், ஆய்ந்து, அறிந்து வாழ்த்தினார்கள், புகழ்ந்தார்கள்.

இது பன்னிரு செந்நூல்களின் மேலதிக விளக்கமும் தொகுப்புமான பன்னிரு நூற் சாரத்தில் காணப்படுகிறது. இங்கு தற்பரன் கூடல் நாதன் என்பது நிலந்தருபாண்டியனை (மனு). வியப்பைத்தூண்டஇவ்விடத்தில்""அகத்தியம்"என்ற நூலை தமிழ்க்கழகத்தில் அரங்கேற்றிய அகத்திய மகாமுனிவரும் இம்மாமுனிவர் மயனாரின் பன்னிரு சீடர்களில் ஒருவர் என்பதை

**"அறுமுனி எனவுரைத்தோன் அவரவர் சீடர் நான்கே**
**உறுந்திறம் அறுநான்காக ஒப்பிலா நூல்கள் கண்டார்**
**குறுமுனி ஒத்த தன்மை பெருந்தவச் சீலர் ஆகி**
**அறுமுனி மார்க்கந்தன்னை அறியவும் அரியதாமே"**

எனக் கூறும் (வைசம்பாயனம் 151)


அறுமுனி- மயன், குறுமுனி -அகத்தியர், இதிலிருந்த அகத்திய முனிவர், மாமுனிவர் மயனாரின் சீடன் என்பது உள்ளங்கை நெல் லிக்கனி என விளக்குகிறது.

மயன் என்ற இளைய ஞானியின் முதிர்ந்த சீடர்கள் நாதன், ஆயன், மூலன், நூ லன், கீதன், போதன், வேதன், சீலன், தூயன், மாயன், நேயன், வேலன் ஆகிய பன்னிரு வர். ஆனால், குமரிக்கண்ட அழிவின்பின் தமிழ், வட மொழி காரணப்பெயர்கள் தாங்கியும் அல்லது வட மொழிப் பெயர்களாகத் திரிந்தும் தம் அடையாளங் களை இவர்கள் தொலைத்துவிட்டனர். திரிபுக் கதைகளும் முளைத்துவிட்டன.

ஞாலமுதன்மொழியான தமிழும் அது தோன்றிய நாவலந்தண்பொழில் (லெமூரியாக்கண் டம்) பல கடற்கோட்பட்டு சிதைவடைந்த காலை ஞாலமுதன் மொழி பேசிய தமிழர்களும் எங்கெங்கு குடியேறினர்? அவர்தம் வாழ்வும் கலையும், மொழி யும் எவ்வாறு திரிபுற்றன? அவர்கள் எவ் வெவ் இனக்குழுக்களாகத் மாறினர்? அவர்கள் விஞ் ஞான ரீதியாக கடைப்பிடித்த நெறி சிவநெறியா? முத்தமிழ் வேந்தர்களின் ஆதிப்பெயர்கள் எவை? அப்பெயர்கள் ஏற்படக் காரணங்கள் என்ன? அவர்கட்கு பின்னாளய பெயர்கள் ஏற்படக் காரணங்கள் எவை? அவர்கள் கட்டிய கோட்டைகள் எவ்வகையின? அவற்றையெல்லாம் மாற்றரசர்கள் எவ்வாறு அழிவடையச் செய்தனர்? அவர்களின் தாயகமாம் "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப் பின் நாற்பேரெல்லை" எனத் தொல்காப்பியம் இயம்பிடும் பழந்தமிழகத்திற்கு இயற்கை ஏவலின் வலிமையால் ஏற்பட்ட அழிவுகள் யாவை? சிற்பம், கட்டிடம், ஓவியம், இயல், இசை, நடனம், உழவுத் தொழில், வாணிபம், இயற்பியல், வேதியல், உயிரி யல், வானியல், கணிதம் ஆகிய கலை கள், தொழில்கள் யாவற்றிலும் தேர்ச்சி பெற்ற தோடு கால், கலம், வானவூர்தி ஆகிய நிலம், நீர், வானியங்கும் கருவிகளை அமைத்து அதிற் சஞ் சரிக்கும் பழக்கமுடையோராய் அக் காலத் தமிழர்கள் வாழ்ந்தார்களா?

இன்றைய உலகையே வியக்க வைக்கும் சாதனைகட்கு அவர்கள் சொந்தக் காரர்களா?






என்பனபற்றியெல்லாம்இவ்வறிமுகவுரையின்பின் வரும் அத்தியாயங்களில் ஆராய்வோம்.

**குமரிக்கண்டம் (பழந்தமிழகம்)**

நவீன காலத்தமிழறிஞர் எனப்படுவோர் தமிழர்களின் வரலாற்று வாழ்வியற் காலத்தின் முன்னெல்லையை பின்தள்ளுவதிலையே குறியாகவிருந்தனர். ஆய்வாளர்களின் ஆய்விலி ருந்த பெருங்குறைபாடு யாதெனின் தமிழ்மக்கள் தாம் தோன்றி வாழ்ந்த பெருநிலப்பரப்பை (நாவலந்தண்பொழில் - லெமூரியாக் கண்டம்) ஆய்வுக்கு எடுக்காமையே.

தமிழ் மக்கள் மற்றும் இந்திய துணைக் கண்ட மக்களின் நாகரிகம் மற்றும் வாழ்வியல் என்பன இருகால நிலைப்பட்டது. அதாவது பிரளய காலத்திற்கு முன் பிரளய காலத்தின் பின் என்பதாகும். இதற்குச் சான்றான சம்பவம் ஒன்றை இங்கு பேசிடுதல் உசிதமாகும் என நினைக்கிறேன்.

2004ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் நாள் சுமாத்திரா (சோமதுரை) தீவுக்கு அண்மையில் ஏற்பட்ட பலமான நில நடுக்கத்தின் விளைவாக இந்துப் பெருங்கடற் (மயேந்திரக்கடற்) பகுதி பலமாக ஆழிப்பேரலை (கடற்கோள்) யால் பாதிக்கப்பட்டது. பெருங்கட்டிடங்களையெல்லாம் அள்ளிச் சென்றது. ஆனால், கன்னியாகும ரிக்கருகே சிறுதீவுகளில் ஒன்றில் திருவள்ளு வரின் 133 அடி சிலையும், விவேகானந்தப் பாறையில் விவேகாந்தர் நினைவு மண்டபமும் அமைக்கப்பட்டிருந்தது. அவற்றின் ஸ்தபதி யான டாக்டர் கணபதி ஸ்தபதி அவர்களிடம் "குங்குமம்" சஞ்சிகையினர் கண்ட செவ்வி யில் ஆழிப்பேரலையால் திருவள்ளு வர் சிலையையும், விவேகானந்தர் மண்ட பத்தையும் ஏன் சுனாமியால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று கேள்வி எழுப்பினர்.

அதற்குச் ஸ்தபதி அவர்கள் அளித்தபதில் **"மயன் தொழில் நுட்பம்" தான்** (Mayan Technology) **காரணம்" என்றார். செவ்வியாளர் "மயன் ரெக்னோலொஜி" என்றால் என்ன? என்று விளக்கும் படி கேட்டார். அதற்குச் ஸ்தபதி தமிழரின் வரலாற்றில் கிறிஸ்து வுக்கு முன், பின் என்ற காலக் கணக்குகள் உப்புச் சப்பு இல்லாவிடயம் என்றும், பி.மு, பி.பி என்பதே அவர்களின் காலக்கணக்கு** என்றார்.


அதாவது பிரளயத்திற்கு முன்பின் என்பதே அது என்றார். பிரளயத்தின் முன் அதாவது பத்தாயிரம் வருடங்கட்கு முன்பு குமரிக்கண்டத்தில் மயன் என்ற பெருந்தச்சன் (Architect, Engineer and sculptor) தோன்றியிருந்தார். அவரது தொழில் நுட்பமே தமிழ்மரபு, அதுவே பின் இந்திய மரபாகி உலக மரபாகியது. அவர் மரபு வழிபட்டதே அஜந்தா, எல்லோரா குகை ஓவியங்கள் மற்றும் சிற்ப மரபுகள் எல்லாம் என்ற தோடு, அவரது தொழிநுட்ப அறிவின் பிரகாரம் திருவள்ளுவர் சிலை விவேகான்ந்த மண்டபம் என்பவை அமைக்கப்பட்டதாலேயே அவற்றை சுனாமியால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும் விளக்கிச் சொன்னார். எமது தொன்மரபை ஆய்வு செய்ய எவ்வாறான காலக்கண்ணாடி தேவை என்பதற்கு இஃ தோர் உதாரணம் என்பதற்கே இவ்விடத்தில் கூறினேன்.

(அடுத்த இதழில்தொடரும்....)



விஸ்வப்பிரம்மஸ்ரீ இரத்தினம்
அச்சுதபாகன் ஆச்சாரியார் B.A
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# மகாவம்சத்தின் நீட்சி — 2016





செல்வராசா

மகாவம்சம் சிங்கள மக்களின் வாழ்வியலுக்கான மூல நூல். **அனுராதபுரத்து மகா விகாரைப் பிக்குவான மகா நாமர் என்பவரால் கி.பி.06 ஆம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பட்டதே இந் நூல். கி.மு.06– கி.பி –06 வரையான காலப்பகுதி வரலாற்றை உள்ளடக்கியது.**

சிங்கள பௌத்த கலாசாரத்தின் பின்னணியில் அத்துறை சார்ந்தவர்கள் தொடர்ந்தும் இந் நூலின் பாகங்களை நீட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு இலங்கையில் ஆட்சிக்கு வருகின்ற எவரும் பச்சை விளக்கு காட்டியே ஆகவேண்டும்.

அந்தவகையில் கால நீடிப்புச் செய்த 05 புதிய நூல்களை 14.05.2016 இல் தெகிவளையில் உள்ள பௌத்த கலாசார மத்திய நிலையத்தில் வைத்து கோட், சூட் அணிந்த பேராசிரியர் விக்கிரமகே வழங்கியதை கோட், சூட் அணிந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொண்டது விநோதம்தான்.

ஒரு வகையில் அதனூடாக இன்னோர் செய்தியையும் கூறியிருக்கிறார்கள் என்று கருதமுடியும். அதாவது 21 ஆவது நூற்றாண்டு அரசியலில் சிங்களத் தலைவர்கள் எப்படி உடை அணிந்தால் என்ன, எத்தகைய நிலைக்குச் சென்றால் என்ன மகாவம்சம் என்ற தாய் நூலுக்கு எப்போதும் சிங்களவர் மத்தியில் உயர்வான ஆதரவு இருக்கும் என்பதே அச்செய்தி.

மகாவம்சத்தைச் சிங்கள மக்கள் கையில் வைத்திருக்கும் வரை இலங்கைத் தீவின் எதிரி யாகவே இந்தியா இருக்கமுடியும். அதுவும் தென்னிந்தியத் தமிழரின் அச்சுறுத்தல் என்ற விடயம் துருத்திக் காட்டப்படும்.

இதற்குத் தூபமிடும் வகையில் தென்னிந்தியாவின் மன்னர் காலத்திலிருந்து இன்றுவரை சிங்களவருக்கு எதிரான போக்கு இருந்து வருகிறது. அண்மையில்கூட தமிழக முதல்வர் இலங்கைத் தமிழருக்கான தீர்வு பற்றிக் கதைத்திருப்பது சிங்கள மக்கள் மகாவம்ச அடிப்படையில் சிந்திப்பதற்கு துண்டுவதாய் உள்ளது.

இப்போக்கில் மலையகத் தமிழர் பற்றியோ, முஸ்லிம்கள் பற்றியோ சிங்கள மக்களுக்கு அச்சம் இருக்கப்போவதில்லை. வடகிழக்குத் தமிழரே அதன் கவர்ச்சி மையமாக உள்ளனர். 1987 இல் இந்திய இராணுவம் இறக்கப்பட்டதையும், சிங்கள மக்கள் மறந்துவிடப்போவதில்லை. இந்தப் பின்னணியிலேயே சேதுகங்கைத் திட்டம், இராமர் அணையினூடாக வீதி இணைப்பு என்ற விடயங்கள் சிங்கள மக்களால் பார்க்கப்படும். இவை எல்லாமே கி.பி.06 ஆம் நூற்றாண்டில் மகாநாமரால் எழுதப்பட்ட சிந்தனைகள் உயிர்த்துடிப்புடன் பேணப்பட்டு வருகின்றன. மற்றவர்களால் மகாவம்சம் பிழை என்று கூறப்பட்டாலும் சிங்கள மக்களைப் பொறுத்தவரை அது சரியாகவே உள்ளது. மகாநாமர் ஒரு தீர்க்கதரிசியாக அவர்கள் மத்தியில்

**அனுராதபுர தலைநகரை அழித்த சோழர்கள் தமது தலைநகராக பொலநறுவையை அமைத்துக் கொண்டதையும், அங்கு அவர்கள் அமைத்த சிவன்கோயிலையும், இந்து அடையாளங்களையும் சிங்கள மக்கள் சென்று பார்ப்பது என்பது எப்போதோ தமிழர்களால் துரத்தப்பட்டோம் இனியும் துரத்தப்படாதிருக்க நாம் கவமாக இருக்கவேண்டும் என்ற செய்தி அதில் பூடகமாக மறைந்துள்ளது.**

கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் பொலநறுவை வரை வந்த தமி ழர் தமிழீழம் ஒன்றை அமைத்தால் எங்களின் நிலை என்னவென்று சிந்திக்க வைப்பதிலேயே பௌத்த பிக்குகளும், சிங்களத் தலைவர்களும் கவனமாக உள்ளனர் என்பதற்கு இந்த மகாவம்ச நீட்சி காரணமாய் அமைந்துள்ளது.

தமிழர்கள் தமிழீழம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி சிங்கள மக்களை படிப்படியாக அழிப்பார்கள் என்ற கருத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் சிங்கள இராணுவம், சிங்களப் பொதுமக்கள் புலிகளால் கொல்லப்பட்டது, கொழும்பு வரை விமானத்தில் சென்ற குண்டு வீசியது போன்ற சம்பவங்கள் என்பன சிங்கள மக்களுக்கு இருந்த அச்சுறுத்தலாகும்.

அனுராதபுரம் புனித வெள்ளரசு மரக்கிளை மீதான புலிகளின் தாக்குதல், தலதாமாளிகை மீதான தாக்குதல் பொலநறுவை சோமாவதி விகாரைக்கு சிங்கள மக்கள் செல்லமுடியாமல் இருந்தமை மற்றும் சேருவில மற்றும் லங்காபட்டுன (இலங்கைத் துறை முகத்துவாரம்) பகுதிகள் திரியாய் பன்சல போன்ற பகுதிகள் கைவிடப்பட்டமை என்பன மகாவம்சத்தின் உண்மைத் தன்மையை சிங்கள மக்களுக்கு உணர்த்தியது.

இத்தகைய 30 ஆண்டுகாலமாக சிங்கள மக்களுக்கு இருந்த நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வந்தவர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷ (நவீன துட்டகைமுனு) என இந்நூலில் வர்ணிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**சிங்கள மக்கள் தமது முதல் இராசதானியான அனுராதபுரத்தை இல்லாது செய்த சோழர் வணங்கிய சிவன் தெய்வத்தை வணங்குவதில்லை ஆனால், சிவபெருமானின் புதல்வர்களான முருகன் (கந்தரகம தெய்யோ– கதிர்காமக் கடவுள்) பிள்ளையார் (கண தெய்யோ) ஆகியோரை வழிபட்டும் வருகின்றனர் என்ற உண்மையை யாரும் புரிந்துகொள்வதில்லை.**

சிங்களவரின் எதிரி சோழர், சிவபெருமான் என்பதில் மாற்றம் வருவதானால் மகாவம்சம் அவர்கள் மத்தியிலிருந்து மங்கிப்போகவேண்டும் அதற்கான வாய்ப்புக்கள் எதுவும் பௌத்த வழிநடத்தலில் இதுவரை தென்படவில்லை. ●




# தற்கொலை தவிர்க்கக்கூடியதே

ப.தர்சிகா,
மெய்யியல்துறை,
3ஆம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

மொட்டாகி, அரும்பாகி, மலராவது தான் வாழ்க்கை. இப்படி உருவாக்கம் பெற்ற வாழ்க்கையை யாராலும் அழித்துவிட முடியாது. ஐந்தறிவு கொண்ட ஜீவன் தொடக்கம் ஆறறிவு கொண்ட மானுடன் வரை எல்லோருமே வாழத்தான் ஆசைப்படுகிறார்கள். ஆனாலும் நம்மில் பலருக்கு தற்கொலை நோய் எப்படி வந்தது? தற்கொலைக்கு வழி வகுக்கும் காரணிகளாக காதலில் தோல்வி, மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுவது, கடன் தொல்லை, வறுமை, மனநோய், பரீட்சையிற் தோல்வி, திடீர் கோபம், தீராத வியாதி, வேலையின்மை போன்ற காரணிகளைக் குறிப்பிடலாம்.

இதில் காதல் முறிவுகள் முன்னிலை வகிக்கின்றன. மேலைத்தேயப் பண்பாட்டுப் கலாசார அடிப்படையில் காதல் திருமணம் செய்ய இங்குள்ள இளம் உள்ளங்கள் முயற்சிக்கையில், இனம், மொழி, கலாசாரப் பிரதேசம் போன்றன தடையாக அமைவதால் திருமணம் செய்ய முடியாத நிலையில் இளந் தலைமுறையினர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர்.

**அதிகரித்த தனிமை, ஒதுக்கப்பட்ட நிலை யாரும் தம்மை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற மனத்தாக்கம், யாரும் தன்னை விளங்கிக்கொள்ளவில்லை என்ற நிலை இவை தவிர்க்கக்கூடியவை. இதனால் தற்கொலையைப் பெருமளவு தவிர்க்கமுடியும்.** தற்கொலை என்ற விடயத்தில் ஒரு வர்க்கம் அல்லது சாதி பொருளாதாரம், இனம், மதம் ஒரு-வரது சமூகத்தில் வகிபாகம் எல்லாவற்றையும் மீறியதாக ஒரு தனி மனிதனின் மனநிலையில் ஏற்படும் மாற்றம் தற்கொலைக்கு வழிவகுக்கிறது.

இனி இழப்பதற்கு என்ன இருக்கிறது என்ற நிலையில் அவர்களின் உயிர்மட்டும்தான் என்று நினைக்கும்போது அதையும் இழக்கத் தயாராகுகின்றனர்.

சிக்மன் பிறைட் என்ற உளவியலாளரின் கருத்தின்படி **"சமவயதுக் குழுக்கள் இளமைப் பருவத்தில் கூடுதல் தொடர்பு வைத்திருப்பர். இவற்றில் தலையீடு ஏற்படும்போது மாற்று நடவடிக்கைகளுக்கு தூண்டப்படுகின்றனர். இதன் விளைவே தற்கொலை முயற்சியாகும்** என்கிறார்.

தற்கொலை பொருளாதாரம் கல்விப் பின்னணிப் பிரச்சினைகள் காரணமாக இன்று அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வெகுவாக பரவி வருகின்றது. உலகில் ஒரு வருடத்திற்கு 10,00,000 பேர் வரையான மக்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

**3 செக்கனுக்கு ஒரு தடவை தற்கொலை முயற்சி இடம்பெறுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை சராசரி தற்கொலை வீதம் 1,00,000 குடிசனத் தொகைக்கு 55 இற்கும் மேற்பட்டதாக கணிக்கப்படுகின்றது. இத்தற்கொலையானது உலகில் காணப்படும் இறப்புக்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை ஒன்பதாவது இடத்தில் காணப்படுகின்றது.** ஒரு சிறிய நாடான இலங்கையில் இது ஓர் அதிகரித்த நிகழ்தகவாகவே காணப்படுகின்றது.



2009 இன் பின் இறுதி யுத்தகாலத்தில் ஏற்பட்ட இழப்புக்களின் பின்னணியில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக பலர் தற்கொலை செய்துள்ளனர். யாழ். போதனா வைத்தியசாலை புள்ளிவிபரப் பிரிவின் தரவுகளின்படி பார்த்தால் தற்கொலைக்கு முயற்சித்தவர்களின் விபரம் :

2007 - 443
2008 - 437
2009 - 593
2010 - 701
2011 - 681
2012 - 710
2013 - 714
2014- 640
2015- 588 எனக் காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு காலப்பகுதியைவிட 2010ஆம் ஆண்டின் பின்பான காலப்பகுதியில் தற்கொலை செய்ய முயன்றவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருந்துள்ளன.

1970 - 1977 காலப்பகுதியில் இளைஞர், யுவதிகள் கிருமிநாசினிகளை அருந்தி இறந்தார்கள். இக்காலங்களில் விவசாயம் செழித்திருந்த காலம் என்பதால் தற்கொலைக்கான கருவியாக நச்சுமருந்துகள் பயன்படுத்தப்பட்டன. **தற்போது தூக்கில் தொங்கி அதுவும் மின்விசிறியில் தொங்கிச் சாவது, தமிழ்த் திரைப்படங்களின் மூலமும், தொலைக்காட்சி நாடகங்கள் மூலமும் பெறப்பட்ட அனுபவமாகும்.** முன்பு கடிதம் எழுதி வைத்துவிட்டு சாவது என்பது மாறி, தற்போது முகநூலில் விசிறிவிட்டுச் சாகின்றனர். அண்மைக்காலத்தில் புகையிரதத்தில் பாய்ந்து இறப்பவர்களின் தொகை ஏனைய தற்கொலை மார்க்கங்களை விட அதிகமாகவே காணப்படுகின்றது.

**கைத்தொலைபேசியின் பாவனை காரணமாக ஒரு செய்தி கிடைத்ததும் ஆத்திரப்பட்டுக் கதைப்பது, சண்டை பிடிப்பது, வாழ்க்கை முடிந்து விட்டது என நினைப்பது போன்ற பக்கவிளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது. ஓர் இளைஞர் மட்டக்களப்பு வீதியில் வானொன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது அவனது காதலியிடம் இருந்து வந்த தொலைபேசி அழைப்பொன்றில் ஆத்திரப்பட்டு வேகமாக ஓடிக்கொண்டிருந்த வானிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டான்.** இவ்வாறு உணர்ச்சிவசப்பட்டு ஒரு கணத்தில் வாழ்க்கையை முடித்துக்கொள்வோர் அதிகமுள்ளனர்.

இவ்வாறானவர்கள் காப்பாற்றப்பட்டதன் பின்னர் அதிர்ந்துபோய் இருக்கின்றனர். நாம் ஏன் இந்த வாழ்க்கையை அழிக்க முயற்சித்தோம் என்று ஏங்குகின்றனர். சிலர் தம்மை உணர்ந்த பின்பும்கூட தற்கொலைக்கு முயன்றமார்க்கம் கனதியானது என்பதால் வைத்தியர்களால் காப்பாற்ற முடியாமல் இறந்து விடுகின்றனர்.

இஸ்லாத்தில் தற்கொலை செய்வது பாவமானது என்ற கருத்து இறுக்கமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. மார்க்க ரீதியாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது போன்ற மாற்று வழிகள் கண்டுபிடிக்கப்படல் வேண்டும். வாழ்வதற்கான மாற்றுத்திட்டம் ஒன்று இல்லாத பட்சத்தில் அல்லது ஒருவர் தனக்கிருக்கும் பிரச்சினையை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளாத நிலையில் தனது பிரச்சினையின் ஆழம், அதிலிருந்து எவ்வாறு விடுபடுவது என்பதை தெரியாமலே இருந்து விடுகின்றனர்.

மாற்றுத் திட்டம் இல்லாதவர்கள் தமது வாழ்க்கையைதாமாகவே முடித்துக்கொள்கின்றனர். அவமானம் தாங்கமுடியாமலும் தற்கொலை முயற்சியை ஒரு தீர்வாக சிலர் கண்டுபிடிக்கின்றனர். பல தற்கொலைகள் மிகவும் நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதும் உண்டு.

**ஒரு தாயார் தனது மகள் காதலித்துத் திருமணம் செய்யவிருப்பவர், தனது மகளுக்கு உகந்தவர் அல்ல என்பதை பல தடவை மகளுடன் விவாதித்த போதிலும், மகள் அதற்கு இணங்காத நிலையில் தாயார் கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்வது என்று முடிவெடுத்து சேலை உடுத்திருந்த நிலையில் தனது இரு கால்களிலும் சேலையைச் சேர்த்து கயிற்றால் இறுகக்கட்டி தான் இறந்த நிலையில் சேலை அவிழ்ந்து அசிங்கமாக இருக்கக்கூடாது என்பதை எல்லாம் நன்கு திட்டமிட்டு தற்கொலை செய்திருந்தார்.**

இவ்வாறான மனப்பிரச்சினை உள்ளவர்கள் மற்றவர்களுடன் மனம் விட்டுப்பேசும் நிலைமையை மீண்டும் உருவாக்க வேண்டும். இதன் மூலம் தான் ஒருவரது மனதையும், அவர்களது பிரச்சினைகளையும் புரிந்துகொள்ள முடியும்.

(தொடர்ச்சி 26 ஆம் பக்கம்)

# ஒலிமாசாக்கலும் உடல், உள பாதிப்புக்களும்

இன்று சுற்றாடல் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒலி மாசாக்கமும் ஒன்றாகும். நிலம், நீர், வளி மாசடைதல் என்ற வரிசையில் ஒலி மாசு அல்லது இரைச்சலும் (noise) மனித சுற்றுச்சூழல் தரத்தை பாதிக்கின்ற ஒரு காரணியாக உள்ளது.

மனிதக் காதினால் குறித்தளவிலான ஒலியை மட்டுமே தாங்கமுடியும். எம்மால் அசௌகரியமின்றி தாங்கக்கூடிய ஒலியை அனுபவித்தலினால் மட்டுமே உடல்உள ஆரோக்கியத்துடன் வாழமுடியும். ஒலியின் அளவை அளக்க டெசிபல் (dB) என்ற அலகு பயன்படுத்தப்படுகின்றது. 1 dB என்பது மனித காதினால் கேட்கமுடியாத மெல்லிய ஒலி அல்லது 1 dB ஒலியை கேட்பதற்குரிய அமைதியான இடம் / சூழல் இல்லை எனலாம். மனிதக் காதினால் 2/3 dB – 130 dB வரையான ஒலியை கேட்க முடியம். ஆனால் 110 dB ஒலி மனிதனில் அசௌகரியத்தை ஏற்படுத்தும் 130 dB ஒலி காதுளில் வலியை (pain) ஏற்படுத்தும்


WHo இன் அறிக்கையானது மனித காதுகளால் பகலில் தாங்கக்கூடிய ஒலியின் அளவை 45 dB எனவும் இரவில் தாங்கக்கூடிய ஒலியின் அளவை 35 dBஎனவும் நிர்ணயிக்கின்றது. 45 dB இற்கு மேற்பட்ட ஒலி யின் அளவு இரைச்சல் (noise pollution) என கருதப்படுகின்றது.

இன்றைய மனிதன் வீடுகள், வீதிகள், அலுவலகம், தொழிற்சாலைகளென இரைச்சல் நிறைந்த சூழலின் உரப்பு மிகு ஒலியலைகளின் வலிமையான மோதுகளை வாங்கி அமைதியே அற்று வாழவேண்டிய நிற்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான்.

வீடுகளில் ரேடியோ, தொலைக்காட்சிகளை high volume இல் கேட்கும்போது ஒலிமாசு இரைச்சலினால் அவ்வீட்டிலுள்ளோர் மட்டுமன்றி சுற்றாடலில் உள்ள அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். முச்சக்கரவண்டியில் அதிகம் சத்தமாக பாட்டுப் போடுகிறார்கள். அலுவலகங்களில் தொலைபேசி, Fax, photo copier, மின் விசிறிகள், என்ஜின்களினால் ஒலிமாசாக்கத்திற்கு உட்படுகின்றனர். அவ்வாறே தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் 80 dB - 105 dB ஒலி இரைச்சலுக்கு நாள் முழுவதும் தாக்குப்பிடிக்கவேண்டிய நிலையிலுள்ளனர்.

பெருந்தெருக்கள், புகையிரத வீதிகளுக்கு அண்மையில் வசிப்போர் அதிக உரப்புடைய **ஒலிமாசினால் உடல் உளத்தாக்கங்களுக்கு உள்ளாவதாக ஆய்வுகள் கூறுகின்றன.** அதாவது தூக்கமின்மை, மன உழைச்சல், பயம், வெறுப்பு, கோபம், சோர்வு போன்ற பாதிப்புக்களும் மாணவர்களின் ஆக்கத்திறன் குறைவடைதல், மனக்குழப்பம் (tension) மன ஒருமைப்பாடு - (Concenration) குறைவு / இன்மை, அமைதியின்மை, சலிப்பு போன்ற உளரீதியான தாக்கங்களுக்கு உள்ளாவதாக கூறப்படுகின்றது.

**திருமதி.கோமளரஞ்சிதம் கந்தவேள்**
**ஆசிரியர்**
**யாழ்.இராமநாதன் கல்லூரி**



**"இனிவரும் நாட்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை என்பன நடைபெற இருப்பதால் கோயில்களிலும், ஏனைய நிகழ்வுகளிலும் ஒலிபெருக் கியை சத்தமாக பாவிப்பதைக் குறைக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன். ஆனால் யாழ்ப்பாணத்து "படித்தவர்கள்" அவ்வாறு செய்யாதது சட்டத்தை மதிக்காத விடயமென அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.**

உரப்பு கூடிய, அலைநீளம் குறைந்த (140HZ) ஒலியை நீண்டநேரம் அனுபவிப்பதனால், மனிதனில் அகஞ்சுரக்கும் தொகுதி பாதிப்புக்குள்ளாவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. ஒக்சிரோசின் (oxytocin) தூண்டப்பட்டு கருச்சிதைவு ஏற்படுதல், அதிரினலின், நேரதினலின் சிறுநீரில்அதிகரித்தல்என்பவற்றுடன்குருதியுக்கம் குறைதல், குடற்புண் போன்ற உபாதைகளும் ஏற்படுவதாக கண்டுபிடித்துள்ளனர்.

**கோயில்கள், களியாட்டங்களில் ஒலிபெருக்கிகளினால் (loud speaker) உண்டாகும் (60dB – 90 dB) ஒலிமாசினால் (noise pollution) கேட்டற்திறன் பாதிப்படையும். அதாவது செவிப்பறை மென்சவ்வு, செவிச்சிற்றென்புகள் பாதிப்படைவதால் தலைச்சுற்று, காதினுள் இரைச்சல் தற்காலிக செவிட்டுத்தன்மை என்பனவும் நீண்டகாலத்தில் நிரந்தர செவிட்டுத்தன்மை ஏற்படவும் வழிவகுக்கின்றது.** மனிதனின் தேவைகள் அதிகரித்து செல்கின்றது. புதிய கண்டுபிடிப்புக்கள், பழையவை அகற்றல், புதிய கருவிகளின் கையாட்சி என மனிதன் இயற்கையை மறந்து, சூழலுக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளின் மூலம் மனிதனின் ஆரோக்கியமான நிலவுகைக்கு தானே சவால்களை ஏற்படுத்துபவனாகியுள்ளான். ஒவ்வொருவரும் சூழல் நேயமான நடவடிக்கைகளில் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் மாசு பற்றிய விழிப்புணர்வு ஏற்படவேண்டும்.

ஒலிமாசினால் ஏற்படும் பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டு களியாட்டங்கள், வாகனங்களின் கோண் (horns) ஒலிபெருக்கிகளின் ஒலி அளவுகள் மட்டுப்படுத்தப்பட்டு, சூழல்நேய (Echo friendly) வாழ்க்கைத்தரத்தைப் பேண மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வோம். இறுக்கமான சட்டங்களை அமுல்ப்படுத்தி நடைமுறைப்படுத்தலால் ஒலி மாசின் தாக்கத்தினை குறைக்க முடியும்.

மக்கள் குடியிருப்புக்கள் செறிந்துள்ள இடங்களில் இருந்து ஒலி, வளி மாசை ஏற்படுத்துகின்ற அரைக்கும் ஆலைகள் (mill) வாகனம் திருத்துமிடங்கள், தொழிற்சாலைகள் என்பன தவிர்க்கப்பட இறுக்கமான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுமிடத்து ஒலிமாசைக் குறைக்கலாம்.

தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் திறன் மிகு நிலையில் பேணப்படும் பட்சத்தில் பாகங்கள் தேய்வடைதல், சக்தி இழப்பு என்பன - தவிர்க்கப்படுவதுடன் தொழிலாளர் நலனையும் பேண முடியும். **பிரதான வீதிகள், புகையிரத வீதிகளின் இருபக்கங்களிலும் சவுக்கு, புளியமரம், வேப்பமரம், மலைவேம்பு, அசோகமரம் போன்றவற்றை நெருக்கமாக நடுவதன் மூலம் ஒலிமாசைக் குறைக்க முடியும்.**

மிக மோசமான இரைச்சலுள்ள இடங்களில் double glazing window பொருத்துதலின் மூலம் அலுவலகங்கள், வீடுகளை வெளி இரைச்சலிலிருந்து பாதுகாக்க முடியும்.

மேலைத்தேய நாடுகளில் noise pollution தவிர்க்க பல்வேறு வகையான மிக இறுக்கமான சூழல் காப்புச் சட்டங்களும் நடைமுறைகளும் வெற்றியளித்துள்ளன. எனவே **ஒவ்வொரு தனி மனிதனும் பொறுப்புடன் நடந்து கொள்வதன் மூலம் எம்மையும் எமது சூழலையும் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு நல்லதோர் சூழலைக் கையளித்து நிம்மதியாக விடைபெற முடியும்.**

## றிசாட் பதியுதீன்

(18ம் பக்கத் தொடர்ச்சி...)

ஆசாத்சாலி போன்ற தலைவர்கள் இலங்கையின் பெரும்பான்மைக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகிவற்றுடன் இணைந்து செயற்பட்டனர்.

இதில் ராசிக் பரீட், ஜாயா, போன்றவர்கள் இலங்கை தேசியத்தின் தலைவர்களாக மதிக்கப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தில் இருந்து எழுச்சிபெற்ற எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களின் அரசியலை ஒத்த அரசியல் போக்கினை வடக்கில் உருவாக்கியவர் றிசாட்.

அஸ்ரப். கிழக்கு முஸ்லிம் மக்களின் பெருக்கத்திற்கு ஏற்றவாறு அம்பாறையில் தீகவாவி புனித பிரதேசத்தில் காணிகளைப் பிடித்தார் என்ற குற்றச்சாட்டும், வில்பத்து வன சரணாலயப் பகுதியில் காணிபிடித்தார் என்ற குற்றச்சாட்டு றிசாட் மீதும் தொடுக்கப்பட்டது.

**இவர்கள் தமது மக்களின் பிரச்சினை என்று வரும்போது துணிந்து குரல் கொடுத்தார்கள். எதற்கும் மௌனமாக இருந்து விடுவதை அவர்கள் இராஜதந்திரம் என்று, ஒருபோதும் நினைத்ததில்லை.** அஸ்ரப்தீகவாபி பிரச்சினை விடயத்தில் ரி.என்.எல். தொலைக்காட்சியில் சோமிஹிமி தேரருடன் பகிரங்க விவாதத்திற்குச் சென்றிருந்தார். அதேபோல ஹிரு தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் றிசாட் ஆனந்த தேரருடன் விவாதித்திருந்தார். இந்தத் துணிவு ஏனைய பல அரசியல்வாதிகளுக்கு இருந்ததில்லை. **முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டமொன்றில் றிசாட் முஸ்லிம் மக்கள் மீளக்குடியேறிய பின்பும் வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை** எனவும் அந்த விடயத்தில் "நல்லூர் பிரதேச செயலர் திருமதி தே.சுகுணரதி வேண்டுமென்றே தவிர்த்திருக்கிறார்" எனவும் குற்றம் சாட்டியிருந்தார்.

பிரதேச செயலர் "அவர்களுக்கு சொந்தக் காணியில்லை" எனவும் வேறு விடயங்களையும் சுட்டிக்காட்டியிருந்தார். இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், **மீள்குடியேற்ற நடைமுறை என்ன வென்று தெரியாமல் அமைச்சர் றிசாட் அவ்வாறு பேசவில்லை. "தமது மக்கள் வீடின்றிக் கஷ்டப்படுகின்றார்கள்"** என்ற செய்தியை அச்சபையோர் முன்நிலையில் **ஜனாதிபதிக்கு சமர்ப்பித்தார் என்பதே உண்மை.**

2001 ஆம் ஆண்டு முதற் தடவையாகப் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான றிசாட், 2004, 2010, 2015 ஆகிய சகல தேர்தல்களிலும் வெற்றி பெற்றது மட்டுமல்லாமல், அதனூடாக கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சராக பதவியேற்று முஸ்லிம்களுக்கு அதிக வேலைவாய்ப்பையும், ஏனைய வசதிகளையும்பெற்றுக்கொடுத்தார். குறிப்பாக மன்னார் மாவட்ட மீள்குடியேற்ற விடயத்தில் அவர் தனது இலக்கை அடைந்திருந்தார்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும், முக்கிய அமைச்சுப் பகுதிகளில் இடம்பெற்றார்கள். **பதியுதீன் முகமட், கல்வி அமைச்சராக இருந்தபோது முஸ்லிம் இளைஞர் யுவதிகளுக்கு ஆசிரிய சேவையில் அதிக இடத்தைப் பெற்றுக் கொடுத்தார். எம்.எச்.எம். அஷ்ரப் கப்பற்துறை அமைச்சராக இருந்த போது பல முஸ்லிம்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்ததுடன், கிழக்கு மாகாணத்தில் ஒலுவில் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்தார். ஏ.சி.எஸ்.ஹமீட் வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது அதிகம் முஸ்லிம் இளைஞர்களை வெளிநாடுகளுக்குச் சென்று வைத்தியத்துறையில் படிக்கவும், ஜப்பான் நாடுகளில் வேலைவாய்ப்புக்களைப் பெறவும், ஜப்பானிய வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கும் வாய்ப்புக்களைஏற்படுத்திக் கொடுத்தார்.** ஓர் இனம் தனது பெருக்கம், உழைப்பு, கல்வி, அரசியல் இஸ்திரப்பாடு, பேரம்பேசும் ஆற்றல் என்பவற்றை அடைவதற்கு கடின உழைப்பு அவசியமாகிறது. அந்த உழைப்பு ஒரு முனைப்புள்ள இனமான முஸ்லிம்களிடம் அதிகம் உண்டு. அதற்கேற்றவாறு அவர்களின் அரசியல் தலைவர்கள் தமது பாராளுமன்ற காலப்பகுதிக்குள் தாம் ஆற்ற வேண்டிய முக்கிய பணிகளை இரவு பகல் பாராது நிறைவேற்றி விடுகின்றனர். இதற்குப் பிரதான காரணம் அவர்கள் எப்பொழுதும் ஆளும் கட்சியுடன் இணைந்திருப்பதே.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்து அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்று மீண்டும் இலங்கைக்கு வந்த பசில் ராஜபக்ஷ மீண்டும் பாராளுமன்றத்திற்கு சென்றபோது அவரைக் கைலாகு கொடுத்து வரவேற்றவர் றிசாட் பதியுதீன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு விடயத்தில் அதிகம் விவாதிக்காமல் விடயத்திற்கு சென்று விடுகின்றனர். இத்தகைய ஒரு பின்னணியில் தான் றிசாட் வடக்கின் பொருளாதார மத்திய நிலையத்தை மதவாச்சிக்கு கொண்டுபோக சதி செய்கிறார் என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பகிரங்கமாக குற்றம்சாட்டியிருந்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஓமந்தையா? தாண்டிக்குளமா? என இழுபடும்போது அந்த வாய்ப்புக்களை மற்றவர்கள் மாற்றி எடுப்பது மிகச் சாதாரண விடயமே. அவர்கள் தமது இனத்தின் எதிர்காலம்பற்றிப் பூரண விளக்கத்துடன் இருப்பதே இதற்கான காரணமாகும். முஸ்லிம் தலைவர்கள் கடந்த காலத்தில் தமக்குஏற்பட்டபாதிப்புக்களிலிருந்து மீளுவது மற்றும் எதிர்காலத்தில் தம்மைநோக்கி எத்தகைய பிரச்சினைகள் வரக்கூடும் என்பதை முன்னுணர்ந்து அதற்கேற்ப முடிவுகளை எடுப்பது என்பன அவர்களை மற்ற இனங்கள் விமர்சித்தாலும் அவர்கள் தமது இனத்துக்கு சேவை செய்தார்கள் என்பதே உண்மை.

இந்த இழுபறி நிலையில் வடக்கின் பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையில் அமைக்கப்பட்டாலும் றிசாட் இன்னோர் மத்திய நிலையத்தை மதவாச்சியில் நிர்மாணிக்கும் வல்லமை உள்ளவர் என்பதையும் மறுப்பதற்கில்லை. அவர் தற்போதிருக்கும் வர்த்தக வாணிப அமைச்சு இந்த விடயத்தில் மிகவும் சாதகமாக இருக்கும்.

இவ்வாறு மதவாச்சியில் ஒரு பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதன்மூலம் வடமாகாணத்துக்குள் அச்செயற்பாட்டைத் தவிர்ப்பதுடன், **மன்னார், முல்லைத்தீவு, கெப்பிட்டிக்கொல்லாவ, பதவியா, வெலிஓயா வரையான பகுதிகளை இணைத்து ஓர் முக்கிய மையமாக அது வளர்ச்சியடைய நிறையவே வாய்ப்புக்கள் உண்டு. தமது கொள்வனவுப் பொருட்களை மதவாச்சியில் வைத்து மாற்றவும், தென்பகுதி வர்த்தகர்களை வவுனியாவுக்கு வரவிடாது தடுக்கவும் இம் மையம் உதவும்.**

அதைவிட அந்த மையம் வடமாகாணத்துக்குள் அடங்காதிருப்பதும் சிங்கள, முஸ்லிம் வர்த்தகர்களின் கையில் பலமாக இருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இதனால் தமிழ் வர்த்தகர்கள் புறக்கணிக்கப்பட வாய்ப்புண்டு.

தற்போதைய நிலையில் வடக்கின் உற்பத்திப் பொருட்களை அதிகம் கொள்வனவு செய்பவர்கள் முஸ்லிம் வர்த்தகர்களே. இந்த வர்த்தகத்திற்கு படி (badi) எனப்படும் சிறிய ரக வாகனங்களும் அந்தந்தப் பிரதேசங்களில் காணப்படும் பள்ளிவாசல்களும் காத்திரமான பங்கை ஆற்றி வருகின்றன.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியுடன் தமிழர் பக்கத்திலிருந்து முஸ்லிம்களுக்கு இருந்த அச்சுறுத்தல் இல்லாது போய் விட்டது. பொதுபலசேனா போன்ற அமைப்புகளின் மிரட்டல் மட்டுமே தற்போதைக்கு இருக்கும் அச்சுறுத்தலாகும். அதற்கெதிராக முஸ்லிம் மக்கள் வன்முறையில் இறங்க அரசியற் தலைவர்கள் விடப்போவதில்லை. வன்முறையைத் தூண்டாது துஆ கேளுங்கள் என்று மட்டுமே முஸ்லிம் மக்கள் வழிப்படுத்தப்படுவர். றிசாட்டின் அரசியலைத் தீர்மானிப்பது முஸ்லிம் மக்களின் வாக்குகள் என்பதனால், அவரது தொடர் சேவையினை முஸ்லிம் மக்களுக்காக ஆற்றவேண்டிய கடப்பாடும் அவருக்குண்டு.

அரசியல் பலம், பொருளாதார பலம், கல்விப்பலம் என எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டதற்கு தமது வாக்குகளை தந்திரமாக ஆளும் கட்சிகளுக்கு வழங்கியதே காரணம் எனலாம். ஒரு வகையில் வடபகுதி முஸ்லிம்களின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் விடுதலைப்புலிகள் என்றால் அதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. 25 ஆண்டு காலப்பகுதிக்குள் அவர்கள் தம்மை மீள்உருவாக்கம் செய்துகொண்டார்கள். அவர்கள் தாம் பெற்ற பட்டறிவை படிப்பினையாக்கி கொண்டார்கள். இந்த விடயத்தில் றிசாட் என்கின்ற தனிமனிதனின் ஆளுமை என்பது மிகவும் வல்லமை பொருந்திய தாக இருந்து வருகிறது.

### 971

யாழ்ப்பாணத்தில் 31 நலன்புரி நிலையங்களில் வாழும் 971 குடும்பங்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபா செலவில் விரைவில் வீடுகள்என அமைச்சர் D.M.சுவாமிநாதன் அறிவித்துள்ளார்.

1. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள்.
2. நீண்டகாலம் முகாமில் இருப்பவர்கள்.
3. காணாமற்போனோரின் உறவுகள்
4. குடிசைகளில் வாழ்வோர் ஆகியோருக்கே முன்னுரிமை.


CAPS
Kids computer Programme
MS Office, Photoshop, Pagemaker,
Corel draw & Indesign
Duration - 30 Hours Classes
Thirunelvely Junction
(near Sampath Bank)
077 386 7458
021 205 2262


Hari Bol
GUEST HOUSE
ආගන්තුක නිවාසය
HARI BOL GUEST HOUSE
MARUTHANARMADAM CHUNNAKAM
• Rooms Available
• A/C & Non A/C
• Wifi
• Parking
Wifi
• Wedding House
• Travel & Tourism
• Luxury Family Rooms
• 24 hrs Security.
No.342, K.K.S Road, Maruthanarmadam.
Chunnakam.
Tel: 0779144520, 021 3212863


தேனு
களஞ்சியம்
29, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இலக்கம்:
021 222 6013


Kabil
Studio & Video
No 749, Palaly Road, Thirunelvely. | 021 568 6187, 077 600 2364


iBuy
COMPUTER
talking you forward
Laptop & Desktop computer Sales,
Computer repairing
Networking
Security Camera installation
Software Development
iBuy
COMPUTER
talking you forward
75/10, Front Lane,
Palaly Road,
Thirunelvely.

# சிவகாமி மஹால்

திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா,
ஒன்றுகூடல்கள், ஏனைய பொது நிகழ்வுகள்

நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட மண்டப வசதி





Online Booking: www.shivahamimahal.com

Adiyapatham Road, Thirunelvely.
T.P: 021 205 2288
Mobile: 077 932 6147
email:sivakaamymakal@gmail.com

# GNANASAMBANDHAR ILLAM

A HOME FOR THE AFFECTED NEEDY CHILDREN

## A Drama for Pre - School Kids

## 'HUMANITY' & 'PANCHAVARNA NARIYAR'




அவுஸ்திரேலியா மைக்கோவா பல்கலைக்கழக தமிழ்ச் சங்க ஆதரவுடன் நாடக சங்கமம்

**Sponsored By: Tamil Sangam, Macquarie University, Australia.**